# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32+4

சுடர் 32 | கதிர் 60 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 12, புதன்கிழமை 25.01.2017







## றோ, சி.ஐ.ஏ. ஆகியவற்றால் மகிந்தவுக்கு உயிர் ஆபத்து

கம்மன்பில பரபரப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 25
இந்தியாவின் புலனாய்வு அமைப்பான 'றோ' மற்றும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. ஆகியவற்றினால் >> 29

ஊர்காவற்றுறையில் நேற்றுப் பயங்கரம்

# கர்ப்பிணிப் பெண் கொடூரக் கொலை

- வீட்டில் தனித்திருந்த சமயம் சம்பவம்
- சகோதரர்கள் இருவர் உடன் கைது
- மக்கள் கொந்தளிப்பு; அதனால் பதற்றம்



ஊர்காவற்றுறை, ஜனவரி 25
ஊர்காவற்றுறையில் வீட்டில் தனித்திருந்த கர்ப்பிணிப் பெண் நேற்றுப் பட்டப்பகலில் கொடூரமாகக் கொல்லப்பட்டார். கத்தியால் வெட்டியும், கோடரியால் வெட்டியும் கொட்டனால் அடித்து மூளையைச் சிதைத்தும் அவர் கொல்லப்பட்டார் என்றனர் >> 28

## பெண் பார்க்கச் சென்ற சகோதரர்களே கைது

யாழ்ப்பாணம், ஜன. 25
திருமணம் முடிக்க இருக்கும் பெண்ணைப் பார்ப்பதற்காக ஊர்காவற்றுறைக்குச் சென்றவர்களே ஊர்காவற்றுறைக் கர்ப்பிணிப் பெண் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.
ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மேரி ரம்சியா நேற்றுப் பகல் கொல்லப்பட்டார். இந்தக் கொலை தொடர்பில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த >> 28

மகளைக் காரணம்

## காட்டிப் பிணை கோரினார் விமல்

கொழும்பு, ஜன. 25
நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் மகள் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதால் அவரது >> 29

## லசந்தவைக் கொன்றவரை அடையாளம் காட்டுவேன்

மகிந்த அதிரடித் தகவல்



கொழும்பு, ஜன. 25
சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவைப் படுகொலை செய்தவரின் அடையாளங்களை வெளிப்படுத்தத் தயார் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த >> 29




வவுனியா போராட்டம்

## அடை மழைக்கு மத்தியிலும் இரவு—பகலாகப் போராட்டம்

காணாமற்போனவர்களைத் தேடி வவுனியாவில் தொடரும் உணவு ஒறுப்பு

வவுனியா, ஜன. 25
இரவு - பகலாக, கொட்டும் மழை மத்தியிலும், நீர் ஆகாரமுமின்றி காணாமற்போனோரின் உறவுகள் சாகும்வரையிலான உணவுதவிர்ப்புப் போராட்டத்தை நேற்றும் இரண்டாவது >> 29

## நல்லூரிலும் அடையாள உணவு ஒறுப்பு

வவுனியாவில் நடக்கும் போராட்டத்துக்கு ஆதரவாக

யாழ்ப்பாணம், ஜன. 25
வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நாளை >> 29

ரவிராஜ் படுகொலை வழக்கு;

## மேன்முறையீட்டு மனு மீண்டும் விசாரணைக்கு

கொழும்பு, ஜன. 25
நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலை வழக்குத் தீர்ப்புக்கு எதிராகச் செய்யப்பட்ட மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அதற்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு மேன்முறையீட்டு நீதிமன்றினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ரவிராஜ் கொலை வழக்கில் >> 29

## கூட்டமைப்பின் ஆதரவை அரசு இழக்க நேரிடும்

கொழும்பு, ஜன. 25
வவுனியாவில் சாகும் வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடும் காணாமற் போனோரின் உறவுகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுமாயின் கூட்டு அரசுக்கான ஆதரவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலக்கிக் கொள்ள நேரிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற >> 27

## ஊடக அடக்குமுறைக்கு எதிரான கறுப்பு ஜனவரி

கொழும்பில் நேற்று நினைவுகூரல்



கொழும்பு, ஜன. 25
இலங்கையில் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கும், ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் >> 29

## கூட்டு அரசிலும் ஊழல் மோசடி

சம்பந்தன் காட்டம்



கொழும்பு, ஜன. 25
ஊழல்கள் கூட்டு அரசின் ஆட்சிக் காலத்திலும் இடம்பெறுகின்றன. அவை நிறுத்தப்படவேண்டும். கடந்த ஆட்சிக் காலத்தில் அதிக ஊழல், மோசடிகள் இடம்பெற்றதாகக் குற்றம் சாட்டப் >> 29

முச்சந்தி முரளி



கைதுக்கே பிள்ளையின்ர மனநிலை பாதிக்கப்படும் என்றால், வன்னியில போர் நடக்கேக்க எங்கட பிள்ளையளின்ர நிலை...

## குற்றவாளிகள் விடுவிப்பால் நீதிக்கான தேடல் வலுவிழப்பு

காணாமற்போனோரின் உறவுகள் நேற்றுக் கொழும்பில் அதிருப்தி

கொழும்பு, ஜன. 25
பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டமைக்காக நீதிமன்றம் சென்றோம். குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டு விட்டனர். எங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை வலுவிழந்துவிட்டது.
இவ்வாறு கையளிக்கப்பட்டுக் கடத்தப்பட்டுக் காணாமற்போனவர்களின் குடும்பத்தவர்கள் தெரிவித்தனர்.
பன்னாட்டு மன்னிப்புச் சபையின் ஆதரவுடன் கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது, >> 29

## திட்டமிட்டவாறு 31இல் தேர்தல் அறிவிப்பு

அமைச்சர் முஸ்தபா உறுதி

கொழும்பு, ஜன. 25
எல்லை நிர்ணய ஆணைக்குழு அறிக்கையில் தொழில்நுட்ப ரீதியான குறைபாடுகள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ள >> 27

## கேப்பாபிலவு மக்கள் இன்று உணவு ஒறுப்பு

முல்லைத்தீவுக்கு மைத்திரி வரும் நிலையில்

முல்லைத்தீவு, ஜன. 25
அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இன்று செல்லவுள்ள நிலையில், முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்கள் தமது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் >> 27




### இந்தோ - பசுபிக் பிராந்தியத்தின்

## கடல்சார் பாதுகாப்பை வலுவாக்க ஒத்துழைப்பு



கொழும்பு, ஜன. 25

அமெரிக்க - இலங்கைக் கடற்படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு, இந்தோ - பசுபிக் பிராந்தியத்தின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தும் என்று, அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்தார்.

ஐந்து நாள் பயணத்தை மேற்கொண்டிருந்த அமெரிக்கக் கடற்படையின் யு.எஸ்.எஸ். ஹொப்பர் ஏவுகணை நாசகாரிக் கப்பல், கொழும்புத் துறைமுகத்தில் இருந்து நேற்றுமுன்தினம் புறப்பட்டுச் சென்றுள்ள நிலையில், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

யு.எஸ்.எஸ். ஹொப்பர், கொழும்பில் தரித்து நின்றபோது, அமெரிக்கக் கடற்படையினர் இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து பல்வேறு விளையாட்டு, கலாசார நிகழ்வுகளில் பங்கேற்றதுடன், கடலில் மீட்பு மற்றும் கப்பல் சோதனைகளை மேற்கொள்வது தொடர்பான தந்திரோபாயப் பயிற்சிகளையும் கடற்படையினருக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)



இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவராக சிங் சந்து நேற்றுக் கொழும்பில் பதவியேற்றுக் கொண்டார்.(த)

## கிழக்குப் பல்கலைக்கழக விடுதிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள விடுதிப் பிரச்சினைக்கு, விரைவில் தீர்வு காணப்படும் என்று உயர்க் கல்வியமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.


நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜய திஸ்ஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னதாகக் கேள்வியெழுப்பிய நளிந்த ஜய திஸ்ஸ, கிழக்குப்பல்கலைக்கழகத்தில் கல்விப் பயிலும் 1,800 மாணவர்கள், விடுதி வசதிகள் இன்றி அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். அந்த மாணவர்களுக்கு விடுதி வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படுமா? என்று வினவினார்.

அதற்குப் பதிலளித்த உயர் கல்வியமைச்சர், பல்கலைக் கழகமானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் நாட்டில் இல்லை. பதில் ஆணையாளரே கடமையில் இருக்கின்றார். கிழக்குப் பல்கலைக்கழகமாணவர்களுக்கு, வாடகைக்கே விடுதி பெற்று கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்- என்றார். (த)

# ரணிலை நம்பாது ஜே.வி.பி.

## பிணைமுறி மோசடி விவகாரத்தை சபாநாயகர் கையிலெடுக்கக் கோரிக்கை



கொழும்பு, ஜன. 25

பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்குரிய நடவடிக்கையை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க செய்வார் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. இதனைச் சபாநாயகர் தனது கையில் எடுத்துச் செயற்படவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் நேற்றுக் கோரிக்கை விடுத்தார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவுமான அநுரகுமார திசாநாயக்க.

மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணைமுறி விநியோகம் தொடர்பில் கோப் குழு முன்னெடுத்த விசாரணை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை, பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது தொடர்ந்தும் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநராக இருந்தவரின் உறவினர் ஒருவருக்கு உரித்தான பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனமே மோசடியுடன் தொடர்புபட்டுள்ளது.

14 மாத காலப் பகுதியில் 141 பில்லியன் ரூபா பெறுமதியான பிணைமுறிகளை அந்த நிறுவனம் வாங்கியுள்ளது. இந்த நிறுவனம் சார்பில் 14 மாத காலப் பகுதிக்குள் 22 ஆயிரத்து 700 கோடி ரூபா பெறுமதியான பிணைமுறிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட பிணைமுறிகளில் 95 சதவீதமானவை ஊழியர் சேமலாப நிதியத்தால் மீள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான விவரங்கள் நாணயச் சபையினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தன. அந்த அறிக்கை கொண்டு வரப்படுவதை மத்திய வங்கியின் அப்போதைய ஆளுநர் தடுத்திருந்தார்.

பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் சார்பில் வாங்கப்பட்ட 95 சதவீத பிணைமுறிகளைத் திரும்ப வாங்கியமையால், ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 14 மாதங்களில் 14.9 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நட்டமானது பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்துக்கு இலாபமாகச் சென்றுள்ளது.

பிணைமுறி மோசடியுடன் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு நேரடித் தொடர்பு இருக்கின்றது. அதில் சம்பந்தப்பட்ட மத்திய வங்கியின் சகல அதிகாரிகளுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கோப் குழு பரிந்துரை முன்வைத்துள்ளது. உரிய நடவடிக்கைகள் அவசியம்.

பிணைமுறி விடயம் சம்பந்தமாக அரச தலைவர் ஆணைக்குழுவொன்றை அமைத்துள்ளார். இது வரவேற்கப்பட வேண்டியது. ஆனால், ஏன் இவ்வளவு தாமதமாக நியமிக்கப்பட்டது? பிணைமுறி விநியோக விவகாரத்துக்குத் தலைமை அமைச்சர் பாதுகாவலராக இருந்துள்ளதால் அவர் தலைமையிலான அரசு, குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குமா என்பது சந்தேகமே.

மோசடியில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கும் நடவடிக்கையைச் சபாநாயகர் தமது கைகளுக்கு எடுக்கவேண்டும் – என்றார். (த-5)



## ஹெரோயின் வைத்திருந்த 11 பேர் கைது

பதுளை, ஜன.25

பண்டாரவளைப் பகுதியில் பெருமள்விலான ஹெரோயின் போதைவஸ்து பைக்கெற்றுக்களுடன் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு தியத்தலாவைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய, நகரைச் சுற்றிவளைத்த பொலிஸார் 1,452 மில்லிகிராம் எடையுள்ள ஹெரோயின் பைக்கெற்றுக்களுடன் இருவரைச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்தனர். அத்துடன் இவர்களிடம் போதைப் பொருள் வாங்கியதாகக் கருதப்படும் ஒன்பது பேரையும் கைது செய்தனர். (த-ய-41)

## பல்கலை அனுமதிக்கு விண்ணப்பங்கள் ஏற்பு

மட்டக்களப்பு, ஜன.25

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய, பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான விண்ணப்பங்கள் இன்று தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இன்று புதன்கிழமையிலிருந்து பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் இம்முறை இணையத்தின் ஊடாக மாத்திரமே விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியுமென்றும் கூறப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பான கையேட்டை இன்று புதன்கிழமை தொடக்கம் ஆணைக்குழு அங்கீகரித்த விநியோக முகவர்களிடமிருந்து பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ய-46)

# வடக்கு அரசின் ஊழல்களையும் கவனிக்கவேண்டும்

## சபையில் டக்ளஸ் கோரிக்கை

கொழும்பு, ஜன. 25

வடக்கு அரசின் இரண்டு ஊழல்கள் தொடர்பில் கொழும்பு அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் வடக்கில் முன்னெடுக்கப்பட்ட நெல்சிப் திட்டத்தில் உள்ளூராட்சிச் சபைகளின் ஆளும் தரப்பாக இருந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஊழல், மோசடிகள். இதனை விசாரிப்பதாகப் பொறுப்பேற்ற வடக்கு மாகாண அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் எவ்விதமான உறுதிப்பாடுகளும் இல்லை.

இரண்டாவது, வடக்கு மாகாண அரசின் அமைச்சர்களால் மேற்கொள்ளப்பட்ட ஊழல், மோசடிகள். இது தொடர்பில் வடக்கு மாகாண் சபையின் ஆளுந்தரப்பினரே ஆளுந்தரப்பினர் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருந்த நிலையில், மாகாண முதலமைச்சர் இந்த ஊழல், மோசடிகளை விசாரிப்பதற்கென ஒரு குழுவை அமைத்தார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தன.

அது தொடர்பிலும் இதுவரையில் எவ்வித விவரங்களும் வெளியிடப்படவில்லை. முதலமைச்சர் வசமுள்ள அமைச்சுக்களிலும் ஊழல், மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக ஆளுந்தரப்பினர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளபோதிலும், அது தொடர்பிலும் எவ்வித நடவடிக்கைகளும் இல்லை. இவை தொடர்பிலும் நாம் அவதானம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன் - என்றார். (த-5)

# ஜல்லிக்கட்டுக்கு வழங்கிய ஆதரவு உணவு ஒறுப்புக்கும் கிடைக்க வேண்டும்

## கூட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 25

ஜல்லிக்கட்டுக் தடைக்கு எதிராக இளைஞர்கள் ஆதரவு தெரிவித்துப் போராடியதைப் போன்று, காணாமற்போனோரின் உறவினர்களின் உணவு ஒறுப்புப் போராட்டத்திற்கும் ஆதரவு வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

வவுனியாவில் காணாமற்போனோரின் உறவினர்களால் இரண்டாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்ட சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, விடுத்துள்ள அறிக்கையிலேயே கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரது பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

போர்க் காலத்திலும் அதற்குப் பின்னரான காலப் பகுதியிலும் கடத்தப்பட்டவர்களும், இராணுவத்திடம் உறவினர்களால் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டவர்களும் என்று பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களது நிலை தொடர்பில் அரசு அவர்களது உறவினர்களுக்குத் தகுந்த பதிலை இதுவரை தெரியப்படுத்தவில்லை.

நாட்டில் மாறி மாறி வந்த அரசுகளை நம்பியவர்களாக காணாமற் போனவர்களின் உறவினர்கள் இருந்த போதிலும், எந்த அரசும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆணைக்குழுக்களை அமைத்து விசாரணை என்ற பெயரில் காலங்களை கடத்தியதே தவிர, அதனூடாகத் தீர்வினை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை. காணாமற்போனவர்களின் உறவினர்கள் தமது சாத்வீக ரீதியிலான போராட்டங்களின் ஊடாக, தமது உரிமையை கோருகின்ற போது வாக்குறுதியை அளிக்கும் பெரும்பான்மை அரசியல் சக்திகள் அவர்களின் உணர்வுகளை உணர்ந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள காணாமற்போனோரின் உறவினர்களுக்கு, மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஆதரவு வழங்கவேண்டும்.

ஜல்லிக்கட்டு தமிழ் நாட்டில் நடத்தப்படவேண்டும் என்பதற்காக உணர்வுபூர்வ மாக இளைஞர்கள் ஆதரவுவழங்கி போராட்டங்களை நடத் தியிருந்த நிலையில், காணாமற் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்திற்கும் இளைஞர்கள் அணிதிரண்டு தமது ஆதரவை வழங்க வேண்டும் - என்றார். (த-5)

எம்மை நோக்கி விரல் நீட்ட முன்

# உங்களை நீங்களே கேள்வி கேளுங்கள்

## மகிந்த தரப்புக்குச் சபையில் கபீர் ஹாசிம் சாட்டை

கொழும்பு, ஜன. 25

எம்மை நோக்கி விரல் நீட்ட முன்னர் உங்களிடம் நீங்களே கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணியினரைப் பார்த்து, ஐக்கிய தேசியக் கட்சியின் செயலரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

கோப் குழு அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மோசடி தொடர்பில் தற்போது சபையில் வெளியிடப்படும் கருத்துக்களுக்கு நாம் முழுமையான வரவேற்பைத் தெரிவித்துக் கொள்கிறோம். எமக்கு எதிராக விரலை நீட்டும் முன்னர் உங்களிடமே நீங்கள் கேள்விகளைக் கேட்டுக் கொள்ளுமாறும் நாம் எதிரணியினரிடம் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

நாம் ஆட்சிப்பீடம் ஏறிய பின்னர்தான் மத்திய வங்கியின் பிணைமுறி ஏல விற்பனை வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்டது. கடந்த காலத்தில் எல்லாம் இந்தச் செயற்பாடு மறைமுகமாக மேற்கொள்ளப் பட்டபோதும் ஏனைய மோசடிகள் நாட்டில் இடம்பெற்ற போதும் மக்கள் விடுதலை முன்னணியினர் எந்தவொரு கருத்தையும் கூறவில்லை. ஏன் கூறவில்லை? அப்போது அதற்கான சுதந்திரம் இருக்கவில்லை. தற்போது எமது அரசால் வழங்கப்பட்டுள்ள சுதந்திரம் காரணமாகவே இங்கு இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகிறார்கள் - என்றார்.

‘கடந்த அரசு கோப் குழுக்களின் எந்தவொரு அறிக்கையையும் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கவில்லை. எமது அரசு அவ்வாறு அல்ல. கோப் குழுவின் தலைவர் பதவியைக் கூட எதிரணிக்கு வழங்கியது. எவரையும் பாதுகாக்கும் நோக்கில் அரசு செயற்படவில்லை. சட்டமா அதிபர் திணைக்களம் முன்வைக் கும் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை இடம் பெறும்’ என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (த-5)

# எமனாக மாறியது வெளிநாட்டுக் கனவு

## வடமராட்சி இளைஞன் நோய்வாய்ப்பட்டு ஆபிரிக்காவில் சாவு

முகவர் ஊடாக ஐரோப்பாவுக்கு சட்ட விரோதமாகச் செல்ல முயன்ற வடமராட்சியைச் சேர்ந்த இளைஞன் சுகவீனம் காரணமாக ஆபிரிக்க நாட்டில் உயிரிழந்துள்ளார். இதனால் வெளிநாடு செல்வதற்கு முகவர் பெற்றுக்கொண்ட பணத்தை மீளப் பெற்றுத்தருமாறு, பெற்றோரினால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த மனோகரன் இரவிச்சந்திரன் (வயது-22) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார். இது தொடர்பில் உயிரிழந்த இளைஞனின் தாயார் ‘உதயன்’ பத்திரிகைக்குத் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு மே மாதம் வத்தளையைச் சேர்ந்த முகவர் ஊடாக வெளிநாடு செல்ல 16 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் கட்டினோம். ஆபிரிக்க நாட்டில் கடந்த சில மாதங்களாக எனது மகனை வைத்திருந்தார்கள். மகன் என்னுடன் அங்கிருக்கும் போது தொலைபேசியில் பேசினான். சில தினங்களுக்கு முன்னர் மகனுக்கு காய்ச்சல் வந்துள்ளது. இதனால் தலை அடிபட்டு கீழே விழுந்துள்ளான். வைத்தியசாலையில் சேர்த்திருப்ப தாக நண்பர்கள் தகவல் சொன்னார்கள். மருத்துவச் செலவுக்கு ஒரு லட்சம் ரூபா வழங்குமாறும் அவர்கள் கோரினார்கள். அதனை நான் அனுப்பி வைத்தேன். நேற்று முன்தினம் எனது மகன் உயிரிழந்து விட்டதாகச் சொன்னார்கள். எனது மகனை அடித்துக் கொலை செய்ததாக வெளியான தகவல்களில் உண்மையில்லை - என்றார்.

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாட்டிலும், மேற்படி இளைஞன் அடித்துக் கொலை செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. முகவரிடம் வழங்கிய பணத்தை மீளப் பெற்றுத் தருமாறே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-5-26)

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை

# பிள்ளையானுக்கு எதிராக விரைவில் குற்றப் பத்திரிகை

## உயர் நீதிமன்றுக்கு அறிவித்தார் சட்டமா அதிபர்

கொழும்பு, ஜன. 25

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யத் தீர்மானித்துள்ளதாக சட்ட மா அதிபர் உயர் நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தன்னை விடுதலை செய்யுமாறு கோரி சிவநேசதுரை சந்திரகாந்தன் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தார். அந்த மனு நேற்று அழைக்கப்பட்ட போது அரச சட்டத்தரணி இதனைத் தெரிவித்தார்.

பிள்ளையானின் உத்தரவுக்கு அமையவே நாடாளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கம் கொலை செய்யப்பட்டுள்ளார். சாந்தன் என்ற நபர் இந்தக் கொலையைச் செய்துள்ளார். இந்தப் படுகொலை தொடர்பில் பிள்ளையான் உட்பட சில நபர்களுக்கு எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று அரச சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

இந்தக் கருத்துக்களை நிராகரித்த மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, போதிய ஆதாரங்களின்றி பிள்ளையானை பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர் என்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

கருத்துக்களை ஆராய்ந்த நீதியரசர்கள், அடிப்படை உரிமை மீறல் மனுவை முன்கொண்டு விசாரணை செய்ய அனுமதி வழங்கினர். மனு மீதான விசாரணை எதிர்வரும் மே மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-5)

# கொழும்பு இந்துவின் மெய்வன்மை போட்டி நாளை

யாழ்ப்பாணம், ஜன. 25

கொழும்பு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மேல் மாகாண ஆளுநர் கே.சி. லோகேஸ்வரன் பங்கேற்பார். (த-10)

# எதிர்க்கட்சி வரிசையில் பிரியங்கர

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன நேற்று நாடாளுமன்ற அமர்வுகளின்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டார்.

நல்லாட்சி அரசின் இராஜாங்க அமைச்சராகச் செயற்பட்டு வந்த பிரியங்கர ஜயரட்ன அண்மையில் தனது பதவியில் இருந்து விலகினார். கூட்டு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான மகிந்தா னந்த அளுத்கமகே உள்ளிட்ட உறுப்பினர்கள் சிலர் பிரியங்கரவை நாடாளுமன்றத்துக்குள் அழைத்து வந்தனர். (த)

2016ஆம் ஆண்டில் 40,500 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான புலமைப் பரிசில்களை வழங்கி **ANC** நிறுவனம் ஏராளமான மாணவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்துள்ளது.

ANC
EDUCATION

இவ்விரு திட்டங்களின் கீழும் மாணவர்கள் இரண்டு ஆண்டுகள் இலங்கையில் கற்றபின் அவர்கள் தெரிவு செய்யும் கனேடிய அல்லது அமெரிக்க பல்கலைக் கழகங்களில் இணையலாம். இந்த சிறப்புச் சலுங்கயின் மூலம் பெருமளவு பணமும் நேரமும் சேமிக்கப்படும்.

கனடாவில் பிரத்தியேக வகுப்புகள் மற்றும் வாழ்க்கைச் செலவுகளில் 70 சத விகிதம் வரை சேமிக்க முடியும்.

சிறந்த GPA/SAT புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் ஒரு சில பங்காளப் பல்கலைக் கழகங்களில் (Partner Universities) இடமாற்ற புலமைப் பரிசில்களுக்கு (Transfer Scholarship) விண்ணப்பிக்க முடியும்.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் ANC நிறுவனத்தில் இணைவதன் மூலம் அப் பரீட்சையின் பின் உயர்தர வகுப்புகளுக்குச் செல்லும் அவர்களது சக மாணவர்களை விட 2 தொடக்கம் 3 ஆண்டுகள் முன்னதாக தங்களது பட்டப்படிப்பை முடிக்கலாம்.

க.பொ.த உயர்தர வகுப்பில் திறமைச் சித்திக்கு (C) மேற்பட்ட பெறுபேறுகளைப் பெற்றவர்கள் மூன்று வருடத்தில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்யக் கூடிய துரித வழியை (Fast Track) இலங்கையில் பின்பற்றலாம். இதற்காக அவர்கள் இந்த மாநிலங்களின் பல பல்கலைக் கழகங்களுடன் இணைந்து செயற்படுவது விசேட அம்சமாகும்.

ANC பட்டப்படிப்புத் திட்டத்தின் கீழ் இலங்கை மாணவர்கள் உள் நாட்டிலேயே அமெரிக்காவின் விசேடத்துவம் பெற்ற வர்த்தகப் பல்கலைக்கழகமான நோர்த்வுட்டின் (Northwood-NU) பட்டத்தைப் பெறலாம்.

வாழ்க்கையின் மிக மிக முக்கிய கட்டத்தில் இருக்கும் மாணவர்களும் அவர்களையே முற்றுமுழுதாக நம்பியிருக்கும் பெற்றோர்களும் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

உயர்கல்வித் துறையில் கிட்டத்தட்ட ஒன்றரை தசாப்த காலமாக ஏராளமான வெற்றியாளர்களை உருவாக்கியிருக்கும் ANC நிறுவனத்துடன் இணைவதன் மூலம் உங்களது எதிர்காலம் சுபீட்சமாக இருக்கும் என்ற முழு உத்தரவாதத்தை எங்களால் வழங்க முடியும்.

“ANC உங்கள் எதிர்காலக் கனவை நனவாக்கும் கலையில் தேர்ச்சிப் பெற்ற நிறுவனம்”

மேலதிக விவரங்களுக்கு:

தொலைபேசி : 077 38 999 38
மின்னஞ்சல் : mangalesh@ancedo.com
இணையதளம் : www.ancedo.com
காரியாலய முகவரி: 308-310, R.A De Mel Mawatha,
Colombo-03.
Sri Lanka

# காய்ச்சலுடன் வந்த சிறுவனை காக்க வைத்திருந்த மருத்துவர்

## 'துண்டு' கொடுக்கும் நேரத்தில் வரவில்லை என்பதாலாம்

கிளிநொச்சி, ஜன. 25
சிகிச்சைக்காக அக்கராயன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சிறுவன் உரிய நேரத்துக்கு மருத்துவமனைக்கு வரவில்லை எனக் கூறி, 'துண்டு' வழங்காமல் காக்க வைக்கப்பட்டான். 4 மணி நேரத்தின் பின்னரே சிறுவனை மருத்துவர் பரிசோதித்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

ஆனைவிழுந்தானில் இருந்து அக்கராயன் வைத்தியசாலைக்கு எனது 8 வயதுப் பிள்ளையைக் கொண்டு சென்றேன்.

முற்பகல் 11 மணிக்கு வைத்திய சாலைக்குச் சென்று, வைத்தியரிடம் காண்பிப்பதற்கான 'துண்டு' தருமாறு கோரினேன். 11 மணிக்குப் பின்னர் துண்டு வழங்க முடியாது. வழங்கினால் மருத்துவர் ஏசுவார் என்று அதற்குப் பொறுப்பான தாதியர் தெரிவித்தார். பிற்பகல் 2 மணிக்கு வாருங்கள் என்றார்.

அங்கிருந்த வாங்கில் எனது பிள்ளையை வைத்திருந்தேன். ஒரு தாதி அங்கே வந்து எனது பிள்ளையின் கண்களைப் பார்க்கும் போது காய்ச்சல் அதிகமாக இருக்கும் போல் என்று தெரிவித்து பரிசோதித்தார். உடல் வெப்பநிலை 100 பாகையைத் தாண்டி இருந்தது. எனது மூத்த மகனுக்கு டெங்கு ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதையும் தெரிவித்தேன். மருந்து தருமாறு கோரினேன். மருத்துவரின் அனுமதியில்லாமல் தர முடியாது என்று அவர் கூறினார்.

மருத்துவரிடம் அவர்கள் கூறினார்கள். விடுதியில் தங்குங்கள், இல்லை என்றால் மாலை வருங்கள் என்று மருத்துவர் பதிலளித்தார் என்று அந்தத் தாதி என்னிடம் தெரிவித்தார்.

வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள கடையில் பனடோல் வாங்கிக் கொடுத்தேன். பி.ப. 1.55 மணிக்கு துண்டு எடுப்பதற்காக வைத்தியசாலைக்குள் சென்றேன். பி.ப. 3 மணியளவில் மருத்துவரிடம் பிள்ளையைக் கொண்டு சென்றேன். பிள்ளைக்கு காய்ச்சல் என்றேன். பிள்ளையைச் சோதிக்காமல் மருந்து எழுதினார். 100 பாகைக்கும் மேல் உடம்பு கொதிக்கின்றது என்று சொன்னேன்.

அவர் சோதிக்கவில்லை. மருத்துவரிடம், நான் 11 மணிக்கு வைத்தியசாலைக்கு வந்தேன். 11 மணிக்குப் பிறகு துண்டு கொடுக்கக் கூடாது என்று நீங்கள் கூறியுள்ளீர்கள் என்று தாதியர் தெரிவித்தார் என்றேன்.

அதற்கு மருத்துவர் அறிவித்தலைப் பார்க்கவில்லையா? என்று கேட்டார்.

அதற்கு நான் 11 மணிக்குப் பிறகு வந்தால் துண்டு தர முடியாது என்கின்றீர்கள். நீங்கள் மாத்திரம் நேரம் தாமதித்து வரலாமா? 2 மணிக்கு வர வேண்டிய நீங்கள் 3 மணிக்கு வரலாமா? என்று கேட்டேன்.

அதற்கு அந்த மருத்துவர் என்னைப் பிடித்து வெளியில் விடுமாறு தெரிவித்தார்.- என்று பாதிக்கப்பட்ட சிறுவனின் தாய் கூறினார்.

அக்கராயன் வைத்தியசாலையின் தொலைபேசிக்கு தொடர்பு கொண்ட போது, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்பு கொண்டு கேளுங்கள் என்று பதிலளிக்கப்பட்டது.

இவ்வாறான சம்பவங்கள் தவிர்க்கப்பட வேண்டும். இது தொடர்பாக முறைப்பாடு எனக்கு கிடைக்கவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டாலோ அல்லது வேறு முறைப்பாடுகள் எதுவும் இருப்பின் 0770212765 என்ற தமது இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும்.- என்று

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கார்த்திகேயன் தெரிவித்தார். (ப-5,6)



புதுக்குடியிருப்புப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஒட்டுசுட்டானில் காணப்பட்ட பாதீனியச் செடிகள் பிரதேச சபையினரால் நேற்று அழிக்கப்பட்டன. (ப-7)

# மழையால் அழிந்தது உப உணவுச் செய்கை

## முல்லை. மாவட்ட விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு,
ஜன.25
தற்போது பெய்யும் திடீர் மழையால் நெற்செய்கையாளர்கள் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் அதேநேரம் உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்கள் கவலை அடைந்துள்ளனர்.


தற்போது பெய்து வரும் மழையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு காலபோகத்தில் செய்கை பண்ணப்பட்ட உப உணவுப் பயிர்கள் அழிந்துள்ளன என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

மிளகாய், சோளம், உழுந்து, பாசிப்பயறு, கௌப்பி, நிலக்கடலை, மரவள்ளி, காய்கறிகள், பழங்கள் என 3 ஆயிரத்து 322 ஹெக்ரெயரில் உப உணவுப் பயிர்கள் செய்கை செய்யப்பட்டன.

போதிய மழைவீழ்ச்சி கிடைக்காததால் ஏற்கனவே ஆயிரத்து 319 ஹெக்ரெயரில் செய்யப்பட்ட நிலக்கடலைச் செய்கை முற்றாக அழிந்துள்ளது.

ஆயிரத்து 214 ஹெக்ரெயரில் பயிரிடப்பட்ட உழுந்து, கௌப்பி, பயறு என்பன அறுவடைக்குத் தயாராக இருந்தன. தற்போது பெய்யும் மழையால் அவற்றை அறுவடை செய்ய முடியாது. அவை முற்றாக அழிந்துள்ளன.- என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ப-7)

> தற்போது பெய்யும் மழையால் அவற்றை அறுவடை செய்ய முடியாது. அவை முற்றாக அழிந்துள்ளன.



# மாங்குளத்தில் துப்பாக்கியுடன் நால்வர் கைது

கிளிநொச்சி ஜன 25
மாங்குளம் சிராதிகுளம் காட்டுப்பகுதியில் சொட்கண் துப்பாக்கியை வைத்திருந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட விசேட மது ஒழிப்புப் பிரி வின் பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்தார்

நேற்று முன்தினம் வழமையான சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர். ஆரம்ப விசாரணை களில் அவர்கள் வேட்டைக்காக துப்பாக்கியைக் கொண்டு வந்திருந்தனர் என்று தெரியவந் துள்ளது.

மேலதிக விசாரணைகள் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெல்லிக்கன்னவின் கட்டளைக்கு அமைய முன்னெடுக்கப்படுகின்றன. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று அவர் தெரிவித்தார். (ப-6)

# அபிவிருத்தி அதிகாரிகளுக்கு அலுவலகம் வழங்க ஏற்பாடு

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.25
வடக்கு மாகாணத்தில் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தனிக் கட்டடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின்நடப்பாண்டுக்கான அமைச்சுக் கூட்டம் அமைச்சர் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதில் சுட்டிக்காட்டப்பட்டது.

பிரதேச செயலகங்களில் இருக்கின்ற கிராம அபிவிருத்தி அதிகாரிகளைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. அவர்களைக் கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியாதுள்ளது. அவர்களின் செயற்பாடுகளுக்கு பிரதேச செயலக அதிகாரிகள் தடையாக உள்ளனர்.

அவர்களை பிரதேச செயலகங் களில் இருந்து பிரித்து எடுத்து தனி யான கட்டடத்தில் இயங்க வைக்க வேண்டும்.- என்று வடக்கு மாகாண சபைஉறுப்பினர் விந்தன் குறிப்பிட்டார்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எனவீடு ஒன்றை எடுத்து அவர்களது அலுவலகத்தை அங்கு இயங்க வைக்க முடியும். அங்கே விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகள், கலாசார அதிகாரிகள், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் போன்றவற்றையும் அங்கு இயங்க வைக்க முடியும்.- என்று வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவித்தார்.

நீண்டகாலமாக ஒரே பிரதேசத்தில் பணியாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யவேண்டும். குறைந்தது ஐந்து வருடங்களுக்கு மேல் பணியாற்றும் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்ய வேண்டும்.- என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் கமலேஸ்வரன் தெரிவித்தார்.

அனைவரது கருத்துக்களையும் கவனத்தில் எடுத்த வடக்கு போக்குவரத்து அமைச்சர், முதலமைச்சருடன் இது தொடர்பில் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்போம். பிரதேச சபைகளில் இடமி ருந்தால் அங்கு நடத்துவது பற்றி ஆராய்வோம்.

ஐந்து வருடங்களுக்கு மேல் பணியாற்றும் கிராம அபிவி ருத்தி உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.- என்று குறிப்பிட்டார். (ப-8)



# மாற்றுத் திறனாளிகள் அமைப்பு ஆரம்ப நிகழ்வு

தென்மராட்சி ஜன. 25

தென்மராட்சி பிரதேச மாற்றுத் திறனாளிகளின் நிறுவனம் என்னும் அமைப்பு எதிர் வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.9.30 மணிக்கு மறவன்புலோ கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

நிகழ்வுக்கு தலைமை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலர் நா.வேதநாய கனும், யாழ்.மாவட்ட சமூக சேவைகள் ஒருங்கிணைப்பாளர் கிரிஷ் சாந்தி விக்னேஸ்வரனும், வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபுவும், சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் திருமதி மு.கோடீஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறுவனத்துக்கு காணி வழங்கிய நன்கொடையாளர் க.சண்முகநாதன், கைதடி நபீல்ட் பாடசாலை ஓய்வுநிலை அதிபர் க.கோபால கிருஷ்ணன், வடமராட்சி செவிப் புலனற்றோர் சங்கத் தலைவர் சு.செந்தில்குமார் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

நிறுவனத்துக்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-9)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கழக மூத்த உறுப்பினர்
திரு. திருஞானசம்பந்தர் சந்திரசேகரன்
அவர்கள் இன்று (25.01.2017) புதன்கிழமை
கொழும்பு உயர்நீதிமன்றத்தில்
சட்டத்தரணியாக
சத்தியப்பிரமாணம் செய்வதையிட்டு
அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்:
தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம்
பருத்தித்துறை.

40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற
'றோயல் குளுக்கோஸ்'
தற்போது புதிய வடிவில்!!
இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
"றோயல் குளுக்கோஸ்"
Packed By:
Royal Industries, Colombo - 13.
077 727 7670




சிவா நறுமணப் பூங்கா
இல.888, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567
(சி/00348)(11.17)

THE HALO TRUST
ADVERTISEMENT FOR THE POSITION OF FINANCE ASSISTANT

The Halo Trust is a British Mineclearance NGO working in fourteen countries worldwide. The Halo Trust have been working in Sri Lanka since 2002 clearing mines and other explosive remnants of war.
The applicant will be based in Jaffna with the requirement to occasionally travel to other HALO locations (Kilinochchi and Colombo)

Duties :
* Responsible to the Finance Manager
* Preparation of monthly accounts
* Salary payment preparation
* Assisting with internal and external audits
* Preparing documentation for new staff, completing B Cards and contracts, updating HR details and payroll (in kilinochchi)
* Completing EPF and ETF forms
* Maintaining payroll and HR systems
* Maintaining petty cash book
* Visit Kilinochchi twice a week and Colombo offices when required
* Cover Finance Manager duties in the case of absence
* Handle incoming telephone calls
* Authorising the issue of money within level of responsibility
* Any other duties as specified by Finance Manager and / or Programme Manager.

Essential:
* Computer literate
* Working Knowledge of Microsoft Office (especially Excel)

Desirable :
* Qualification in Mathematics
* English language skills

Interested candidates should submit their bio - data and contact details and a brief summary of their experience to:
The HALO Trust, 450, Thirunagar west Road, Kilinochchi.

All applications must be submitted no later than Tuesday 31 January 2017 only successful candidates will be contacted. The interviews will take place in Kilinochchi.
(K/279)(11.17.18)

New
போத்தீஸ்
திருமணப் பட்டுப்புடவைகளின் ஆலயம்
Alayam of Silks



ஆடவர்கள், சிறுவர் சிறுமியருக்கான
அனைத்துத் தெரிவுகளும்
ஒரே இடத்தில்

ஆண், பெண்களுக்கான
திருமண பட்டுப் புடவைகள்
மற்றும் மங்கலகரமான
நிகழ்வுகளுக்கான அனைத்து புடவைகளும்

New Collection New Style

காரியாலயத்துக்குரிய புடவைகள்
(Office wear sarees)
ஒரே நிறத்திலும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் ஒரே கூரையின்
கீழ் பெற்றுக் கொள்ளலாம்.

இல.27,28, கஸ்தூரியார் வீதி,
(புதிய மாநகரசபைக் கட்டடம்)
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5464

8 ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2017
கல்வி 2017 Special Education Pavilion
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்
27 28 29
ஜனவரி JANUARY
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Grounds - Jaffna




'யாழ் சமையலறை'
Yarl Kitchen
வடக்கிற்கே உரித்தான தனித்துவம் மிக்க உணவு தயாரிப்பு முறைகள்
jitf.lk
www.jitf.lk
ORGANIZED BY LECS
IN ASSOCIATION WITH
CO-SPONSOR S-Lon
SUPPORTED BY
ENDORSED BY
OFFICIAL PARTNERS
DSI

# விபத்தை ஏற்படுத்தியவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம்.ஜன.25
வாகன அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, வாகனம் செலுத்தி சிறு சிறு காயங்களுக்கு உள்ளாக்கியமை, வாகனம் செலுத்தும்போது அவதானமின்மை, வாகன விபத்தைத் தடுக்கத் தவறியமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டவருக்கு 14 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
யாழ்ப்பாண நீதிவான் மன்றின் நீதிபதி சி. சதீஸ்தரன் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ற-ரி)

## காணவில்லை



உருத்திரபுரத்தைச் சேர்ந்த
**லூத்தியோபிலஸ் நிர்மலன்ஜெறோட்**
என்பவரை2017.01.16 இல் இருந்து காணவில்லை. இவரைக் காண்பவர்கள் கீழ்வரும் தொலைபேசிக்கு தகவல் தரவும்.

**077 105 1680, 077 597 0316**
**070 270 9298, 077 278 4736**

## அறிவித்தல்

**பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு**
**வடக்கு மாகாணம்**

**வடக்கு மாகாண பொதுச் சேவையின் போசணையாளர் தரம் II மற்றும் உளநல சமூக உத்தியோகத்தர் தரம் II ஆகிய பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

தமிழ் / சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதி 2017.02.23 ஆகும்.
விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆள்சேர்ப்புத் தகவல்களையும். தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத் திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ரூ. வரதலிங்கம்**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு**
**வடக்கு மாகாணம்.**

## Chundikuli Girls' College Jaffna

We are looking for professionally qualified, Committed and motivated candidates to fill the following vacancies.

### ACCOUNTANT

**Requirements :**

* Should possess a full / part qualification from a recognized Accounting body (DEGREE / CIMA / ACCA / ICA)
* Prior working experience in computerized accounting system is an added advantage .
* Knowledge in the preparation of Financial statements, Auditing procedures, VAT returns and monthly financial reports and project cost reports in must.
* Good command of English.
* Age between 25 - 55 years.

### Teacher of Biology

**Requirements:**

* Should possess a degree in the relevant field.
* Good command of English.
* Should be able to teach Biology for A/L English medium classes.

### Teacher of Agriculture

**Requirements:**

*Should possess a degree in the relevant field.
*Should be able to teach Science for Grs.6 - 11 in English Medium and Agriculture for A/L classes in Tamil Medium.

Salary is negotiable and will commensurate with qualifications and experience.
Apply before 4th February 2017 with the names of two non - related referees.
Please indicate the post applied for, on top the envelop.
Only shortlisted candidates would be called for an interview.

Principal
Chundikuli Girls' College, Jaffna.

(C/00442)(11.17.18)

## இலவச கல்விக்காக நடைபயணம்

யாழ்ப்பாணம், ஜன.25
இலவசக் கல்வி மற்றும் சுகாதார சேவையின் தரத்தை பாதுகாக்கும் பொருட்டு யாழ்ப்பாண மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் நடைபயணம் இடம்பெறவுள்ளது. யாழ் மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
நடை பயணம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து யாழ் மாவட்டச் செயலகத்தை நோக்கி இடம்பெறும். அதன் முடிவில் யாழ். மாவட்டச் செயலர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக அரச தலை வருக்கும், தலைமை அமைச்சருக்கும் மனு கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-8)

## பொது இடத்தில் மது அருந்திய மூவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜன.25
பொது இடத்தில் மது பானம் அருந்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவருக்குத் தலா 2 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. யாழ். [illegible] பகுதியில் [illegible] பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றில் தம்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்துத் தண்டம் விதிக்கப்பட்டது. (ற-ரி)

## INVITATION FOR BID
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA, CHUNNAKAM

1. The Secretary, Pradeshiya Sabha Procurement Committee on behalf of the Valikamam South Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade mentioned in the table below with the Construction Industry Development Authority (CIDA).
4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section V).
5. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam (T.No: 021 205 3001 Fax: 0212240327 )** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 15.00 hrs from 25-01-2017 to 16-02-2017.
6. A complete set of Bidding Documents in English language may be purchase by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam South Pradeshiya Sabha (T.No: 021 205 3001 Fax: 0212240327 ) from 25-01-2017 until 16-02-2017 from 9.00 hrs to 15.00 hrs working days upon payment of a non – refundable fees of Rs. 7500.00.** The method of payment should be by cash.
7. Bids (original & Duplicate) shall be delivered to the **Secretary, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam on or before 14.00 Hrs on 17-02-2017.** Late Bids will be rejected. Bidders must write Bid ID on left hand upper corner of envelop for each. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre bid meeting will be held at the **Office of Valliakamam South Pradeshiya Sabha, Chunnakam.** Commencing at **10.00 Hrs on 03-02-2017.**
9. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.

| Bid ID | Description of Work | Contract Period | Required Grade | Estimated Cost (Rs. Mn) | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Validity |
| Contract Package No NP/[illegible] VSPS/MM/2017/01 | Construction of Vegetable Market at Maruthanarmadam | 06 Months | C5 or above (Buildings) | 38.02 | 750,000.00 | Till 14-06-2017 |

***Secretary ,***
***Valikamam South Pradeshiya Sabha,***
***Chunnakam.***

## வீடு வாடகைக்கு

யாழ் நகரில் கிழமை, மாத அடிப்படையில் சுபகாரியங்களுக்கும். வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
**076 962 2256**

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் உள்ள அச்சகத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை. (புத்தகம் கட்டுனர்) பழக விரும்புவர்களும்
**கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 282 4321**

## தவறிவிட்டது

64 ½. இரண்டாம் ஒழுங்கை பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இரத்தினம் செல்வநாயகம் என்பவரது வாகன ஓட்டுநர் உரிமைப்பத்திரம் இன்சூரன்ஸ், ரக்ஸ் பத்திரங்கள் யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
**தொடர்பு: 077 360 9005**

## உடன் தேவை

நிறுவனம் ஒன்றிற்கு கீழ் காணும் வெற்றிடங்கள் உள்ளன. ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
1. லிகிதர் (CLERK) Accounts தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
2. வகுப்பறை உதவியாளர் (2½ வயது முதல் 5½ வயது வரையுள்ள பிள்ளைகளை கையாளக்கூடியவராகவும், சுற்றுச்சூழலை சுத்தம் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

Email: sat37aero@gmail.com
**072 494 5906**

## வீடு வாடகைக்குண்டு

கோப்பாய் வீதி, உரும்பிராயில் 3 அறைகள் மற்றும் சகலவசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. மாதம் - 5000/=
முற்பணம் - 100, 000/=
**077 082 2846, 077 272 0561**

## மணமகள் தேவை

1981.03.12 இல் பிறந்த, உயரம் 5 அடி, கிரகபாவம் 43½ , 7 இல் செவ்வாய். ரோகிணி நட்சத்திரத்தினை உடைய பிரான்ஸில் வசிக்கும் PR அற்ற மணமகனுக்கு பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து PR உள்ள பெண் தேவை. (விவாகரத்து பெற்றவரும் விரும்பத்தக்கது)
**077 862 4165.**

## ஐரோப்பியன் மொழிகளுக்கான சென்டர (கிளாக் தேவை)

வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற (ஒரு அலுவலக கிளாக்) தேவை.
அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
**076 963 9447 / 024 561 6556**

## மகிந்த சந்தித்த மாகாண முதலமைச்சர்களை சந்திரிகாவும் சந்திக்கவுள்ளார்

கொழும்பு,ஜன. 25
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை, சந்தித்த மாகாண முதலமைச்சர்களை,முன்னாள்அரசதலைவர் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் முதலமைச்சர்களுடன் சந்திரிகா குமாரதுங்க கலந்து ரையாடியுள்ளதாக மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.
மகிந்த ராஜபக்சவுக்கும், மாகாண முதலமைச்சர்களுக்கும் இடையிலான சந்திப்பில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் இந்தச் சந்திப்பு இடம் பெறவுள்ளது.
மகிந்த ராஜபக்சவுடனான சந்திப்பு இணக்கப்பாடின்றி நிறைவுபெற்றபோதிலும், அவருடனான அடுத்தடுத்த சந்திப்புக்களுக்கு ஓர் ஆரம்பமாக, முதலாவது சந்திப்பு அமைந்ததாக மாகாண முதலமைச்சர்கள் கூறியிருந்தனர்.
அடுத்து வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர் கொள்ளும் வகையில், இலங்கை சுதந்திரக் கட்சிக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்குடன்-மகிந்த ராஜபக்சவை மாகாண முதலமைச்சர்கள் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.
இந்தச் சந்திப்புக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரச தலைவர் சம்மதித்தால் தேசிய அரசைக் கலைத்து

# புதிய அரசை அமைப்பதற்கு ஒத்துழைப்பு

### பிவித்துரு ஹெல உறுமய தெரிவிப்பு

கொழும்பு,ஜன.25
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான உயிர் அச்சுறுத்தலான தேசிய அரசைக் கலைத்துவிட்டு, புதிய அரசொன்றை அமைப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்வந்தால், அதற்கு ஒத்துழைப்பு வழங்கத்தயார் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் முக்கிய பங்காளிக் கட்சியான பிவித்துரு ஹெல உறுமய தெரிவித்துள்ளது.
அமெரிக்காவின் உளவுத்துறையான சீ.ஐ.ஏ. மற்றும் இந்திய உளவுப்பிரிவான றோ ஆகியோரே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் இணைத்துள்ளனர். இந்தப் பிடியிலிருந்து மீண்டு வருவதானது அரச தலைவருக்கு மிகவும் சவாலான விடயம் எனவும், அக்கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பங்காளிக் கட்சியானபிவித்துருஹெல உறுமயவின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில்நேற்றுமுன்தினம்நடைபெற்றது.
இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்ததாவது:
'தேர்தலொன்று நெருங்கும்போது, இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவர்களுக்கு மகிந்த ராஜபக்ச நினைவுக்கு வருவார். ஏதாவது காரணத்தைக் கூறி, அவரைத்தமது மேடையில் வரவழைக்காவிட்டால் வேட்பாளர்கள் படுதோல்வியை எதிர்கொள்வார்கள். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சுதந்திரக் கட்சியின் தலைவராக இருக்கும் வரை அக்கட்சியில் இணைந்து தேர்தலுக்கு களமிறங்குவதில்லை என்பதை ஏற்கனவே நாங்கள் கூறியிருக்கின்றோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலைநாங்கள் இணைந்து- எதிர்கொண்டால் வெற்றி நிச்சயம். இத்தேர்தலை கூட்டணியாக எதிர்கொள்ளாவிட்டால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தேசத்துரோக செயற்பாடுகள் குறித்து அரச தலைவருக்கு அதிருப்தி காணப்பட்டால் புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கலாம்.
எனினும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வருவார் என்பது கனவிலும் நினைக்க முடியாது. அது உயிருக்கு ஆபத்து ஏற்படும் தீர்மானமாகிவிடும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை அமெரிக்காவின் சி.ஐ.ஏ. மற்றும் இந்தியாவின் றோ ஆகிய உளவுப் பிரிவுகளே ஒரே குவளையில் இட்டு கொங்கிரீட் இட்டிருக்கின்றன. தலையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இருவரும் சண்டை பிடித்தாலும் கூட அவர்கள் கொங்கிரீட்டில் சிக்கியுள்ளதால், அதிலிருந்து மீண்டுவரமுடியாது.
எவ்வாறாயினும் அந்தத் துணிகரமானதீர்மானத்தை அரச தலைவர் எடுப்பாராகில், அரசைக்கவிழ்ப்பதற்கு நாங்கள் ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவே இருக்கின்றோம் -என்றார். (ஐ)

## புதிய அரசமைப்பில் கரையோர மாவட்டத்தை இணைக்கவேண்டும்

### இல்லையேல் பதவியை துறப்பேன் என்கிறார் ஹரீஸ்



மட்டக்களப்பு,ஜன.25
'புதிய அரசமைப்பில் கரையோர மாவட்டம் என்ற விடயத்தை உள்ளடக்கி , கரையோர மாவட்டத்தை உருவாக்கா விட்டால் இந்தப் பிரதி அமைச்சர் பதவியை தூக்கி எறிந்து விட்டு, இந்த மண்ணுக்கு வந்து மக்களோடு மக்களாக இருப்பேன்' என, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், விளையாட்டுத் துறைப் பிரதி அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.
கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட நற்பிட்டிமுனையில் வாழ்வெழுச்சித் திட்ட சமுதாய அடிப்படை வங்கித் திறப்பு விழா, கல்முனை பிரதேச செயலாளர் எம்.எச். முகம்மட்கனிதலைமையில் நடைபெற்றது. இதில்தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு வங்கியைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசு, அரசமைப்பை மாற்ற வேண்டும் புதிய சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று முற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த அரசியல் மாற்றத்திலே முஸ்லிம் சமூகத்தினுடைய இருப்பைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக எமது கட்சியும், தலைமையும்-நாங்களும் போரடிக்கொண்டிருக்கின்றோம்.
இன்றைய அரசு வடக்கு-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படுகின்ற போது இங்கு வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை அரசு முன்வைக்க வேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.
கடந்த கால போர் காரணமாக கிழக்கு மாகாணத்தில் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர். இந்த மக்களின் வாழ்வாதாரம், வாழ்க்கைத் தரம் இன்னும் உயரவில்லை. இவற்றுடன் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இன்றைய நல்லாட்சி அரசு தீர்த்துவைக்க முன்வரவேண்டும்.
தமிழ், முஸ்லிம்சிறுபான்மை மக்களின் வாக்குகளினால் தான் இன்றைய நல்லாட்சி அரசு ஆட்சி அமைக்க முடிந்தது. இந்த நல்லாட்சியிலே இந்த மக்களுக்கு அநீதிகள் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது. இன்று மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு அரசு நல்ல தீர்வுகளை முன்வைக்க வேண்டும் - என்றார். (ஐ)

## தமிழர்களின் இறைமையைப் பாதுகாக்கும் வகையில் நியாயமான தீர்வுவேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



கொழும்பு,ஜன.25
தமிழ் மக்கள் பழைமையானதும், ஆழமானதுமான வரலாற்றைக் கொண்டவர்கள். அவர்களை அழித்து விடலாமென நினைத்தால் அது சாத்தியப்படாத ஒன்றாகும். நாட்டில் பல பகுதிகளிலும் வாழும் சகல தமிழ் மக்களினதும் இறைமையைப் பாதுகாக்கும் வகையில் நியாயமான தீர்வு அமைய வேண்டும் என எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வலிறுத்தியுள்ளார்.
அதேநேரம் இந்தச் செயற்பாடுகளுக்கான எமது ஒத்துழைப்புக்கள் எத்தகையது என்பதை அதிகாரத்தில் உள்ளவர்கள் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். விசுவாசத்தை மையப்படுத்தி தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம்.
கொழும்பு-பம்பலப்பிட்டி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் 30 ஆவது அகவையை முன்னிட்டு இராமகிருஷ்ண மண்டபத்தில் நேற்றுஇடம்பெற்ற 'நர்த்தன ஒளி' என்ற இசை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இன்று தமிழ் மக்கள் பல நெருக்கடிகளை எதிர்கொள்ளும் காலமாகும். இவ்வாறான நிலைமையில்தான் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் வரையில் பார்த்துக் கொண்டுள்ளோம். தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எம்மாலான சகல உதவிகளையும் நாம் வழங்கியுள்ளோம். அதனால் எமது எதிர்பார்ப்பு, அதாவது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு போன்று நியாயமானதொரு தீர்வு கிடைக்கும் பட்சத்தில் அதனை நாம் ஏற்றுக் கொள்வோம். மாறாக நியாயமற்ற தீர்வு கிடைக்கப்பெறுமாயின் அதனை ஏற்கமாட்டோம்.
தமிழ் மக்கள் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள நிலையில், அரசியல் ஒருபுறமிருக்க எமது மக்களும் அவர்களின் பிள்ளைகளும் எமது கலாசாரத்தைப் பின்பற்றி வாழ வேண்டிய சூழல் உருவாக வேண்டும்.
நெருக்கடியுடன் வாழ்ந்தாலும், தமிழ் மக்கள் இன்று இந்தியா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா, உள்ளிட்ட பல நாடுகளிலும் வாழ்கின்றனர். அவர்கள் இங்கிருந்து சென்றவர்கள். எனவே அவர்களின் பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் கண்டுள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். கல்வியின் பெறுமதியை அவர்களும்-அவர்களுடைய பெற்றோரும் உணர்ந்து கொண்டுள்ளனர். அதேபோல் அவர்கள் இந்நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு இந்தநாடும் உரியது என்ற வகையில் அவர்களுடனான தொடர்புகள் தொடர்ந்தும் பேணப்பட வேண்டியவையாகும்.
நாம் பழைமையான சரித்திரம் கொண்ட தமிழர்கள். ஆழமான வரலாறு எமக்கு இருக்கின்றது. அதனை சகலரும் உணர்நது கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு முதல் தமிழர்களான நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் எமது இறைமையை அந்நியர்களுக்கு கொடுத்தவர்கள். அதனால் நாட்டின் பல பகுதிகளிலும் பரந்து வாழும் தமிழ் மக்களின் இறைமையை பாதுக்காக்கின்ற வகையில் எமக்கான நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும். அவ்வாறான ஒரு தீர்வு கிட்டும் பட்சத்தில் மாத்திரமே நாட்டில் நிரந்தரமான சமாதானம் உருவாகும்.
அதேநேரம் இன்று தமிழ் மக்கள் மத்தியில் உருவாகியுள்ள கல்வியின் அடிப்படையிலான எழுச்சி தமிழர் வாழும் பகுதிகளான மலையகம்-வடக்கு- கிழக்கு மற்றும் கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளிலும் ஏற்பட வேண்டும் - என்றார். (ஐ)

### அமெ. குழுவினர் இலங்கைக்கு வருகை

# இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் அமைச்சர்கள், அதிகாரிகளுடன் பேச்சு

கொழும்பு,ஜன.25
அமெரிக்காவின் மிலேனியம் சவால் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்திய பிரதி உதவித் தலைவர், பாத்திமா சமர் உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.
இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும், வறுமையை ஒழிக்கவும், மிலேனியம் சவால் உதவித் திட்டத்தில் இலங்கையை 5 ஆண்டுகளுக்கு சேர்த்துக் கொள்ள, மிலேனியம் சவால் ஒத்துழைப்பு அமைப்பு கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முடிவு செய்திருந்தது.
இந்த நிலையில், இலங்கை அரசுடன் இணைந்து பொருளாதார அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பில் ஈடுபடுவது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக, உயர்மட்டக் குழுவொன்றை மிலேனியம் சவால் ஒத்துழைப்பு அமைப்பு கொழும்புக்கு அனுப்பியுள்ளது.
அமெரிக்காவின் மிலேனியம் சவால் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்திய பிரதி உதவித் தலைவர், பாத்திமா சமர் தலைமையிலான இந்தக் குழுவினர், நேற்றுக் கொழும்பில் இலங்கை அரசு தரப்பு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்தனர்.



இலங்கையின் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் அமைச்சர் ஏரான் விக்கிரமரத்ன உள்ளிட்டவர்களை மிலேனியம் சவால் அமைப்பின்பிராந்தியபிரதிஉதவித் தலைவர் பாத்திமா சமர் உள்ளிட்ட குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.
வளர்ச்சியின் மூலம் வறுமையை ஒழித்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி மூலோபாயங்கள் குறித்து இந்தச் சந்திப்புகளில் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக பாத்திமா சமர் தெரிவித்துள்ளார். (ஐ)

## தேங்காய்க்கு தட்டுப்பாடு வரும்

கொழும்பு,ஜன.25
நாட்டில் நிலவுகின்ற வறட்சியான காலநிலை காரணமாக, எதிர்காலத்தில் தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.
நாட்டுக்குள் தற்போதே தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக, லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பிரியந்தி பெர்ணான்டோ தெரிவித்தார்.
கடந்த வருடம் ஏற்பட்டிருந்த கடுமையான வறட்சியின் காரணமாகவே இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதாகவும், தற்போது நிலவுகின்ற வறட்சியான காலநிலை காரணமாக, தெங்கு வளர்ப்பைப் பாதுகாப்பதற்குத் தேவையான முன்னேற்பாடுகள் தொடர்பில் லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## அம்பாந்தோட்டையில் சீனாவுக்கு காணி வழங்குவதை எதிர்த்து மனு

### அடுத்த மாதம் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு

கொழும்பு,ஜன.25
அம்பாந்தோட்டையில் முதலீடு செய்வதற்காக 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை சீனாவுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு எதிராக, தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.
கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவினால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த மனுவில், திறந்த சந்தைக்கான கேள்விப்பத்திரம் கோர வேண்டும் எனவும், அதற்கான கொள்முதல் வழிகாட்டல் அல்லது கைநூலுக்கு அமைவாக சீன நிறுவனம் முதலீட்டுக்காக பரிந்துரைக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கைத் துறைமுக அதிகார சபையுடன் கலந்துரையாடாமல் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வாசுதேவ நாணயக்கார தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.
பிரதமர், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர், நிதியமைச்சர், அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு உறுப்பினர்கள், சீனாவின் அரசுக்குச் சொந்தமான நிறுவனம், சபாநாயகர், அரசமைப்புப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
மனுதாரர் தரப்பில் சட்டத்தரணி மனோகர த டி சில்வா நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார். (ஐ)

## நாட்டில் இலவசக் கல்வி சகலருக்கும் வழங்கப்படும்

### ஜனாதிபதி உறுதி



கொழும்பு,ஜன.25
'நாட்டில் அனைத்துப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வியை உறுதி செய்து, கல்வி கற்றபரம்பரையைக்கொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
புதிய தொழில்நுட்பம், வர்த்தகமயமாதல், போட்டித் தன்மை போன்ற அம்சங்கள் பல்வேறு சவால்களை ஏற்படுத்தியிருக்கின்ற நிலையில், எமது கலாசாரத்தைப் பாதுகாத்து முன்னேறிச் செல்வதற்கு எமது பிள்ளைகள் தயாராக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.
கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு நாணயத்தை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, ஜனாதிபதியிடம் கையளித்தார். (ஐ)

## லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பிரதேச செயலருக்கு மறியல்

கொழும்பு,ஜன.25
காசோலையொன்றை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு லட்சம் ரூபா லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட, லக்கல பிரதேச செயலாளர் எதிர்வரும் 6 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொழும்பு பிரதான நீதிமன்றில் நேற்று முன்தினம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
லக்கல தோரபிடிய பிரதேசத்திலுள்ள பாதைக்கு கொங்கிரீட் இட்டதற்கான காசோலையை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்காக, லஞ்சம் பெற்றதாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

# திருமலையைப் பொறுப்பேற்க இந்தியா நிபந்தனைகள்

### இலங்கை அரசுக்கு இழப்பு ஏற்படும் அபாயம்

கொழும்பு,ஜன.25
திருகோணமலை துறைமுகத்தின் முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்பதற்கு இந்தியா புதிய நிபந்தனைகளை விதித்திருப்பதாக உயர்மட்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டி, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.
இந்திய அரசின் இந்தநிபந்தனைகளுக்கு அமைய உடன்பாடு செய்து கொள்ளப்பட்டால், இலங்கை அரசுக்கு பெரிய இழப்புகளை ஏற்படும் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்தியாவின் உதவியுடன் திருகோணமலைத் துறைமுகத்தை இயக்குவது உள்ளிட்ட திருகோணமலையை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதாக, இலங்கையின் பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் தகவல் வெளியிட்டிருந்தார்.
சிறப்பு பொருளாதார வலயத்தை உள்ளடக்கியதாக அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்கியது போன்று, இந்தியாவுடன் திருகோணமலைத்துறைமுகம் தொடர்பான உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதற்கான திட்டத்தை இலங்கை அரசு முன்வைத்திருந்தது.
எனினும் சமனிலைப்படுத்தும் உடன்பாடுகளில் இந்தியா ஆர்வம் காட்டவில்லை என்றும், நீண்டகால நோக்கில் திருகோணமலைத் துறைமுகம் வருமானத்தைப் பெற்றுத் தராது என்று இந்தியா கருதுவதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுவிஸில் புகலிடம் கோரிய இலங்கையர்களே அதிகம்

கொழும்பு,ஜன.25
சுவிட்ஸர்லாந்தில் புகலிடம் கோரியவர்களில் அதிகமானவர்கள் இலங்கையர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மத்திய கிழக்கு, ஆசிய மற்றும் ஆபிரிக்க குடியேற்றவாசிகள் பயன்படுத்த பால்கன் பிராந்திய தரைவழி மார்க்கம் மூடப்பட்டதை அடுத்து, சுவிட்ஸர்லாந்தில் புகலிடம் கோருவோரின் எண்ணிக்கை மூன்றில் ஒன்றாகக் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்பிரகாரம் 27 ஆயிரத்து 200 பேர் சுவிட்ஸர்லாந்தில் புகலிடம் கோரியுள்ள அதேவேளை, இவ்வாண்டு 24 ஆயிரத்து 500 பேர் புகலிடம் கோருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக குடிவரவு தொடர்பான செயலகம் கூறியுள்ளது.
மத்தியதரைக் கடலுக்கு ஊடாக அகதிகளின் வருகை மற்றும் துருக்கி ஊடான குடியேற்றவாசிகள் குறித்த உடன்படிக்கை கிடப்பில் போடப்படும் பட்சத்தில் இந்த எண்ணிக்கை 32 ஆயிரம் வரை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விளையாட்டரங்கு திறப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஜன. 25
காரைநகர் இந்துக் கல்லூரியின் விளையாட்டரங்கு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குத் திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி சிவந்தினி சாக்சன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சிறு வர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## அரசியல் கைதிகள் நாளை அடையாள உணவு ஒறுப்பு

### வவுனியா உறுவுகளின் போராட்டத்துக்கு ஆதரவாக

யாழ்ப்பாணம், ஜன. 25
சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நாளை வியாழக்கிழமை ஒருநாள் அடையாள உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்தனர்.
தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினர் வவுனியாவில் நடத்தி வரும் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஆதரவோகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.
மகசீன் சிறைச்சாலையிலுள்ள 80 பேரும், அனுராதபுரம் சிறைச்சாலையில் 18பேரும், கண்டி சிறைச்சாலையில் 19பேரும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 10 பேரும் மற்றும் ஏனைய பகுதிகளிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளும் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## அடாவடியில் ஈடுபட்டோருக்கு விளக்கமறியல்

யாழ். ஜன. 25
வாள்வெட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
ஆவரங்கால் மேற்கில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுடன் தொடர்புடையவர்கள் என்பது விசாரணையில் தெரியவந்தது.
அதனடிப்படையில் 19,22,24 வயதுடைய 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மல்லாகம் நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.
சந்தேகநபர்கள் மூவரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (வ-4)

## குழு மோதலில் ஈடுபடுவோரை பிணையில் விடுவிக்க முடியாது

### சாவகச்சேரி நீதிவான் கட்டளை

சாவகச்சேரி, ஜன. 25
தனிப்பட்ட சிறு பிரச்சினையை பூதாகாரமாக்கி குழு மோதலில் ஈடுபடுவதை நீதிமன்றம் அனுமதிக்கமாட்டாது. இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு நீதிமன்றம் பிணை வழங்காது.
இவ்வாறு 10 சந்தேகநபர்கள் சார்பாக சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட பிணை மனுக்களை நிராகரித்துக் கட்டளையிட்டார் சாவகச்சேரி நீதிவான்.
நுணாவில் மத்திப் பகுதியில் இரு தரப்புகளுக்கு இடையே நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் மோதல் இடமபெறுவதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மோதலில் ஈடுபட்ட பத்துப் பேரைக் கைது செய்து இரு தரப்புகளுக்கும் எதிராக நீதிமன்றில் 3 பிரிவுகளாக வழக்குத் தாக்கல் செய்தனர்.
இந்த வழக்குகள் நேற்று பிற்பகல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் இவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு மன்றில் மனுக்களை முன்வைத்தனர்.
தனிப்பட்ட இருவருக்குகிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தைப் பெரிதாக்கி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக் குழுவாகச் சென்று மோதலில் ஈடுபட்டமை சாதாரண குற்றச் செயல் அல்ல. சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு போன்றவை இல்லாதவர்களை பிணையில் விட நீதிமன்றம் அனுமதிக்காது என்று கட்டளையிட்ட நீதிவான், சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட பிணை மனுக்களை நிராகரித்தார்.
சந்தேகநபர்கள் 10 பேரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.
இந்தப் பதினொரு பேரும் நுணாவில் மேற்கு, நுணாவில் மத்தி மற்றும் மட்டுவிலைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ- 9)

### வானூர்தி மீது ஏவுகணையை ஏவிய குற்றச்சாட்டு

## தமிழ் அரசியல் கைதியின் குற்ற ஒப்புதல் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ்ப்பாணத்தில் வானூர்தி மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தி 4 படையினரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.
1999ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து இலங்கை வான் படைக்குச் சொந்தமான வானூர்தி மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட் டது. அதில் பயணித்த வான் படை அதிகாரி, வானோடி, வான் படை சார்ஜன்ட், வான் படைக் கோப்ரல் ஆகியோர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் தில்லைராஜா என்பவர் கைது செய்யப்பட்டார். ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாக அவருக்கு எதிராகப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் குற்றஞ்சாட்டினர். அந்தக் குற்றச்சாட்டுடன் அவருக்கு எதிராகக் கடந்த வருடம் மார்ச் 15ஆம் திகதி சட்டமா அதிபரினால் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கின் விசாரணைகள் இடம்பெற்றன. வழக்கின் ஆதாரமாகச் சந்தேகநபரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் முன்வைக்கப்பட்டது. எனினும் சந்தேகநபரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுதந்திரமாகவும், சுயேச்சையாகவும் பதிவு செய்யப்படவில்லை என்று கடந்த மாதம் 17ஆம் திகதி இடம்பெற்ற விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட அவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மன்றால் நிராகரிக்கப்பட்டது.
இந்த வழக்கு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. சந்தேநபர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன், வேறு சாட்சிகள் இருந்தால் சட்டமா அதிபர் ஊடாக மன்றில் முற்படுத்தும்படியும் நீதிபதி உத்தரவிட்டார். (வ-4)

## தாய் மண் எழுச்சிப் பேருரை யாழ். பல்கலையில் இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழகத்தின் சூழலியல் விவசாயச் செயற்பாட்டாளர் ரேவதி மாரிமுத்து வின் தாய் மண் எழுச்சிப் பேருரை இன்று புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.
விளைநிலங்கள் அசேதன உரப் பாவனையால் மலடாகிப் போனதால் மனித சமுதாயம் மிக இக்கட்டான சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. அதில் இருந்து மீளுவதற்கான வழிகள் என்ன என்று சிந்திக்கின்ற இன்றைய காலகட்டத்தில் ரேவதி மாரிமுத்துவின் கண்டுபிடிப்புக்கள் ஒளியூட்டுபவையாகவுள்ளன. விவசாயிகள் பலருக்கு விவசாயத்தில் மாற்று வழிகளைக் காட்டி அவர்களின் வாழ்வில் மாற்றத்ததை அவர் ஏற்படுத்தியுள்ளார். சூழல் நேய விவசாயம் மற்றும் இயற்கை வேளாண்மை என்பவற்றுக்கு செயல்முறை அனுபவங்கள் மூலம் வழிகாட்டிவருகிறார்.
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு டி ஒழுங்கு செய்திருக்கின்ற இந்த எழுச்சிப் பேருரை நிகழ்வை விவசாயத் துறை பேராசிரியர் ஞா.மிகுந்தன் தலைமைதாங்கி நடத்துகின்றார். தொடக்கவுரையை பேராசிரியர் தி. வேல் நம்பி வழங்கவுள்ளார். இலவசமாக நடைபெறுகின்ற இந்த எழுச்சிப் பேருரை நிகழ்வில் ஆர்வமுள்ளவர்கள் பங்கு கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-10)

### காணி வெளிக்களப் போதனாசிரியர் பதவி

## வடக்கு மாகாண ஆள்சேர்ப்பு போட்டிப் பரீட்சை சனியன்று

போட்டிப் பரீட்சை
யாழ்ப்பாணம், ஜன. 25
வடக்குமாகாணபொதுச்சேவைஆணைக்குழுவினால் காணி வெளிக்களப் போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ரூ.வரதலிங்கம் அறிவித்தார்.
இந்தப் பரீட்சைக்காக விண்ணப்பித்த தகமையுடைய விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலரினால் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
இதுவரை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணபித்த சான்றுகளுடன் யாழ்ப்பாணம், நல்லூர் கோவில் வீதி, இல. 393/ 48 வடக்கு மாகாணம், பொதுச்சேவைகள் ஆணைக்குழு, செயலர் எனும் முகவரிக்கோ அல்லது 0212219939 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்ட பின்னரே பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுவர் என்று வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்தார் . (வ-10)

## கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 25
திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர்.
திருவிழா தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி 8ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.
உற்சவ காலங்களில் மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை மதுரகவி காரை. எம்.பி அருளானந்தனின் தெய்வீக பேருரை நடைபெறும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-10)

## கன்னி அமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்று கல்லூரி அதிபரும் மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான ஐ.தயானந்தராஜா அறிவித்தார். (வ-10)

## யாழ். நகரில் கைதான பெண் தாயாரிடம் பத்திரமாக ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ்.பேருந்து நிலையப் பகுதியில் இரவு நேரம் சந்தேகத்துக்கிடமான நிலையில் நின்றிருந்த போது கைது செய்யப்பட்ட இளம் பெண் நேற்று அவரது தாயாரிடம் நீதிமன்றில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டார்.
பேருந்து நிலையப் பகுதியில் நின்றிருந்த இளம்பெண் ஒருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டார். அவர் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர் என்று விசாரணையின் போது தெரியவந்தது. கொழும்பு தெகிவளையைக் வசிப்பிடமாகக் கொண்டவரெனவும் தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணத்துக்கு வந்தமைக்கான காரணத்தை அவர் தெளிவாக குறிப்பிடாததனால் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். எனினும் பொலிஸாரின் மேலதிக விசாரணைகளின் போது குறித்த இளம் பெண் மனநிலை பாதிக்கப்பட்டவரெனத் தெரியவந்தது. அவரைப் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியவேளை நீதிமன்றின் கட்டளையின் படி நான்கு நாள்களுக்கு நம்பிக்கை இல்லத்தில் தங்கவைக்கப்பட்டார். அதன் பின்னர் நேற்று அவருடைய தாயாரை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர்.
இளம் பெண் மனநிலை பாதிக்கப்பட்டவரா என்பது தொடர்பில் நீதிமன்றம் அவரது தாயாரிடம் விசாரணைகளை மேற்கொண்டது. தனியார் வைத்திய சாலையில் தாதிய உத்தியோகத்தராக தனது மகள் கடமையாற்றியதாகவும் சிறிது நாட்களாகவே இவ்வாறு அவர் நடப்பதாகவும் தாயார் மன்றில் தெரிவித்தார். இதனையடுத்து இளம் பெண்ணை தாயாரின் பொறுப்பில் ஒப்படைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (வ-103)

# பேய்க்குப் பயமெனில் வீட்டைச் சுடுகாட்டில் கட்டியிருக்கமாட்டோம்

### *சிறைக்குள் இருந்து சபைக்கு வந்த வீரவன்ச சூளுரை*

கொழும்பு, ஜன. 25



பேய்க்குப் பயந்தால் நாம் சுடுகாட்டில் வீடு கட்டியிருக்கமாட்டோம். இந்த அரசை விரட்டியடிக்கும் வரை எமது போராட்டம் ஓயாது என்று நேற்றுச் சபையில் சூளுரைத்தார் விமல் வீரவன்ச.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்றுச் சபை அமர்வுகளில் பங்கேற்றார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்குச் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிரணி பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்கவால் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை கொண்டு வரப்பட்டது.

மத்திய வங்கியால் விநியோகிக்கப்பட்ட பிணைமுறி விவகாரத்தில் மோசடி இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கோப் குழு முன்னெடுத்த விசாரணை அறிக்கையின் பிரகாரம் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியே குறித்த விவாதத்தை அநுரகுமார ஆரம்பித்து வைத்தார்.

விவாதத்தின் ஆரம்பத்திலேயே, நபர்களை இலக்கு வைத்து விமர்சனம் முன்வைக்காது – உரிய வகையில் விவாதத்தை முன்னெடுக்குமாறு சகல நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் சபாநாயகர் கேட்டுக்கொண்டார். இதற்குப் பதிலளித்த அநுரகுமார, சபாநாயகரே, உங்கள் கருத்தை மதிக்கின்றோம். இருந்தாலும், திருடர்களை, திருடர்கள் என்றுதான் அழைக்க முடியும் என்று குறிப்பிட்டார். இதனால், சபையில் பெரும் சிரிப்பொலி ஏற்பட்டது.

இதன் பின்னர் நாடாளுமன்றத்தில் ஆளும், எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரசன்ச அவைக்குள் வந்த பிறகு சர்ச்சை நிலை வலுப்பெற்றது. எதிரணி உறுப்பினர்கள் அவரை வரவேற்றனர். அதன் பின்னர் தனதுரையைத் தொடர்ந்த விமல், பிணைமுறி விவகாரம் குறித்து கருத்துக்களை வெளியிட்ட பின்னர், நாட்டுக்காகக் குரல் கொடுப்பவர்களை அரசு சிறையில் அடைப்பதாகவும் குற்றம் சுமத்தினார். சிறையில் அடைத்து எமது குரலை நசுக்கிவிடலாம் என்று எவரும் நினைக்கக்கூடாது. அது ஒருபோதும் நடக்காத விடயம். பேய்க்குப் பயந்தால் நாம் சுடுகாட்டில் வீடு கட்டியிருக்கமாட்டோம். இந்த அரசை விரட்டியடிக்கும் வரை எமது போராட்டம் ஓயாது என்றார் விமல்.

விமலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின், தனதுரையைத் தொடர்ந்தார். தனது குடும்ப உறவினர்களுக்கு அரச வாகனங்களைக் கொடுத்தவரெல்லாம், ஊழல் பற்றிப் பேசுவது வேடிக்கை என சொற்கணை தொடுத்துக்கொண்டிருந்தார். இதனால், மகிந்த அணியும் கூச்சலிட்டது. (த-5)

# ட்ரம்பின் பிரதிநிதி கொழும்புக்கு வருகை

### *வெள்ளி வரை தங்கியிருந்து நிலமைகளை ஆராய்வார்*

கொழும்பு, ஜன. 25

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலராக நியமிக்கப்பட்டுள்ள ஏஞ்சலா அக்கேலர், தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக நேற்று கொழும்பு வந்தடைந்தார்.

அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் அதிபராகப் பதவியேற்றதையடுத்து, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவி இராஜாங்கச் செயலர் பதவிக்கு, ஏஞ்சலா அக்கேலர், கடந்த 20ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

இந்தப் பதவியை ஏற்றுக்கொண்டதையடுத்து, முதல்முறையாக இலங்கை வந்துள்ள இவர் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வரை இங்கு தங்கியிருந்து நிலமைகளை ஆராய்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு வந்தடைந்த ஏஞ்சலோ அக்கேலேர் ஊடகத்துறை பிரதி அமைச்சர் கருணாரட்ண பரணவிதானவை சந்தித்து, தகவல் உரிமைச் சட்டம் மற்றும் இலங்கையில் ஊடக சுதந்திரம் தொடர்பாகக் கேட்டறிந்தார்.



அதையடுத்து, சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் ஏஞ்சலா அக்கேலர், சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார். இவர் தமது பயணத்தின் முடிவில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அறிக்கை ஒன்றை முன்வைப்பார் என்று அமெரிக்கத் தூதரகத் தகவல்கள் தெரிவித்தன. (வ-5)

# தப்பியோடியவர் நேற்று சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜன. 25

கசிப்பு உற்பத்தி செய்யப் பயன்படுத்தும் 160 லீற்றர் கோடாவை வீட்டு வளவில் புதைத்து வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் தப்பியோடியிருந்த நிலையில் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை காந்தியூர் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். தமக்குக் கிடைத்த தகவலின்படி நேற்றுமுன்தினம் அவரது வீட்டுக்குச் சென்றபோது அவர் தப்பியோடிவிட்டார். அவரது வீட்டின் பின்புறமாக பெரலில் வைத்து நிலத்தில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் கோடா மீட்கப்பட்டது. 160 லீற்றர் கோடாவும் பெரலுடன் மீட்கப்பட்டது.

விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,26)

# இந்தியத் தொழிலதிபர்களுடன் யாழ். நகரில் சிறப்புச் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

இந்திய தொழில் முயற்சியாளர்களைச் சந்திக்கும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெறும் என்று யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்தது.

வாகன உதிரிப் பாகங்கள், உணவு வகைகளின் பதனிடல், பொதியிடல், சமையலறை வாயுக்களின் உற்பத்தி, எண்ணெய் வகைகளின் உற்பத்தி, விவசாயப் பொருள்களின் உற்பத்தி, ஏற்றுமதி இறக்குமதி பிளாஸ்ரிக் பொருள்களின் உற்பத்தி மற்றும் மீள் உருவாக்கம், இயந்திர உபகரணங்களின் தயாரிப்பு, உதிரிப் பாகங்களின் உற்பத்தி, கட்டடப் பொருள்களின் நவீன வடிவங்களின் உற்பத்தி, ஆபரணங்கள் தயாரிப்பு, கவறிங் நகைகளின் உற்பத்தி, கைவினைப் பொருள்களின் உற்பத்தி, இறப்பர் பொருள்களின் உருவாக்கம், அலுவலக உபகரணங்களின் புதிய வடிவங்களின் தயாரிப்பு போன்ற அனைத்து வகையான தொழிற்றுறைகளில் தற்போது இந்தியாவில் மிகப் பிரபலமாக உள்ள நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொள்கின்றனர்.

இதில் உள்ளூர் தொழிற்றுறையினரும் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. இந்தச் சந்திப்பில் தொழிற்றுறைகளில் ஈடுபட்டுள்ளோரும், ஆர்வமுடைய தொழிற்றுறையினரும் பங்குபற்ற முடியும் என்று யாழ்ப்பாண வணிகர் கழகம் தெரிவித்தது. (வ-10)

அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்டத்தால்

# சீனா – கொழும்பு உறவில் ஒருபோதும் பாதிப்பு ஏற்படாது

### *அந்த நாட்டுத் தூதுரகம் உத்தரவாதம்*

கொழும்பு, ஜன. 25

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களால் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான நெருக்கமான உறவுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படமாட்டாது என்று கொழும்புக்கான சீனத் தூதுரகம் உறுதிபடத் தெரிவித்தது.

பன்னாட்டு மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களும் உள்நாட்டு அரசியல் நிகழ்ச்சிநிரல்களும் இருதரப்பு உறவுகளில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தமாட்டா என்றும் சீனா குறிப்பிட்டது.

கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சீனத் தூதரகத்தின் கலாசார பிரிவுப் பொறுப்பாளர் லீ டொங் மேற்கண்டவாறான கருத்துக்களைத் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாத முற்பகுதியில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இலங்கை அரசின் கொள்கைகள் தொடர்பாக காரசாரமான கருத்துக்களை சீனத் தூதுவர் யீ ஸியாங் லியாங் வெளிப்படுத்தியிருந்தார். எனினும் நேற்றைய மாநாட்டில் பன்னாட்டு செய்தியாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்ட போதும் சீனத் தூதுவர் பங்கேற்கவில்லை. மாறாக சீனாவின் புதுவருடப் பிறப்பு தொடர்பான தகவல்களை வழங்கும் வகையில் சீனத் தூதரகத்தின் கலாசாரப் பிரிவினரே பங்கேற்றிருந்தனர்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 60வருடங்கள் நிறைவடைகின்றமை மற்றும் அரிசி-இறப்பர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட 50 வருடங்கள் நிறைவடைந்தமை ஆகிய நிகழ்வுகளைக் கொண்டாடும் முகமாக இந்த ஆண்டில் பல விழாக்கள் ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகவும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது. (வ-5)

# இராணுவச் சிப்பாய்க்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

கடமையில் இருந்த சக இராணுவச் சிப்பாய்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு தானும் உயிர்மாய்க்க முயன்ற இராணுவச் சிப்பாய் தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றினால் ஒத்திவைக்கப்பட்டது.

2007ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் திகதி இணுவிலில் அமைந்துள்ள இராணுவ முகாம் ஒன்றில் வைத்து 4 இராணுவச் சிப்பாய்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். சக சிப்பாயால் சூடு நடத்தப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட சிப்பாய்க்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வழக்குத் தொடரப்பட்டது.

சம்பவ தினத்தன்று அதிகாலை 2.15 மணியளவில் கடமையில் இருந்த மகிந்த பாலா லக்மல் என்ற சிப்பாய் தனது துப்பாக்கியால் ஏனைய மூன்று இராணுவச் சிப்பாய்களைச் சுட்டதோடு தனக்குத் தானே சூடு நடத்தியுள்ளார். இரண்டு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்ததுடன் அமிதகுமார வலியிட்டே என்ற சிப்பாய் கொல்லப்பட்டார்.

தாக்குதலை நடத்திய இராணுவச் சிப்பாய் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸார் ஊடாக நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கின் சாட்சிகளான தற்போது திக்கம் இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ அதிகாரி, இறந்த இராணுவச் சிப்பாயின் தகப்பனாரும் மன்றில் நேற்றுச் சாட்சியம் அளித்தனர்.

சந்தேக நபரான இராணுவச் சிப்பாயின் துப்பாக்கியில் இருந்து துப்பாக்கிச் சன்னங்கள் வெளியேறி உள்ளதாகவும், சம்பவம் நடந்தபோது குறித்த இராணுவச் சிப்பாயே கடமையில் இருந்தார் எனவும் அரச சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார். இந்த வழக்கு எதிர்வரும் பெப்பரவரி மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. 2 சாட்சிகளுக்கு அழைப்பாணையும் விடுத்தது நீதிமன்று. (வ-4)

# சிறுமியைத் துரத்தியவரை மடக்கிப் பிடித்தனர் மக்கள்

## முறையாகக் கவனித்து பொலிஸாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

கிளிநொச்சி, இராமநாதபுரத்தில் கல்வி நிலையம் சென்று தனியே வீடு திரும்பிய 12 வயதுச் சிறுமியை ஒருவர் துரத்திச் சென்றார். அவரைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. சிறுமியின் பெற்றோர் இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை தனியார் வகுப்புக்குச் சென்று துவிச்சக்கர வண்டியில் சிறுமி வீடு திரும்பினார். மோட்டார் சைக்கிளில் வந்த 30 வயதுடைய நபர் ஒருவர் சிறுமியைப் பிடிக்க முயன்றுள்ளார். சிறுமி தப்பியோடியுள்ளார். அந்த நபர் மோட்டார்சைக்களில் துரத்தியுள்ளார். சிறுமி அவலக் குரல் எழுப்பிய வாறு துவிச்சக்கர வண்டியை போட்டுவிட்டுத் தப்பியோடினார்.

சிறுமியின் குரல் கேட்டு கூடிய அயலவர்கள் அந்த நபரை மடக்கிப் பிடித்தனர். அவரைச் சரியான முறையில் கவனித்து அனுப்பினர். அங்கிருந்து சென்ற அந்த நபர் இளைஞர்கள் சிலரைச் சேர்ந்துக் கொண்டு மீண்டும் அந்த இடத்துக்கு வந்து தன்னைத் தாக்கியவர்களை அச்சுறுத்தினார். அவருடன் கூட வந்த இளைஞர்களிடம் நடந்த சம்பவத்தைக் கிராமத்தினர் கூறினர். அதையடுத்து அவர்கள் அங்கிருந்து சென்று விட்டனர்.

சிறுமியைத் துரத்தியவரை கிராமத்தவர்கள் மீண்டும் பிடித்துக் கொண்டனர். அவரை இராமநாதபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்ததுடன், இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை தனியார் வகுப்புக்குச் சென்று திரும்பிய சிறுமி ஒருவரும் இனந்தெரியாத ஒருவரால் துரத்தப்பட்டார். சிறுமியின் அவலக்குரல் கேட்டு கூடிய அயலவர்கள் சிறுமியை வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டிருந்தனர். (ற-101,6)



யாழ்ப்பாணத்தில் போரால் பாதிக்கப்பட்டுச் சீரமைக்கப்பட்ட பாடசாலைகள், பள்ளிவாசல்களுக்கு யாழ். வை.எம்.சி.ஏயால் ஒரு தொகுது தளபாடங்களும், கூடாரங்களும் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு சின்னப் பள்ளிவாசல் முன்றலில் நடைபெற்றது. யாழ். கதீஜா ஒஸ்மானியா கல்லூரி, மன்பஉல் உலூம் முன்பள்ளி, சின்னப்பள்ளி வாசல் என்பற்றுக்குக் கதிரை மேசைகள், கூடாரங்கள் வழங்கப்பட்டன. (ற)

# முல்லை. கடலில் இறந்து மிதக்கும் சிறிய மீன்கள்

## இந்திய ட்ரோலர்களே காரணம் என கடற்றொழிலாளர்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜன.25

முல்லைத்தீவுக் கடலில் சிறிய மீன்கள் இறந்து மிதக்கின்றன. இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து ட்ரோலர்களில் மீன்பிடிப்பதே அதற்குக் காரணம்.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ம.மரியராசா.

அவர் தெரிவித்ததாவது:

நேற்றுத் தொழிலுக்குச் சென்ற எமது மீனவர்கள் கடலில் சிறிய மீன்கள் இறந்து மிதக்கின்றன என்று கூறினர். இந்திய இழுவைப் படகுகள் பெரிய மீன்களைப் பிடித்துக் கொண்டு சிறிய மீன்களை நடுக் கடலில் கொட்டி விட்டுச் செல்வது வழக்கம். முல்லைத்தீவுக் கடலில் சில நாள்களாக இந்திய ட்ரோலர் படகுகளின் நடமாட்டங்களை அவதானித்துள்ளோம். பன்னாட்டுக் கடல் எல்லையால் வரும் இந்திய இழுவைப் படகுகளைக் கைப்பற்றுவதற்கு கடற்படையினர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார்.

முல்லைத்தீவுக் கடலில் பருவகால மீன்பிடி ஆரம்பித்துள்ளது. நேற்று முன்தினம் முல்லைத்தீவுக் கடலில் இந்திய ட்ரோலர் படகுகள் கரையில் இருந்து 6 கடல் மைல் தூரத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்ததை அந்தப் பகுதி மீனவர்கள் கண்டுள்ளனர். அது தொடர்பாக மாவட்ட செயலருக்கும், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளருக்கும் தெரியப்படுத்தினர். மாவட்ட செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அது தொடர்பாக கடற்படையினருக்கு அறிவித்தார். கடற்படையினர் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் வலியுறுத்தியிருந்தனர். இந்த நிலையில் நேற்று சிறிய மீன்கள் கடலில் இறந்து மிதக்கின்றன என்று கடற் றொழிலாளர்கள் கூறியுள்ளனர். (ற-5,7)



வவுனியா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை முதல் கன மழை பெய்கின்றது. நேற்றுக் காலையும் மழை தொடர்ந்தது. மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது. வறட்சியான காலநிலை நிலவிய நிலையில் மழை பெய் துள்ளமை மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ற)



வவுனியாவில் பொருத்தப்பட்ட வீதி விளக்குகளில் பல ஒளிர்வதில்லை என்றும், முக்கிய சந்திகளில் மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை என்றும் பொதுமக்கள் முறையிட்டதை அடுத்து வவுனியா நகர சபைப் பணியாளர்களும், மின்சார சபை ஊழியர்களும் இணைந்து புதிய மின் விளக்குகளைப் பொருத்தி வருகின்றனர். (ற)

# கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்க மருத்துவர் பின்னடிப்பு

## மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 25

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் கிளினிக் நடைபெறும் நாள்களில் அவசர நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்க மருத்துவர் பின்னடிக்கின்றார். நோயாளிகளை வேறு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் அவலநிலை ஏற்படுகின்றது.

இவ்வாறு பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையைப் பத்துக்கு மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்துகின்றனர். இரு வைத்திய அதிகாரிகள் கடமையில் உள்ளனர். அண்மையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் கற்கும் மாணவிக்கு வயிற்று வலியும் காய்ச்சலும் ஏற்பட்டது. கல்லூரி நிர்வாகத்தினர் பெற்றோருக்கு அறிவித்து விட்டு மாணவியை அழைத்துக் கொண்டு சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். இங்கு பொறுப்பதிகாரி இல்லாத நிலையில் கடமையிலிருந்த பெண் வைத்திய அதிகாரி மாணவியைப் பார்வையிட மறுத்து, கிளினிக் நோயாளர்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். நோயாளியைச் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு பணித்தார். பின்னர் மாணவியை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை வழங்கப்பட்டது. சம்பவம் தொடர்பாகப் பெற்றோர் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவிடம் முறையிட்டுள்ளனர். இதே நிலைதான் ஏனையவர்களுக்கும் வரும்.- என்று அவர்கள் தெரிவித்தனர்.

"பிரதேச வைத்தியாசலைகளில் கிளினிக் நாள்களில் ஆகக் கூடுதலான அவசர நோயாளியைத் தவிர, வெளி நோயாளியைப் பார்வையிடாமல் கிளினிக் நோயா ளிகளை மட்டும் பார்வையிடலாம் என்ற சுற்றறிக்கை உள்ளது. கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் இப்படியான சம்பவம் நடந்ததாக எனக்கு எந்தவிதமான முறைப்பாடும் வரவில்லை. இது தொடர்பர்க விசாரணை செய்து தீர்க்கமான முடிவெடுக்கப்படும்"- என்று யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நந்தகுமார் தெரிவித்தார். (ற-10, 9)

# சிலவற்றைக் கவனித்துச் செயற்பட்டால் நெற் செய்கையில் வெற்றி பெறலாம்

## விவசாய ஆராய்ச்சியாளர் ரேவதி மாரிமுத்து தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜன.25

விவசாயிகள் நெல் விதைக்கும் போது சில விடயங்களை கவனிக்காது விடுவதால் விவசாயத்தில் வெற்றி பெறமுடியாதுள்ளது. நெல்விதைகள் 22 மில்லி கிராம் இருக்க வேண்டும். அவ்வாறன நெல் விதைகளே எமக்கு அதிகளவான விளைச்சல்களைத் தரும்.

இவ்வாறு விவசாய ஆராய்ச்சியாளர் ரேவதி மாரிமுத்து தெரிவித்தார்.

வடக்கு மாகான விவசாய அமைச்சின் உழவர் விழா கோப்பாய் கிறிஸ்தவுக் கல்லூரியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

விவசாயிகள் நெல் பயிரிடுவதற்கு முன்னர் நெல் விதைகளை தேர்ந்தெடுக்க சில உபாயங்களைக் கையாள வேண்டும். நெல் விதைகள் 22 மில்லிகிராம் கனம் கொண்டதா என்பதை அறிய 15 லீற்றர் தண்ணீரில் உப்பைச் சேர்க்க வேண்டும். நீரின் அடர்த்தித் தன்மையை அறிந்து கொள்ள முட்டை ஒன்றை நீரில் இட வேண்டும். முட்டை மிதக்கும் பட்சத்தில் அது அடர்த்தி கூடிய நீராக உள்ளது என்பதை உறுதி செய்யலாம்.

உங்கள் நெல் விதைகளை அடர்த்தியான நீரினுள் இட வேண்டும். நீருக்குள் தாழ்கின்ற நெல் விதைகளே விதைப்பதற்கு உகந்த விதைகளாகும். நீரில் மிதக்கும் விதைகள் அதிக பயனை தராத விதைகளாகும்.

இந்த முறையை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களாயின் எதிர்பார்க்கின்ற விளைச்சலை பெறமுடியும்.

இரசாயன உரங்களை பயன்படுத்தி நாம் எங்கள் சூழலில் வாழ்ந்த பல பூச்சி இனங்களை அழித்து விட்டோம். விவசாயிகளுக்கு அனைத்துப் பூச்சிகளும் எதிரிகள் இல்லை. விவசாயிகளின் பயிர்களுக்குள் இருக்கும் பூச்சிகளை தும்பி போன்றன உண்டு வந்தன. இப்போது அதிகளவான இரசாயன உரங்களை பயன்படுத்துவதால் பறவைகள் பல அருகி வருகின்றன.

இரசாயனப் பொருள்களை உபயோகிக்கும்போது அவற்றை எதிர்த்து நிற்கக்கூடிய பூச்சிகளும், களைகளும் உருவாகின்ற நிலமையையும் அவதானிக்க முடிகின்றது.

உலக அளவில் இடம்பெற்ற மண் ஆய்வில் மண்புழுக்கள் அதிகளவில் இருக்கின்ற மண்ணே சிறந்த விவசாய மண்ணாகும். அவ்வாறன நிலங்களில் பயிரிடும் போது சிறந்த பயனைப் பெறமுடியும். நவீன காலத்தில் உழவியந்திரங்கள், இருசக்கர உழவியந்திரங்களைப் பயன்படுத்தி உழுவதனால் மண்புழுக்கள் அழிவடைந்து விவசாய நிலங்களின் தன்மைகளும் பாதிப்படைகின்றன.- என்றார். (ற-8)

## காணி சிறப்பு இணக்க சபை மார்ச் முதல்

காணி தொடர்பாக சிறப்பு இணக்க சபை தொடர்பில் பெப்ரவரி மாதம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு தொடர்ந்து மார்ச் மாதம் தனது செயற்பாட்டை முழுமையாக மாவட்ட மட்டத்தில் ஆரம்பிக்கும்.

நீதியமைச்சின் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் மூத்த மத்தியஸ்தரும் அதிகாரியுமான யசபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு தெரிவான விசேட மத்தியஸ்தர்களுக்கான இறுதிக் கட்ட சட்டம் மற்றும் நிர்வாகம் சம்பந்தமான விசேட பயிற்சி யாழ். மாவட்டப் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்டு நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவினால் சான்றிதழ் வழங்கப்பட்டு விசேட மத்தியஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்ட 42 பேருக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அதில் கலந்து கொண்ட நீதியமைச்சின் அதி காரி யசபால டி சில்வா தெரிவித்ததாவது :

யாழ்ப்பாணத்தில் 350 பேரும், கிளிநொச்சியில் 150 பேருமாக மொத்தம் 500 பேருக்கும்மேற்பட்டோர்விசேடமத்தியஸ்த சபைக்காக விண்ணப்பித்திருந்தனர்.

இரு மாவட்டங்களிலும் இருந்து மிக வினைத் திறனான 42 பேர் மட்டுமே கல்வித் தகைமை, பயிற்சி, பரீட்சை, ஒழுங்கு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலாளர் மட்டத்தில் இடம்பெறும் சாதாரண சனசமூக மத்தியஸ்தத்தில் 5 லட்சம் ரூபாவுக்கு உட் பட்ட பிணக்குகளே ஆராயப்படும். விசேட மத்தியஸ்தத்தில் (காணி) 20 லட்சம் ரூபா வரை மத்தியஸ்தம் செய் யப்படும். விசேட மத்தியஸ்த சபைக்கு இணையாக யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் விசேட மத்திஸ்த நிபுணர் குழு ஆணைக்குழுவாக நியமனம் செய்யப்படும் - என்றார். (ற-50)

## மரக்கறி விதை உற்பத்திக்கு நடவடிக்கை

யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் காலபோக செய்கைக்கு தேவையான மரக்கறி விதைகளை உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற் கொண்டுள்ளது. தற்போது சங்கத்தின் கையிருப்பில் உள்ள மரக்கறி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

பாகல், புடோல், பூசணி, தக்காளி, வெண்டி, கீரை, பயிற்றை உட்பட வேறும் உள்ளூர் மரக்கறி விதைகள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

குடாநாட்டில்உற்பத்திசெய்யப்படும் இந்த மரக்கறி விதைகளை வெளிமாவட்டங்களுக்கும் சந்தைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ற-17)

# வௌவால்களின் இருப்பிடமாக ஆரம்ப சுகாதார நிலையம்

### இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஒதியமலை கிராம மக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, ஜன.25

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான ஒதியமலையில் உள்ள ஆரம்ப சுகா தார நிலையத்தை இயக்குவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். அவர்கள் தெரிவித்ததாவது:

1984ஆம் ஆண்டு நடத்தப் பட்ட படுகொலையால் நாம் இங்கிருந்து இடம்பெயர்ந் தோம். பல இடங்களுக்கு அலைந்து திரிந்து இப்போது எமது சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்துள்ளோம். எமது சொந்தக் கிராமத்தில் வாழ வேண்டும் என்ற வைராக் கியத்துடனேயே பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் இங்கு வாழ்கின்றோம்.

எமது கிராமத்துக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தந்தால் இடம் பெயர்ந்துள்ள ஏனையவர்களும் இங்கு குடியமர்வார்கள்.

ஒதியமலைக் கிராமத்துக்கு 2010ஆம் ஆண்டுபலமில்லியன் ரூபா செலவில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரப்பட்டது. எனினும் அது இயங்குவதில்லை. வௌவால்களின் இருப்பிடமாக மாறியுள்ளது. கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகளின் மருத்துவத்துக்கு 15 மீற்றருக்கு மேல் காட்டு வழியாகப் பயணிக்க வேண்டியுள்ளது. உரிய போக்குவரத்து வசதிகளும் இல்லை. கால்நடையாகவே செல்ல வேண்டியுள்ளது. இங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. எம்மிடம் உள்ள ஆளணியைக் கொண்டு இயலுமான வரையில் ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதாரப் பகுதிகளுக்குள் உள்ள அனைத்து இடங்களிலும் எமது சேவையை வழங்குகின்றோம். எமக்குப் போதிய ஆளணி கிடைக்கும்போது ஒதியமலை ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு ஒருவரை நியமிப்பதில் பிரச்சினையில்லை. தற்போது ஒதியமலையில் குடிப்பரம்பல் குறைவாகக் காணப்படுவதால் கர்ப்பிணிகள், குழந்தைகள் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது. அவர்களுக்கான நடமாடும் சேவையை வழங்குகின்றோம். ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தைப் பல தடவைகள் தூய்மைப் படுத்தியுள்ளோம். கிராம மக்களும் அதில்கவனம்எடுத்து அதைப் பராமரிக்க வேண்டும்.– என்று ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரி வித்தார். (ற-7)

## தேவைகளை அறிவித்தால் நிறைவு செய்ய நடவடிக்கை

### அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

மக்களின் கருத்துகளைப் பெற்றுத் திட்டங்களையும், தேவைகளையும் அறிவிக்கும் பட்சத்தில் திட்டங்களுக்கான நடவடிக்கைகளை உடன் மேற் கொள்ள முடியும்.

இவ்வாறு வடக்கு மாகாண போக்கு வரத்து அமைச்சர் பா.டெனீஸ் வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நெடுந்தீவு பிரதேச செயலக கிராம அபிவிருத்தித் திணைக்களத்துக்குக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டார். அவருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை யாழ்ப் பாணத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே வடக்கு அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நியமனம் பெறும் உத்தியோகத்தர் அங்குள்ள மக்களின் நலனின் மிகுந்த அக்கறை உடையவராகவும், எப்போதும் அவர்களது தேவைகள் அறிந்து கடமைகளை மேற் கொள்பவராகவும் இருக்க வேண்டும். அங்குள்ள மக்களின் தேவைகள் தொடர்பாக எனக்கு அறிவித்தால் உடனடியாக அவற்றை நிறைவு செய்ய ஆவன செய் யப்படும்.- என்றார்.

யாழ்ப்பாணம் குருநகரில் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நியமனம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. மாகாண சபை உறுப்பினர் கே.விந்தன் நியமனக் கடிதத்தை வழங்கினார். (ற-10)

## நாம்பன் மாட்டைக் கடத்தி வீட்டின் பூசை அறைக்குள் இறைச்சியாக்கிய கொடுமை

### தச்சன்தோப்பு சம்பவம்

சாவகச்சேரி, ஜன.25

மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்ட நாம்பன் மாடு மாலையில் காணாமல் போயிருந்தது. மாட்டின் உரிமையாளர் மாட்டைத் தேடியபோது அருகில் உள்ள வீடொன்றின் பூசை அறைக்குள் மாடு இறைச்சியாக்கப்பட்டுக் கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை தச்சன்தோப்பில் நடந்துள்ளது.

மாடு காணாமல்போனதை அடுத்து அந்தப் பகுதி இளைஞர்களும், மாட்டின் உரிமையாளரும் இணைந்து தேடத் தொடங்கினர். அருகில் இருந்த வீடொன்றின் மீது இளைஞர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவர்கள் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது பூசை அறைக்குள்மாடு இறைச்சியாக்கப்பட்டுக்கொண்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

சம்பவம் தொடர்பாக மாட்டு உரிமையாளரால் சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. மாட்டைப் பங்கு போட்டுக் கொண்டிருந்தவர்கள் தப்பியோடினர்.

வீட்டில் இருந்த பெண்ணும், அவரது பிள்ளைகளும் பொலிஸாரால் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டனர்.

தச்சன்தோப்பு, நாவற்குழிப் பகுதிகளில் கடந்த மாதம் 5 இற்கு மேற்பட்ட மாடுகள் காணாமல் போயுள்ளன. இறைச்சிக்காக மாடுகளைக் கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். பொலிஸார் இது தொடர்பான கண்காணிப்பை அதிகரிக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-131)

# வெளிமாவட்டம் செல்லும் உத்தியோகத்தர்களுக்கு சிறப்பு ரயில்

### சிவாஜிலிங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.25

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட வெளி மாவட்டங்களுக்குக் கடமைக்குச் செல்லும் உத்தியோகத்தர்களுக்கான சிறப்பு புகையிரத சேவை ஒன்றை ஏற் பாடு செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் நடப்பாண்டு அமைச்சுக் கூட்டம் போக்கு வரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. அதன்போதே சிவாஜிலிங்கம் இந்தக் கோரிக்கையை முன் வைத்தார்.

அது தொடர்பில் வடக்கு போக்குவரத்து அமைச்சர் கருத்துத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தனியார் போக்குவரத்துத் துறைக்கும் இலங்கைப் போக்குவரத்து சபைக்கும் இடையில் இருந்த முரண்பாடுகள் காரணமாக பயண ஒழுங்குகள் சீர்ற்றுக் காணப்பட்டன. தற்பொழுது அவை சீர் செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் முதலாம் திகதி முதல் இணைந்த நேர அட்டவணை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்துக்கான ஆரம்ப ரயில் சேவை காலை 6.10 மணிக்கு ஆகும். அதில் வெளி மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள் பலர் பயணிக்கின்றனர். வெளி மாவட்டங்களுக்கு பயணிக்கும் அதிகாரிகளுக்கோ அல்லது மாணவர்களுக்கென தனியான சேவைகள் எதுவும் தற்போது வரை இடம்பெறவில்லை - என்று யாழ்ப்பான புகையிரத நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-8)



# கிழக்கில் அடை மழை

## மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்பு

கொழும்பு, ஜன.25
கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு நாள்களாகத் தொடர்ந்து அடை மழை பெய்து வருவதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

**அம்பாறை**
அம்பாறையில் பெய்து வரும் அடை மழையால் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், கல்முனை, நிந்தவூர் உள்ளிட்ட பிரதேசங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



நேற்றுக் காலை 8 மணி வரையான கடந்த 24 மணித்தியாலங்களில் ஆகக் கூடுதலாக அக்கரைப்பற்றில் 312.0 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. சாகாமத்தில் 180.0 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், அம்பாறையில் 165.0 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், பொத்து விலில் 138.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகப் பொத்துவில் வானிலை அவதான நிலைய உத்தி யோகஸ்தர் எம்.ஐ.எம்.நஹீம் தெரிவித்தார்.

மேலும் ஆலையவேம்பு கோட்டத்துக்கு உட்பட்ட பெருநாவலர் பாடசாலை, அன்னை சாரதா பாடசாலை, விவேகானந்தா பாடசாலை ஆகியன வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அந்தப் பாடசாலைகள் நேற்று மூடப்பட்டதாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். இராசமாணிக்கம் தெரிவித்தார்.

மழையைத் தொடர்ந்து கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதால், தொழில் நடவடிக்கைக் காக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை என ஒலுவில் மீனவர் சங்கத் தலைவர் ஐ.எல்.மன்சூர் கூறினார். ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் சுமார் 500 மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை எனவும் அவர் கூறினார்.

**மட்டக்களப்பு**
மட்டக்களப்பில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நேற்றுக் காலை 8.30 மணிவரையான கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டக்களப்பில் 86 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி கே.சூரியகுமாரன் தெரிவித்தார்.

அடை மழை காரணமாக மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் பெரிய குளங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளதாகப் பிரதேச நீர்ப்பாசனப் பொறியி லாளர்கள் தெரிவித்தனர். உன்னிச்சைக்குளம், வாகனேரிக்குளம், வெலிக்காகண்டிக்குளம், வடமுனைக்குளம், கித்துள் வடிச்சல் குளம், கட்டுமுறிவுக்குளம், புணானைக்குளம், நவ கிரிக்குளம், தும்பங் கேணிக்குளம், புளுகு ணாவைக் குளம் ஆகிய வற்றின் நீர்மட்டம் உயர்வடைந்து காணப் படுவதாகவும் அவர்கள் கூறினர்.

**திருகோணமலை**
திருகோணமலையில் மழையால் தாழ்நிலப் பகுதிகளும் வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.
கந்தளாய், கிண்ணியா, புல்மோட்டை, மூதூர், தோப்பூர் போன்ற பிரதேசங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. திருகோணமலையில் 92.6 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருகோணமலை வானிலை அவதான நிலையத் தகவல்கள் தெரிவித்தன. (த-30)

# கூட்டு ஒப்பந்தம்: 31 ஆம் திகதி பேச்சு

கொழும்பு, ஜன 25
பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக முதலாளிமார் சம்மேளனத்திற்கும், பெருந்தோட்ட தொழிற் சங்கங்களுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக பேச்சு ஒன்று இடம்பெறவுள்ளது. இந்தப் பேச்சு எதிர்வரும் 31 ஆம் திகதி தொழில் அமைச்சில் தொழில் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தலைமையில் நடை பெறவுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தொழி லுறவு இயக்குநர் எஸ்.ஜோதிக்கண்ணன் தெரிவித்தார். (த)

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications **upto 28.02.2016** from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF ENGINEERING, UNIVERSITY OF JAFFNA**

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)** in *Civil Engineering/ Computer Engineering/Electrical and Electronic Engineering/Mechanical Engineering / Engineering Mathematics

**Note:**

* Preference will be given to those who have sound knowledge in either of the below subject area (specialization in the fields)

- Geotechnical Engineering
- Material Engineering/Science
- Coastal Engineering/Hydraulic Engineering
- Structural Engineering

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Lecturer Gr.I | Rs.87,415 – 7x2,020– 101,555/-p.m |
| Senior Lecturer Gr.II | Rs.76,275 – 11x1,520– 92,995/-p.m |
| Lecturer (Probationary) | Rs.53,235 – 10x1,240 – 65,635/-p.m |

**Note:**

The above salary scales are fully operative w.e.f 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2017, 2018, 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No.17/ 2016 dated 05.12.2016.

In addition to the above salary,

1. The following allowances will be paid in the percentage of the basic salary to the financial value existed as at 31.12.2015:

   i) Academic allowance

   | | |
   |---|---|
   | Senior Professor | - 152% |
   | Professor | - 147% |
   | Senior Lecturer Gr.I/Gr.II | - 136% |
   | Lecturer (Probationary) | - 100% |

   ii) Additional monthly allowance – 20% of the basic salary

   iii) Research allowance - 35% (based on the research activity)

2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

   **Statutory benefits:**
   1) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
   2) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
   3) Gratuity payments
   4) Employees Trust Fund benefits
   5) Free Medical Services

Applications for the above posts shall be sent to the **Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Thirunelvely Jaffna.**

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only shortlisted applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
24.01.2017

# ஜல்லிக்கட்டைப் போன்று கம்பளாவுக்கும் அனுமதி; விரைவில் வேண்டும் என கர்நாடகாவில் போர்க்கொடி



சென்னை, ஜன. 25

தமிழகத்தில் சட்டப்படி ஜல்லிக்கட்டு நடத்தப்படுவதைப்போல கர்நாடகாவில் கம்பளா (சேற்றில் எருமையை விரட்டிச் செல்வது) விளையாட்டை நடத்த அனுமதி வேண்டும் என பா.ஜ.க., ம.ஜ.க. ஆகிய கட்சிகள் போர்க் கொடி தூக்கியுள்ளன.

கர்நாடக மாநிலம் மங்களூருவில் கம்பளா விளையாட்டு (சேற்றில் எருமையை விரட்டிச் செல்வது) கடந்த 200 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு விலங்கு நல அமைப்பினர் இதை எதிர்த்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் முறையிட்டபோது, கம்பளா விளையாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டது.

கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி, இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றிபெற்றனர். இதனால் ஜல்லிக்கட்டுக்கு மீதான தடை நீங்கியது. இதேபோல் கம்பளா விளையாட்டுக்கும் தடையை நீக்க வேண்டும் என்று தற்போது தெரிவிக்கப்பட்டது.

கர்நாடக மக்களின் உரிமையைப் பறிப்பதைப் போன்று கம்பளா விளையாட்டின் மீதான தடை அமைந்துள்ளது. கம்பளா போட்டிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும். கர்நாடக முதல்வர் சித்தராமையா தமிழக அரசைப் போல கம்பளா போட்டி நடத்த தனிச் சட்டம் இயற்ற வேண்டும். இல்லாவிடில் பா.ஜ.க. சார்பாக காங்கிரஸ் அரசை கண்டித்து கர்நாடக மாநிலம் தழுவிய போராட்டத்தை நடத்துவோம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (ம-எ)

## தீவைத்தது பொலிஸே பரபரப்புக் குற்றச்சாட்டு

சென்னை, ஜன. 25

ஜல்லிக்கட்டுத் தொடர்பான மாணவர் போராட்டம் நேற்றுமுன்தினம் கலவரமாக மாறியிருந்தது. பொலிஸ் வாகனங்கள், ஏனைய சில வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களே இதைச் செய்தனர் என்று பொலிஸ் தரப்பால் குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த நிலையில் பொலிஸாரே வாகனங்களுக்கு தீ வைத்தனர் என்று நேற்று பரவலாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பாக கண்காணிப்புக் கமராவில் பதிவான காணொலிகளும் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

ஜல்லிக்கட்டு வேண்டும் என வலியுறுத்தி மெரீனாவில் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை, கலைந்து செல்லும்படியாக பொலிஸார் நேற்றுமுன்தினம் காலை வேண்டுகோள் விடுத்தனர். பொலிஸாரின் கோரிக்கையை இளைஞர்கள் ஏற்க மறுத்தனர். ஆரம்பத்தில சிறு தள்ளுமுள்ளுகள் ஏற்பட்டு. பின்னர் படிப்படியாக தடியடி நடத்தப்பட்டது. இளைஞர்கள் மீது தடியடி நடத்தப்பட்டதைத் கண்டித்து, தமிழ்நாடெங்கும் பொதுமக்கள் கொதித்தெழுந்து சாலை மறியல்களை நடத்தினர். சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பொலிஸ் நிலையம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு தீவைத்துக் கொளுத்தப்பட்டது. பொலிஸ் நிலையம் முன்னதாக இருந்த வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. வேறுசில இடங்களிலும் வாகனங்கள் தீக்கிரையாகின.

பொலிஸ் நிலையத்தைக் கொளுத்தியது ஆப்பாட்டக்காரர்கள் அல்லர். வேறு சிலர் என்று பொலிஸ் தரப்பு உடனடியாகத் தெரிவித்தது. ஆனால், வேறு இடங்களில் வாகனங்களைக் கொளுத்தியது ஆர்ப்பாட்டக்காரர்களே என்றும் தொடர்புபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் பொலிஸ் உடை அணிந்த ஒருவர் ஓட்டோ ஒன்றுக்கு தீவைப்பது போன்றும், வேறு சில பொலிஸ் உத்தியோகத்தர்களும் வன்முறைகளில் ஈடுபடுவது போன்றும் காணொலிகள் வெளியாகியுள்ளன. சமூக வலைத்தளங்களிலும் அவை மிக விரைவாகப் பரவி வருகின்றன.

இளைஞர்கள் மீது தடியடி நடத்தியமை, பொலிஸார் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆகியன தொடர்பில் நீதியான விசாரணை தேவை என்று தமிழ்நாட்டு சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவரும், தி.மு. கழகத்தின் செயல் தலைவருமான மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார். ஏனைய அரசியல் தலைவர்களும் அவ்வாறான நிலைப்பாட்டிலேயே உள்ளனர். (ம-எ)



## வான்வழித் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். தயார் நிலை

பக்தாத், ஜன. 25

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு சிறியரக தானியங்கி விமானங்களை உருவாக்கியுள்ளது என்றும்–அவற்றின் மூலம் அந்த அமைப்பு வான்வழித் தாக்கு தலை நடத்த அதிக வாய்ப்புள்ளது என்றும்–பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் வெளியிடப்பட்ட காணொலியின் மூலமே இந்தத் தகவல்கள் வெளிவந்தன.

2007 ஆம் ஆண்டுகளில் அமிரிக்க இராணுவத்தால் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களே குறித்த விமானத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு வான்வழியாகத் தாக்குதல்கள் நடத்தினர். அது ஈராக் அரச படைக்கு பின்னடைவை ஏற்படுத்தலாம். ஈராக்கின் மோசூல் நகரில் தற்போது போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு குறித்த விமானங்களைப் பரிசீலித்துப் பார்க்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

## கஜகஸ்தானிலும் பறவைக் காய்ச்சல்

அஸ்ரனா, ஜன. 25

கஜகஸ்தானிலும் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளது என்று அந்த நாட்டு அரசால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. கஸ்பியன் கடலினூடாக சென்றுவரும் இரண்டு அன்னப் பறவைகள் பறவைக் காய்ச்சலால் இறந்தன. இதனையடுத்தே அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பறவைக் காய்ச்சல் தற்போது மிக விரைவாக ஒவ்வொரு நாட்டிலும் பரவி வருகிறது. தென்கொரியாவில் கடந்த மாதம் 22.5 மில்லியன் பறவைகள் அழிக்கப்பட்டன. நாடுவிட்டு நாடுசெல்லும் பறவைகள் மூலமே பறவைக் காய்ச்சல் விரைவாகப் பரவி வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-எ)

## அமெரிக்காவில் சூறாவளி

அமெரிக்காவின் ஜோர்ஜியா, அலாபாமா, புளோரிடா மற்றும் மிஸிஸிபி ஆகிய மாநிலங்களில் நேற்றுமுன்தினம் புயலின் தாக்கம் உணரப்பட்டது. இதில் 18 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மீட்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)

## பசுபிக் நாடுகளுடனான வர்த்தக ஒப்பந்தம்: அ

வொஷிங்டன், ஜன. 25

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், பசுபிக் பிராந்திய நாடுகளுடனான வர்த்தக ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்க விலகுகிறது என்று அறிவித்தார்.

பசுபிக் நாடுகளின் தடையில்லா ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளது. டி.பி.பி. என்றழைக்கப்படும் இந்த அமைப்பில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, புருனே, கனடா, சிலி, ஜப்பான், மலேசியா, மெக்சிக்கோ, நியூசிலாந்து, பெரு, சிங்கப்பூர், அமெரிக்கா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

டி.பி.பி. அமைப்பில் உள்ள நாடுகள் எந்தவித கட்டுப்பாடும் இன்றி தங்களுக்குள் வர்த்தகம் செய்ய அந்த ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அமெரிக்காவின் வேலை வாய்ப்புகள் பறிபோகிறது என ட்ரம்ப் குற்றஞ்சாட்டினார்.

இந்த ஒப்பந்தத்தின் காரணத்தால் அமெரிக்கா ஏனைய நாடுகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியுள்ளது.

இதனால் அதிபராகப் பொறுப்பேற்றவுடன் இந்த



# பீட்டா தலைமையகம் முற்றுகை

அமெரிக்கா வாழ் தமிழர்களால் பீட்டா அமைப்பின் தலைமையகம் முற்றுகையிடப்பட்டு போராட்மொன்று நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.

ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடை நிரந்தரமாக நீங்கியது. இதனால் தற்போது பீட்டா அமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்ற குரல்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன. பீட்டா அமைப்பின் தலைமை அலுவலகம் அமெரிக்காவின் வெர்ஜீனியாவில் உள்ளது. அங்கு அமெரிக்காவில் வாழும் ஏராளமான தமிழர்கள் குவிந்து போராட்டம் நடத்தினர்.

எங்கள் காளைகளை நாங்கள் நேசிக்கிறோம். அவற்றை எப்படி நடத்துவது என்று எங்களுக்கு தெரியும். ஜல்லிக்கட்டு எங்களது பாரம்பரியம், கலாசாரம், அதை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று போராட்டக் காரர்கள் குரல் எழுப்பினர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம-எ)



ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட போராட்டத்தில் மெரீனாவிலும், ஏனைய இடங்களிலும் நேற்றுமுன்தினம் கலவரம் வெடித்தது. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்ட நபர் மீது கல்லால் வீசியபோது, அவர் கிரிக்கெட் விளையாடுவதைப் போன்று அந்தக் கல்லை தடுத்தாடினார். இந்தப்படம் சமூக வலைத்தளங்களில் விரை வாகப் பரவி வருகிறது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற போராட்டக்காரர்கள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித் தனர் என்றும் குறித்த படத்தின் கீழ் குறிப்பிடப்பட்டது. (ம)



# மெரீனாவில் 300 மக்கள் நேற்றும் குவிந்திருந்தனர்

சென்னை, ஜன. 25

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கடந்த ஒரு வார காலமாக தமிழகம் முழுவதும் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். அவர்கள் மீது பொலிஸார் நேற்றுமுன்தினம் தடியடி நடத்தியதைக் கண்டித்து மெரீனா கடற்கரையில் நேற்றும் 300 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று சில இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

எனினும் அவர்கள் நேற்று மதியம் அங்கிருந்த செல்வதாக தெரிவித்து கால அவகாசம் கேட்டே இருந்தனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)

# ஓ.பி.எஸ்ஸுக்கு பெரும் ஆதரவு

சென்னை, ஜன. 25

ஜல்லிக்கட்டுக்கு நடத்த ஏதுவாக தமிழ்நாட்டு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நிரந்தரச் சட்டம் கொண்டுவந்ததை அடுத்து அவருக்கு தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு பெருகி வருகின்றது என்று சில ஊடகங்கள் குறிப்பிட்டன.

மெரீனாவின் இளைஞர்கள் போராட்டம் நடத்தத் தொடங்கிய சில தினங்களில் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்து, ஜல்லிக்கட்டுக்கு ஆதரவைப் பெற்றார் பன்னீர்செல்வம். பின்னர் இரவுபகலாக மிகவும் துரிதமாக பல கட்டங்களைத் தாண்டி அவசரச் சட்டத்தை இயற்றி ஜல்லிக்கட்டின் மீதான தடையை இல்லாமல் செய்தார்.

ஆனால் மக்கள் அவசரச் சட்டத்தை ஏற்கவில்லை. நிரந்தரத் தீர்வே வேண்டும் என்று வலியுறுத்தினர். தமிழ்நாட்டு சட்டசபையில் நேற்றுமுன்தினம் நிரந்தரச் சட்டமும் கொண்டு வரப்பட்டது. அவரது அதிரடி நடவடிக்கைகளுக்கு பல கட்சிகளும் தமது ஆதரவைத் தெரிவித்தன. தமிழ்நாட்டு மக்கள்மத்தியிலும் அவருக்கு பேராதரவு உள்ளது என்று சொல்லப்படுகிறது. (ம-எ)





# ஜல்லிக்கட்டு கலவரத்தின் நேற்றைய சில எச்சங்கள்











# இலக்குத் தவறிய தாக்குதல்; உயிரிழப்பு 236 ஆக உயர்வு

நைஜீரிய இராணுவத்தால் அகதி முகாம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட இலக்குத் தவறிய தாக்குதலில் சாவு எண்ணிக்கை 236 ஆக உயர்ந்தது. நைஜீரியாவில் போகோ ஹறம் ஆயுததாரிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

அவர்களுக்கு எதிராக நைஜீரிய அரசு பல தாக்குதல்களை நடத்தி வருகிறது. ரான் நகரில், கடந்த செவ்வாய்க்கிழமை நைஜீரிய அரசு நடத்திய வான்வெளித் தாக்குதல்கள் அகதி முகாமொன்றில் விழுந்து வெடித்தன. இது இலக்குத் தவறிய தாக்குதல் என்று தெரிவிக்கப்பட்டது. 100 பேர் உயிரிழந்தனர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை 236 ஆக உயர்ந்தது என்று பன்னாட்டு ஊடகங்கள் பல குறிப்பிட்டன. (ம-எ)

# ...மரிக்கா விலகுவதாக ட்ரம்ப் அறிவிப்பு

ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்க விலகும் என்று அறிக்கை விட்டிருந்தார். அவர், தான் தெரிவித்ததைப் போன்று குறித்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்க விலகுகிறது என்று அறிவித்து கையொப்பமிட்டார். அமெரிக்க இல்லாமல் இந்த ஒப்பந்தம் நிறைவுபெறாது என்று ஜப்பானின் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. (ம-எ)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# போராட்டத்துக்கு மதிப்பளியுங்கள்

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தாமதித்து வரும் நிலையில், காணாமற்போனோரின் உறவினர்கள் சிலர் வவுனியாவில் அறப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். மிக நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ள இவர்களின் பிரச்சினை அரசுகள், ஆட்சிகள் கடந்தும் தொடர்வது வேதனைக்குரியது.

தாமதித்த நீதி, மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம் என்ற புகழ்மொழி ஒன்றுண்டு. காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கான நீதி என்பது மிகமிகக் காலந்தாழ்த்தப்பட்டுவிட்ட ஒன்று. அதன் பின்னரும் அவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான அறிகுறிகள் எவையும் இல்லை என்பதுதான் வருத்தத்துக்குரியது.

உணவு, தண்ணீர் என எல்லாவற்றையும் ஒறுத்து – உயிரைத் துச்சமென மதித்து, உறவினர்கள் இப்போது போராட்டத்தில் குதித்துள்ளனர். காணாமற்போனவர்கள் விடயத்தில் அரசு உடனடியாகப் பொறுப்புக்கூறுதல் வேண்டும் என்பதே அவர்களின் வலியுறுத்தல். அரசு அமைக்க இருக்கும் காணாமற்போனோருக்கான செயலகம் ஒரு கண்துடைப்பு என்றும் அவர்கள் நிராகரித்துள்ளனர். தற்போதைய ஆட்சியின் செயற்பாடுகள் மீதும் அவர்கள் நம்பிக்கை இழந்திருப்பதன் விளைவே, அந்தச் செயலகத்தை நிராகரிக்கும் அவர்களின் முடிவுக்குக் காரணம்.

காணாமற்போனவர்களின் உறவினர்கள் நடத்தும் முதல் போராட்டம் அல்ல இது. தமிழர்களின் மண் மீட்புப் போராட்டம் ஆரம்பித்த காலம் முதல், காணாமற்போதல்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அவசர காலச் சட்டமும், பயங்கரவாதத் தடைச் சட்டமும் படையினருக்கும், பொலிஸாருக்கும், வழங்கிய வரைமுறையற்ற அதிகாரத்தின் கீழ் காணாமற்போதல்கள் வடக்குக் கிழக்கில் வழமையாகிப்போன ஒன்றாகிவிட்டன.

1998ஆம் ஆண்டில், யாழ். குடாநாட்டில் 600க்கும் மேற்பட்ட இளம் ஆண்களும் பெண்களும் ஒரு குறுகிய காலப் பகுதிக்குள் காணாமற்போனபோது இந்தப் பிரச்சினை பூதாகாரமானது. இவ்வாறு காணாமற்போனவர்களில் பலரும் இராணுவத்தினராலும், ஏனைய படைப் பிரிவினர்களாலும் கைது செய்யப்பட்டு அல்லது விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட பின்னரே காணாமற்போனார்கள். இவ்வாறே இயக்கங்களால் அழைத்துச் செல்லப்பட்ட பலரும் காணாமற்போனார்கள் என்கிற குற்றச்சாட்டுக்களும் உண்டு. எனினும் அரச படைகள் மீதான குற்றச்சாட்டுக்களே அதிகம்.

பாடசாலை மாணவியான கிருசாந்தி காணாமற்போன சம்பவத்தின் விசாரணைகள் 1998 காணாமற்போதல்களின் பின்னணியில் இருந்த படையினரின் கைகளை வெளிப்படையாக்கின. அவர்களில் பலர் செம்மணியில் கொன்று புதைக்கப்பட்டமையை கிருசாந்தியைக் கொலை செய்த குற்றவாளியான கோப்ரல் ராஜபக்ச வெளிப்படுத்தினார். அந்த விசாரணைகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டன என்பது வேறுவிடயம்.

அன்று முதல் காணாமற்போனவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் தம்மை ஓர் அமைப்பாக்கிக் கொண்டு தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது, இந்தப் பிரச்சினை மிகப் பெரும் பிரச்சினையாக விரிவாக்கம் கண்டது. போர் முடிந்து மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்ததுமே தமது உறவுகளுக்கான தேடலையும், போராட்டத்தையும் உறவினர்கள் தொடங்கிவிட்டனர்.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது, இந்தப் பிரச்சினைக்கு விடிவுவரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கிடைக்கவில்லை. இரண்டு வருடங்கள் கடந்த பின்னரும் காணாமற்போனவர்கள் குறித்த விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான செயலகத்திற்கே வழியைக் காணவில்லை என்பதுதான் நிலமையாக இருக்கிறது.

இதனால்தான் உறவினர்கள் மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இதுவரையில் ஆர்ப்பாட்டம், அடையாளப் போராட்டம் என்றிருந்தது, இந்தத் தடவை உணவை ஒறுத்து, குடிதண்ணீரையும் ஒறுத்து போராட்டம் தீவிரமாகியிருக்கிறது. இது பாரதூரமான நிலையை எட்டுவதற்கு முன்னதாக அரச தலைவர்கள் இந்த விடயத்தில் மக்களை நேரில் சந்தித்து வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும். அதற்கு முன்னதாக காணாமற்போனோர் தொடர்பான செயலகத்தை ஆரம்பிக்கும் வர்த்தமான அறிவித்தலை அரச தலைவர் வெளியிடவேண்டும். மக்களின் போராட்டத்தை மதித்து அரசு இதைச் செய்யவேண்டும்.

# அமைச்சர்கள் எடுத்த முடிவை பொது அமைப்புக்களுக்கு முதலில் விளக்கும்படி ஜனாதிபதி அறிவுரை

## தேசிய மனித உரிமை செயல் திட்டத்துக்கு அமைச்சரவையில் ஒப்புதல்

## இருகட்சி அரசில் நெருக்கீடுகள்அதிகரிப்பு

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்




ஜனவரி 3 ஆம் திகதி சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள், அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பாக எடுத்துள்ள முடிவுகள் தொடர்பில் சமூகத்தின் பல்வேறு பிரிவினர்களோடும் கலந்துரையாடி தெளிவுபடுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அமைச்சர்கள் எடுத்த முடிவை கட்சியின் மத்திய குழுவில் சமர்ப்பித்து ஓர் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்று முன்னர் எடுக்கப்பட்ட முடிவு அப்படியே இருக்கும் நிலையில், கட்சித் தலைமை இப்போது இந்த நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் முந்திக்கொண்டு தமது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தியிருந்தாலும், அரசமைப்புத் தொடர்பான கட்சியின் நிலைப்பாடு முதலில் சிவில் அமைப்புகளால் ஆராயப்படவேண்டும். அதன்பின்னர், அதன் விவரங்கள் மத்திய குழுவுக்கு தம்மால் அறிவிக்கப்பட வேண்டும் என்று கட்சியின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி சிறிசேன விரும்புவதாக விடயமறிந்த தரப்புக்களில் இருந்து தெரியவருகின்றது. அவ்வாறான முதற் கூட்டமானது, அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் பிரதிநிதிகள் குழுவுடன், கடந்த வியாழக்கிழமை அதன் தலைமையகத்தில் நடைபெற்றுள்ளது.

ஏழு சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் கலந்துகொண்டு இரண்டுமணிநேரம் இடம்பெற்ற கலந்துரையாடலில், அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் முக்கிய தேரர்கள் உட்பட பலர் பங்குபற்றியிருந்தனர். அமைச்சர்கள் அங்கு அழுத்தம் கொடுத்த முக்கிய அம்சங்கள்:

01.பௌத்தத்துக்கு அதிமுக்கிய இடம் வழங்கப்படும் என்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுதியளிக்கின்றது.
02.இலங்கையின் ஒற்றை ஆட்சித் தன்மை பாதுகாக்கப்படும்.
03.பொதுமக்கள் கருத்தறியும்படியான எந்தவொரு அரசமைப்புத் திருத்தமும் கட்சியால் ஆதரிக்கப்படமாட்டாது.
04.நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை மாற்றப்பட மாட்டாது.
05.வடக்குக்கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படமாட்டாது.
06.13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழு அளவில் செயற்படுத்தப்படுவதன் மூலமே அதிகாரப்பகிர்வு.

அமைச்சர் சிறிபால டி சில்வா அமைச்சர்களது நிலைப்பாட்டை விளக்கும்போது இந்தக் காலகட்டத்தில் பொது மக்கள் கருத்தறியும் முயற்சியானது, நாட்டைப் பிரிப்பதாகவே இருக்கும் என்று தெரிவித்தார். திருகோணமலை ஆனந்ததேரர் கருத்துத் தெரிவிக்கையில், தாம் உட்பட பௌத்த குருமார்கள் அடங்கிய குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்தபோது, இதே கருத்தைத்தான் ஜனாதிபதியும் வெளியிட்டிருந்தார் என்று தெரிவித்து இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை எடுத்தமைக்காக ஜனாதிபதிக்கு அவர் நன்றி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அதிகாரப்பகிர்வுக்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாகச் செயற்படுத்துவதாக இருந்தாலும்,



அதில் சில பிரிவுகள் ஏற்றுக் கொள்ளப் படமுடியாதவை என்று கூறியதுடன், மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர், மாகாண முதலமைச்சரின் கீழ் செயற்படுவார் என்றிருப்பது மாகாணங்களில் பொலிஸ்துறை அரசியல் மயமாக்கப்படுவதாக இருக்கும், அதற்குத் தாங்கள் ஆதரவளிக்கமுடியாது என்றார். இந்த மாதிரிப் பிரச்சினைகள், மேலும் விவாதிக்கப்பட வேண்டும் என்றார் அமைச்சர் டி சில்வா.

இந்த இரு தரப்புக் கலந்துரையாடலானது அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் உறுதியற்ற நிலைமையொன்றைத் தோற்றுவித்துள்ளது.

அரசிலுள்ள இன்னொரு பங்காளிக் கட்சியான ஐ.தே.க, அரசமைப்புத் திருத்தம் தொடர்பான செயற்பாடுகளை முன்னின்று நகர்த்தி வருகின்றது. உத்தேச அரசமைப்பு மாற்றங்கள் தொடர்பான ஆறு வெவ்வேறு வழிகாட்டல் குழுக்களின் அறிக்கைகள் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் ஜனவரி 9 தொடக்கம் 11 ஆம் திகதி வரை விவாதிக்கப்படவிருந்த நிலையில், இவைகள் குறித்து மேலும் ஆராயப்படவேண்டும் என்று சுதந்திரக் கட்சியினர் விரும்பியதால் விவாதம் திகதி குறிக்கப்படாமல் பின்போடப்பட்டுள்ளது.

**கூட்டு எதிர்க்கட்சியின் கருத்து**

கூட்டு எதிர்க்கட்சித் தலைவர் தினேஷ் குணவர்தன இந்த நிலைமை குறித்துத் தெரிவிக்கையில், ஐ.தே.கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இப்போது மோதல் நிலைக்குள்ளாகியுள்ளன. பொது நிலைப்பாடு ஒன்றுக்கு வராத நிலையில், இந்தச் சீர்திருத்தங்கள் எல்லாம் 'அம்போ' என்று ஆகிவிடும் என்றார். அரசின் முக்கிய இரண்டு பங்காளிகளும், நாட்டை எதிர்பார்ப்பில் வைத்திருக்காமல், தங்கள் நிலைப்பாடுகளை மக்களுக்கு அறிவித்தாக வேண்டும் என்றார். சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் எடுத்துள்ள நிலைப்பாடு, கூட்டு எதிர்க் கட்சியினரின் நிலைப்பாட்டைப்போலவே காணப்படுகின்றது. வழிகாட்டல் குழுவுக்கு அது சமர்ப்பித்துள்ள 14 அம்ச முன்மொழிவுகளில், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படலாகாது என்றே தெரிவித்துள்ளது. இலங்கைக் குடியரசு பௌத்தத்துக்குக் கொடுத்துள்ள மிக முக்கிய இடம் தொடர்பான அம்சம் அரசமைப்பில் மாற்றப்படலாகாது என்றும் அது வலியுறுத்தியுள்ளது. மாகாண சபை முறையானது, நாட்டின் ஒருமைப்பாடு, பாதுகாப்பு முதலியவற்றை அபாயத்தில் ஆழ்த்துவதாக இருக்கலாகாது. மத்தியின் நிறைவேற்று மற்றும் சட்டமியற்றும் அதிகாரங்களை மீறுவதாக மாகாண சபை முறை இருக்கலாகாதென்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சவும் வழிகாட்டல் குழுக்களின் அறிக்கைகளைக் கண்டித்திருக்கிறார். கடந்த மாதம் அவர் வெளியிட்டிருந்த ஒரு அறிக்கையில் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது, தேர்தல் முறையை சீரமைப்பது என்பவை, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மக்களுக்கு இந்த அரசினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளாகும். ஆனால் அரசியல் நிர்ணய சபையினால் நியமிக்கப்பட்ட வழிகாட்டல் குழுக்களினால் இந்த முக்கிய விடயங்களும் கையாளப்படவில்லை. மாறாக ஜனாதிபதித் தேர்தலின்போது குறிப்பிடப்படாத விடயங்களையே அவை குறிப்பிடுவதாக உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் ராஜதந்திர வட்டாரங்கள் போன்றவற்றுக்குத் தமது புதிய நிலைப்பாட்டை எடுத்து விளக்கி வரும் அதே சமயம், நாட்டின் பொருளாதார நிலைமையைச் சீர்ப்படுத்துவது தொடர்பாகவும் கவனம் செலுத்திவருகின்றனர். அந்த வகையில்தான், கடந்த வாரம் தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் மீள்பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு அமைச்சரவையில் இறுதித் தீர்மானத்துக்கு விடப்பட்டது. ஐரோப்பிய யூனியனின் ஜி.எஸ்.பி சலுகையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் 261 பக்கங்கள் கொண்ட செயற்றிட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஏற்கனவே சில அமைச்சர்களாலும் வேறு தரப்புக்களாலும் சுட்டிக்காட்டப்பட்டதற்கிணங்க, மீள் அமைக்கப்பட்ட செயற்றிட்டத்தில் ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்குவது குறித்து எதுவித பிரஸ்தாபமும் காணப்படவில்லை. அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்துவதற்கு நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மை ஆதரவு வேண்டும் என்பது நீக்கப்பட்டுள்ளது. வீடுகளுக்கான உரிமை தொடர்பான அம்சமும் அமைச்சர்களின் விவாதத்துக்குள் வந்தது. குடிமக்களின் வீடுகளுக்கான உரிமை அரசமைப்பில் இடம் பெறவேண்டும் என்று செயற்றிட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கல்விக்கான உரிமையும் பரிந்துரைக்கப்படுகின்றது.

ஜி.எஸ்.பி சலுகைகளைப் பெறுவதற்கு அரசு 58 நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். பத்திரிகைச் செய்திகள் குறித்து ஜனாதிபதி சிறிசேன, பதில் வெளியுறவு அமைச்சர் ஹர்சடி சில்வாவிடம் கேள்வி எழுப்பினார். இது பற்றி அமைச்சர்கள் எவரும் அறிந்திருக்கவில்லையென்றும் அவர் குறிப்பிட்டார். தம்மைப் பொறுத்தவரை 27 நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று மட்டுமே அறிவதாகத் தெரிவித்த அமைச்சர், அடுத்த வாரம் இது பற்றிய உண்மைகள் கொண்ட அறிக்கையை அமைச்சரவையில் தாக்கல் செய்வதாக உறுதியளித்தார். அவ்வாறான நிபந்தனைகள் இருக்குமானால், அவைபற்றி ஆராய உப குழுவொன்றை நியமிப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசின் தேசிய மனித உரிமைகள் செயற்திட்டத்தின் நோக்கம், ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி சலுகையைப் பெறுவது மட்டுமன்று. வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் தனது நிலைப்பாட்டை தற்காத்துக் கொள்வதற்கான கருவியாகவும் அதனைப் பயன்படுத்த விரும்புகின்றது. போரின்போது மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பான இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் மார்ச் மாதம் மனித உரிமை சபையில் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் எடுத்துள்ள தீர்மானம், ஐ.தே.கவுடன் பொதுச் செயற்பாட்டுக்கான கதவை முழுவதுமாக மூடிவிட்டதாகத் தெரிகின்றது.

அதேசமயம், பொதுச் செயற்பாட்டுக்கான வழிகளைக் காணுவதானால், ஐ.தே.கவும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டி வரலாம். இல்லையெனில், இணக்கப்பாடு இல்லாத ஒருநிலைமை உருவாகும் நிலையே கண் முன் தெரிகின்றது.

(தொடர்ச்சி 26ஆம் பக்கம் பார்க்க)

"

அரசின் தேசிய மனித உரிமைகள் செயற் திட்டத்தின் நோக்கம், ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி சலுகையைப் பெறுவது மட்டுமன்று. வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் தனது நிலைப் பாட்டை தற்காத்துக் கொள்வதற்கான கருவியாகவும் அதனைப் பயன் படுத்த விரும்பு கின்றது. போரின் போது மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பான இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் மார்ச் மாதம் மனித உரிமை சபையில் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.



# வாசகர் திருமுகம்

## குருநகர் வடிகால்கள் யாழ்.மாநகரசபையால் முறைப்படி சுத்திகரிக்கப்படுமா?

குருநகரில் உள்ள கழிவு நீர் செல்லும் வடிகால்கள் யாழ்.மாநகர சபையால் நாளாந்தம் சுத்திகரிப்புச் செய்யப்படுவதில்லை என இந்தப் பகுதிப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குருநகர் பகுதி யாழ்.மாநகரசபையின் நிர்வாகத்தின் கீழேயுள்ளது. இந்தக் கழிவு நீர் செல்லும் வடிகால்கள் திறந்த நிலையிலேயேயுள்ளன. இதனால் வீதியில் உள்ள குப்பை கூளங்களும், மணல்களும் காற்றில் பறந்து இந்தக் கழிவுநீர் செல்லும் வாய்க்கால்களில் வீழ்ந்து தேங்குகின்றன. சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இந்த வடிகால்களை நாளாந்தம் சுத்திகரிப்புச் செய்யாததால், கழிவு நீர் தேங்கித் தடைப்படுவதுடன் இந்த வடிகால்கள் சேறாக மாறியுள்ளன. இதனால் துர்நாற்றம் வீசும் இடங்களாக இந்த வடிகால்கள் மாறியுள்ளன.

தற்போது நாட்டில் டெங்கு நுளம்பின் தாக்கம் உள்ளதால், பொதுமக்களைச் சுற்றுச் சூழல் சுகாதாரத்தைப் பேணுமாறு பத்திரிகைகளில் எச்சரிக்கை விடுக்கப்படுகின்ற போதிலும், யாழ். மாநகர சபையினர் வடிகால்களை ஒழுங்காக ஏன் சுத்திகரிக்காமலுள்ளார்கள் என இந்தப் பகுதி மக்கள் வினவுகின்றனர். இதுகுறித்துச் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு சமூக நலன் விரும்பிகள் சிலரால் அறிவிக்கப்பட்டும் இந்த வடிகால்கள் இதுவரை சுத்திகரிக்கப்படாமலுள்ளன. எனவே குருநகர் வாழ் பொதுமக்களின் சுகாதார அச்சுறுத்தல்களைப் போக்க யாழ்.மாநகரசபை ஆணையாளர் நடவடிக்கை எடுப்பாரா?

*திலீப், குருநகர்*

## விவசாயப் பகுதியினர் கவனமெடுப்பார்களா?

தற்போது நாட்டில் நிலவும் கடும் வறட்சியான கால நிலையால் நெற்செய்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து சம்பந்தப்பட்ட விவசாய உத்தியோகத்தர்களால் திரட்டப்பட்ட புள்ளிவிவரங்கள் மாவட்ட ரீதியாகப் பத்திரிகையொன்றில் வெளியிடப்பட்டுள்ளன.

இதே வறட்சி நிலையில், இவர்களுடன் தென்னை உற்பத்தியாளர்கள், வாழைச்செய்கையாளர்கள், மரக்கறி உற்பத்தியாளர்கள் போன்றோரும் பெருமளவில் நட்டமடைந்திருப்பதை எவருமே கவனத்திற்கொண்டதாகத் தெரியவில்லை. தற்போதைய வறட்சியானது விவசாய முயற்சியாளர்களுக்குஒரேவிதமான பாதிப்பையே ஏற்படுத்தியுள்ளதால், சகலவகை பயிர் உற்பத்தியாளர்களுக்கும் அரசால் நிவாரணம் வழங்கப்படுவதற்கு விவசாயப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டு உதவவேண்டும்.

*சி.காசிப்பிள்ளை, அல்லாரையூர்*

# கணிய அளவையியல் உயர்தேசிய டிப்ளோமாக் கற்கை நெறி

## மிகக் குறைந்த கட்டணச் சலுகையோடு யாழ். இ சொவ்ற் மெற்றோ கம்பஸில் பயில முடியும்



இசொவ்ற் மெற்றோ கம்பஸின் யாழ். கிளையானது இவ்வாண்டில் கணிய அளவையியல் உயர்தேசிய டிப்ளோமாக் கற்கை நெறியை மிக்க் குறைந்த கட்டணச் சலுகையுடன் மாணவர்கள் தொடர்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இதன்படி மேற்படி கற்கை நெறியைத் தொடர்வதற்கென இணைந்துகொள்ளும் மாணவர்களுக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள துறைசார் வல்லுநர்களின் விரிவுரைகளில் பங்குகொள்ளும் வாய்ப்பு கிடைப்பதோடு அவர்களின் நேரடி வழிநடத்தலின் கீழாக இக் கற்கை நெறிகளை பயில்வதற்கான வாய்ப்பும் கிட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கா.பொ.த உயர்தரத்தில் எத்துறைசார்ந்தும் கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்ட மாணவர் களும் இக் கற்கை நெறியினை தொடர முடியுமென கூறப்பட்டுள்ளது. மேலும் இரண்டு வருட கால வரையறையைக் கொண்டுள்ள இக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்வோர் பிரித்தானியாவின் 'பியார் சன்' நிறுவனத்தின் அங்கிகார சான்றிதழை பெற்றுக்கொள்ள முடிவதுடன் கணிய அளவையியல் இளமாணிப் பட்டம் மற்றும் முதுமாணிப் பட்டத்திற்குரித்தான சான்றிதழ்களை 'கிங்ஸ்ரன்' பல்கலைக்கழகத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இசொவ்ற் மெற்றோ கம்பஸின் யாழ். கிளையானது கடந்த 7 வருடங்களாக யாழ். மாவட்ட மாணவர்களுக்குரித்தான அவர்களின் தேவை அறிந்த தொழிற்கல்வி செயற்பாடுகளை வழங்கி வருகிறது. குறிப்பாக சாதாரண சான்றிதழ் கற்கைநெறி தொடக்கம் இளமாணி, முதுமாணிக் கற்கைநெறி வரை மாணவர்களுக்கு வழங்கிவருகின்றமையும் ஒவ்வோர் வருடமும் புதிய புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துவதன் மூலமாக யாழ் மாவட்ட மாணவர்களுக்கு கல்வித் துறை சார்ந்து காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றமையும் நோக்கத்தக்கது.

> "தேசிய மற்றும் பன்னாட்டு ரீதியான தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு இக் கற்கை நெறி பயனுள்ளதாக அமைந்துள்ளது"

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS




# யாழ். வர்த்தக கண்காட்சி வெள்ளியன்று ஆரம்பம்

கடந்த காலங்களில் 200 கண்காட்சிக் கூடங்களுடன் நடத்தப்பட்ட பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி இந்த ஆண்டு 300 கண்காட்சிக் கூடங்களுடன் நடத்தப்பட வுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் கண் காட்சி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும். இவ்வாறு யாழ். வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றத்தின் தலைவர் வி.கே.விக்னேஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள 8 ஆவது பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி தொடர்பில் விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன் போது கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது: 2010 ஆம் ஆண்டு மிகுந்த இடர்பாடு களுக்கு மத்தியில் முதன் முறையாக பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 8ஆவது ஆண்டாக இந்த ஆண்டும் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

'வடக்கின் நுழைவாயில்' என்னும் பெயரில் இடம்பெறும் இந்தக் கண்காட்சி வடக்கின் பொருளாதார மேம்பாட்டுக்கு ஓர் உந்துசக்தியாக அமையும். இங்குள்ள காட்சியறைகளில் வடபகுதி முதலீட்டாளர்களுக்கு மூன்றில் ஒரு பங்குக் கட்டணமே அறவிடப்படுகின்றது.- இந்தியாவிலிருந்தும் இந்தக் கண்காட்சிக்கு முதலீட்டாளர்கள் வரவுள்ளனர். அவர்களும், எங்களது முதலீட்டாளர் களும் பேசிக் கொள்வதற்கும் இந்தக் கண்காட்சி வாய்ப்பளிக்கின்றது. கடந்த காலங்களில் கண்காட்சியை 50 ஆயிரம் பேர் வரையில் பார்வையிட்டனர். இந்த ஆண்டு 60 ஆயிரம் பேர் பார்வையிடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

வணிகம்

# அரிசி விலை நிர்ணயத்தில் எதிர்பார்த்த குறைவு இல்லை

கடந்த மாத இறுதிப் பகுதியில் வரி நிவாரண அடிப்படையில் அரிசியை இறக்குமதி செய்வதற்கான ஆலோசனைகளும்-வழிகாட்டுதல்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்டும், வரி அறவீடு இன்றிய அரிசி இறக்குமதி இடம்பெற்றால் ஒரு கிலோ அரிசியின் விலை நிர்ணயமானது. 40 ரூபாவுக்கும், 50 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது உள்ளூர் அரிசியின் விலை நிர்ணயமானது 2 ரூபாவால் வீழ்ச்சிகண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக தேவைக்கதிகமானளவு அரிசி சந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளமையே இந்த திடீர் விலை குறைப்புக்கும்- முன்னெடுப்புக்கும் காரணம் என ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய நடவடிக்கை மற் றும் பயிற்சி நிறுவனம் கருத்துரைத்துள்ளது.

மொத்த மற்றும் சில்லறை விலைக்கு அரிசி விநியோகம் செய்யும் சந்தைகள் தேவையானளவு அரிசியைப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. முன்பதாக பெரும்போக உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உரிய முறையில் மழைவீழ்ச்சி கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் முக்கிய நீர்த்தேக்கங்களில் போதிய நீர் இருக்கவில்லையெனவும், பெரும்போகத்துக்கான உற்பத்தி இலக்கை முழுமைப்படுத்த முடியாமல் போயுள்ளதாகவும் தகவல் வெளிப்படுத்தப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது. மேலும், அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலைமைகள் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நுட்பம்



# பி–8 லைட்–2017 அதிதிறன்பேசி அறிமுகம்

ஹுவாவி நிறுவனம் கடந்த 2014 ஆம் ஆண்டு வெளியிட்டிருந்த அறிவிப்பின் பிரகாரம் தற்போது தனது புதிய பதிப்பான பி-8 லைட்-2017 என்பதான அதிதிறன் பேசியை இந்த மாத இறுதியில் அறிமுகம் செய்வுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இதன்படி புதிய வெளியீட்டை ஜேர்மன் சந்தைகளில் கறுப்பு மற்றும் இ.யூ.ஆர். நிறங்களில் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் விலை நிர்ணயம் என்பது அண்ணளவாக 17 ஆயிரத்து 300 ரூபாவாக இருக்குமென குறிப்பிடப்பட்டது.

ஹுவாவி பி-8 லைட் (2017) அதிதிறன்பேசியானது ஹுவாவி பி-8 லைட் அதிதிறன்பேசியின் மேம்படுத்தப்பட்ட பதிப்பாக காணப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது.

டியூவல் சிம் (Ducal sim) ஆதாரத்தைக் கொண்டுள்ள பி-8 லைட்-2017 அதிதிறன் பேசியானது இ.எம்.யூ.ஐ 5.0 அடிப்படையிலான அன்ட்ரோய்ட் 7.0 நௌகாட் மூலம் செயல் நிலைபெறுகிறது.

ஹுவாவி பி-8 லைட்-(2017) அதிதிறன்பேசியில் 1080 இற்கு 1920 பிக்சல் அளவுடைய 5.20 இன்ச் முழு எச்.டி டிஸ்ப்ளே அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 3 ஜிபி ரம் உடன் இணைந்து ஒக்டாகோர் கிரின் 655 புரோசசர் (Octa core 665 processor) செயற்பாட்டு அம்சங்களைக் கொண்டுள்ளது.

தேவிபரமலிங்கம்

# இலக்கியம் மற்றும் ஏனைய துறைகளில் ஊக்குவிப்பும்; குழிபறிப்புக்களும்

மனிதனுடைய வாழ்வியல் விழுமியங்களில்பல்வேறுதுறைகள் துணையாகத் தொடர்கின்றன. கலை, இலக்கியம், விளையாட்டு, ஆராய்ச்சி கல்வி கண்டுபிடிப்புகள் இந்தவிதம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவற்றுள் எவற்றையுமே தேவை அற்றது என்று புறம்தள்ளிவிட முடியாத அளவுக்கு ஒவ்வொன்றும் உலக மானிடவியலில் சதையும் ஊனுமாக இரண்டறக் கலந்தே வளர்ந்தும் இருக்கின்றன.

இன்னமும் பல புதிய முயற்சிகளால் தேற்றம் பெறவும் இருக்கின்றன. அவற்றுள்ளே ஒரு சிலவற்றின் தாக்கம் அல்லது முக்கியத்துவம்தூக்கலாகஅமைந்தும்விடுகின்றன. எல்லாவற்றிலும் இருந்து சிறப்பான இடம் இலக்கியத்துக்கு வழங்கப்பட வேண்டுமென்பது பொதுவானநியதி எனின் இலக்கியமென்பது காலக்கண்ணாடி எனக் குறிப்பிடப்படுகையில் மக்கள் வாழ்வியல் காலத்துக்குக் காலம் மாறுபடுகையில் அவற்றைப் பதிவு செய்வதால் ஏனைய துறைகளால் விளைவன பற்றியும் பதிவைப் பேணுகின்றதுறையாக மேலோங்கிநிற்கிறது. ஆயினும் இலக்கியத்துறையை வளர்த்தெடுக்கப் பாடுபடுகின்ற இலக்கியக்காரனைக் கிள்ளுக் கீரையாக இன்னமும் இந்த உலகம் தூக்கி வைக்காமல் இருப்பதைச் சுட்டிக் காட்டவே இந்தக் கட்டுரையில் முனைகிறேன்.

விளையாட்டுத்துறைக்கு அகில உலகமும் வழங்கி வருகின்ற முக்கியத்துவத்தில் பத்து வீதமும் இலக்கியத்துறையினருக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கி தூக்கி விடுகின்றமையைக் காணமுடியவில்லை.

**மிகக் கனதியான பொக்கிசங்கள்**

அதேவேளை, இலக்கியங்கள் நாட்டினதும் மொழியினதும் மக்களது வாழ்வியல் கோட்பாட்டு ஆவணமாகவும் அமைவதால் ஏனைய நாட்டார் பார்வைக்கு நம்நாட்டு கலை இலக்கியங்கள் எமது பெறுமதியைக் காட்டுகின்ற மிகக் கனதியான பொக்கிசங்களாகத் தூக்கிப் போட்டுக் கணிப்பீட்டுக்கு தராசிடும் மிக உயர்ந்த திரவியங்களாக உதவுகின்றன.

விளையாட்டுத்துறையில் முன்பெல்லாம் தூக்கத்துக்கு உரிய ஆட்டமாகக் கருதப்பட்ட துடுப்பாட்டம் (கிரிக்கெட்) முன்னணியாக இருந்து வந்த உதைபந்தாட்டத்தையும் விஞ்சி அந்தத் துறையில் ஈடுபடுபவர்களைக் கோடீஸ்வரர்களாகத் தூக்கி வைத்துக் கொண்டுள்ளது.

இலக்கியத்துறையில் ஈடுபடுபவர்களிடையே அத்தகு பெருந்தொகை பணப்பந்தையங்களில் போட்டிகளிடை தேர்வு செய்யும் நடைமுறைகள் இதுவரை நடத்தப்படவில்லை. இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்பாகத் தங்கப் பதக்கங்கள் வழங்குவதாக அறிவித்து நடந்த நிலைமைகளும் தங்கத்தின் விலைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து இல்லாமலே போய்விட்டது.

ஆயினும் சிறு தொகைகளை வழங்க முன்வந்த ஊக்குவிப்பாளர்கள் போட்டிகளை நடத்தி, பரிசுக்கு உரியவர்களைப் பகிரங்கப்படுத்திவிட்டு பரிசளிக்கப்படாமல் கைவிட்டிருக்கும் நிலைமை பலவருடங்களாக நீடிப்பதும் ஒருசில போட்டி நடத்துநர். இடைநடுவில் விட்டு வாளாவிருப்பதுமே இலக்கியத்துறைக்கு வந்துள்ள சாபக்கேடாக அமைந்துள்ளது.

அத்தகைய சிலவற்றைப் பகிரங்கப்படுத்த வேண்டிய தேவையும் இந்தக் கட்டுரைக்குத் தவிர்க்க முடியாமல் ஏற்பட்டுள்ளது. அதே நேரம் கட்டுரையாளரோடு நேரடிச் சம்பந்தப்பட்ட ஞாபகத்துக்கு வருபவையே கோடிடப்படும்போது அதற்கப்பாலும் இருப்பவை அனந்தம் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கன.

**போட்டிகளும் - பேடிமைகளும்**

சிறுதுளி பெருவெள்ளம்' என்பது போல் கீழே விலாவாரியாகத் தரப்படும் தரவுகள் இந்தப் பரந்த பிரபஞ்சத்தில் சிறுதுளியாயினும் கட்டுரையாளரைப் போன்ற எத்தனை பேர்கள் எப்படி எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதைப் பட்டியல் இடுகையில் பெருவெள்ளமாக பிரவாகிப்பதை உணரலாம். இனிநடத்தப்பட்டிருந்த போட்டிகள், புறக்கணிக்கப்பட்ட விதங்கள் அதனதன் சூத்திரதாரிகளைநோக்கலாம். (1972 ஏப்ரல் மாத) கலசம் சஞ்சிகை அட்டைப் படக்கவிதை அதே ஆண்டு ஜூன் இதழில் 10- பக்கத்தில் முதல்பரிசாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பரிசுப்படைப்பாளியிடம் வந்து சேரவில்லை.

1976 இல் மட்டக்களப்புக் கல்முனை முத்தமிழ்க்கழகம் அகில இலங்கை ரீதியில் நடத்திய அமரகவி நீலாவணன் கவிதைப் போட்டியில் 3ஆம் பரிசு கிடைத்தது. பிரதேச பணம் அறவிட்ட மேற்படி போட்டிக்கு இந்தக் கட்டுரையாளரால் அனுப்பிவைக்கப்பட்ட தபாற்கட்டளை மாற்றுவதில் ஏற்பட்ட சிரமத்தால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாகவும் செய்திக் குறிப்பில் (தினகரன் 5.5 .1976) கண்ணுற்றுத் திரும்பவும் காசுக்கட்டளையில் பிரவேசப் பணம் இரண்டாம் தடவை செலுத்தியும் பரிசு 40, வருடங்களைக்கடந்தும் அனுப்பிவைக்கப்படவில்லை.

**மெய்கண்டான் கலாவல்லியில்....**

1977இல் மெய்கண்டான் நிறுவனத்தால் நடத்தப்பட்ட கலாவல்லி மாத இதழ் சிறுகதைப் போட்டியில் என்னால் அனுப்பப்பட்ட நினைவுகள் வாழ்கின்றன. கதை இரண்டாவது பரிசுக்குத் தெரிவாகி, ஓராண்டு சந்தா பரிசு வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. கதையும் அதே வருடம் ஆனி மாத இதழில் பிரசுரமும் ஆகியது. ஆண்டுச் சந்தா அம்போதான்.

**இந்துசமயப் பேரவை**

2001 ஆம் ஆண்டு டிசெம்பரில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு நேரடியாகப் புனையப்படும் கவிதைப் போட்டி நடத்தப்பட்டது. இந்துசமயப் பேரவை நடத்திய போட்டி முடிவுகள் இற்றைவரை வெளியிடப்படவில்லை. செயலாளர் திடீரெனக் கைது செய்யப்பட்டதால் அந்நிலை ஏற்பட்டது.

பேரவைத் தலைவராக இருந்து அமரர் அருட்கவி வீ. வினாசித்தம்பிப்புலவர் அதனால் மனமுடைந்தும் போனார். அவரூடாகக் கட்டுரையாளர் இரண்டாம் இடமான 'கவிமணி' பட்டமும் பணப்பரிசும் பெற தெரிவு செய்யப்பட்டிருந்தது, அறியக் கிடைத்தது. இதுவரை பரிசளிப்பு நடைபெறவில்லை.

அம்முறையுடன் இந்து சமயப்பேரவை வருடா வருடம் நடத்திய கவிமாமணி ' முதலா மிடம் 'கவிமணி' இரண்டாமிடம் வழங்கும் வழக்கமும் நின்று போனதும் துரதிர்ஷ்டமே.

2015இல் முல்லை-புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் கலாசாரப் பேரவை இணைந்து நடத்திய கவிதைப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படாமலே உள்ளது. சம்பந்தப்பட்ட ஒருவரால் போட்டி முடிவுகள் முன்னாள் கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், கட்டுரையாளருக்கு அழைப்பு விடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. இன்னமும் ஒன்றையும் காணோம்.

**தினச் செய்தியின் திருகுதாளம்!**


2016இல் தினச்செய்தி என்னும் புதிய வார இதழ் சிறுகதைப் போட்டியை நடத்தி கதைகளுக்கு 10 ஆயிரம் 7,500, 5,000 பணப்பரிசில்கள் முதல் மூன்று இடங்களைப் பெறும் கதைகளை எழுதியவர்களுக்கு வழங்குவதுடன், 13 கதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டு வைக்கும் மேடையில் எழுத்தாளர்கள் கௌரவிக்கப்படுவார்கள் என்றும் அறிவித்திருந்தனர்.


பின்னர் பரிசுக் கதைகளை வாசகர் தெரிவுக்கு விடுவதாக அறிவித்து அதற்கான கூப்பன்களைப் பத்திரிகையில் பிரசுரித்து 13 கதைகளுக்கும் குறையாமல் பிரசுரமும் ஆகி இருந்தன.

இப்பொழுது பத்திரிகை வெளிவருவதும் தடைப்பட்டுள்ளது. வார இதழில் தெரிவிக்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தில் ஆசிரியருடன் தொடர்பெடுக்க முடியாமல் இருந்தும் வருகிறது.

இடையே விதிமுறைகளை மீறி, வாசகர் தெரிவுக்கு விட்டதும் பாரதூரமான குற்றம் செய்ததாகக் கருத இடமுண்டு. பத்திரிகை விற்பனைக்கு கையாளப்பட்ட யுக்தியாக ஏற்பதற்கு போட்டி முடிவுகளை அறிவித்து பரிசில் வழங்கி தொகுதி நூலையும் வெளியிட்டிருந்தால் மன்னிக்கப்படலாம். இவற்றை எந்த நீதிமன்றுக்கு எடுத்துச் செல்வது.

2016இல் 'தீபம்' ஆடியில் ஓராண்டு முழுமையைப் படைப்பாளிகள் கொண்டாட்டத் திருவிழாவை ஒட்டி சிறுகதை, கவிதை, மாணவர் கட்டுரைப் போட்டிகளை நடத்தி முடிவுகளையும் அறிவித்து விட்டு வாளாவிருந்து வருகிறது. நிர்வாகியுடன் தொடர்பு கொண்ட போது அனுசரணையாளர் கைவிட்டு விட்டதாகவும், தாமே அதனை ஏற்று விரைவில் பரிசில்கள் வழங்கப்படுமென்றும் கூறப்பட்டுள்ளது.





## நாளை தை-13

வியாழக்கிழமை -26.01.2017
திதி: சதுர்த்தசி பி.இ.06.07
நட்சத்திரம்: பூராடம் மு.இ. 09.36
ராகுகாலம்:02.06-03.36 வரை
சுபநேரம்:08.06-09.36 வரை

| ஜனவரி | 2017 | | JANUARY | | |
|---|---|---|---|---|---|
| SUN | 1 | 8 | 15 | 22 | 29 |
| MON | 2 | 9 | 16 | 23 | 30 |
| TUE | 3 | 10 | 17 | 24 | 31 |
| WED | 4 | 11 | 18 | 25 | |
| THU | 5 | 12 | 19 | 26 | |
| FRI | 6 | 13 | 20 | 27 | |
| SAT | 7 | 14 | 21 | 28 | |



# ஜனவரி மாத ராசி பலன்

## துலாம்

எதைச் செய்தாலும் நேர்மையாக செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அதிகாரம் செலுத்தும் ஆர்வமும் கொண்ட துலா ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் தனாதிபதி செவ்வாய் ராசியை எட்டாம் பார்வையாகப் பார்ப்பதால் பணவரத்து இருக்கும். திறமையான செயல்களால் புகழும், அந்தஸ்தும் உயரும். பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்களெல்லாம் கைகூடும். பயணங்கள் ஏற்படலாம். ஆன்மிகப் பணிகளில் நாட்டம் செல்லும். ராசிக்கு நான்காம் இடத்தில் சூரியனின் சஞ்சாரம் இருப்பதால் உங்களது பொருள்களை கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும்போதும், ஆயுதம், நெருப்பு இவற்றை கையாளும் போதும் கவனம் தேவை.

தொழில் ஸ்தானத்தை சூரியன் தனது ஏழாம் பார்வையால் பார்க்கிறார். சூரியனின் சாரம் பலமாக உள்ளது. தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டும். ஓர்டர்கள் கிடைக்க அலைய வேண்டி இருக்கும். பணவரத்து இருந்தாலும் கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. புதிய பதவிகள் தொடர்பான விடயங்கள் தாமதப்பட்டாலும் பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்ப ஸ்தானத்தில் சனி இருப்பதால் குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நன்மையைத் தரும். வாழ்க்கைத் துணையின் உடல் நலனில் அக்கறை தேவை. சிறிய விடயங்களுக்குக்கூட கோபம் வரலாம். அதனால் உறவினர்கள், நண்பர்களிடம் கவன மாக பேசுவது நல்லது. விபரீத ஆசைகள் ஏற்படலாம். கவனம் தேவை. கலைத்துறையினருக்கு சிறப்பான காலகட்டமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய ஓர்டர்கள் கிடைக்கும். முக்கிய நபர்களின் ஆதரவும் கிடைக்கப் பெறுவீர்கள். பணம் சம்பாதிக்கும் திறமை அதிகரிக்கும். கொடுத்த வேலையை திறமையுடன் செய்து முடித்து பாராட்டுப் பெறுவீர்கள். அரசியல்துறையினருக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். நண்பர்களால் தேவையான உதவி கிடைக்கும். எந்தத் தடைகளையும் தாண்டி எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். எதிர்ப்புகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். மாணவர்கள், ஆசிரியர்களிடம் நன்கு பழகி அவர்கள் நன் மதிப்பை பெறுவதுடன் பாடங்களில் இருக்கும் சந்தேகங்களையும் போக்கிக் கொள்வீர்கள். புத்தகங்களை கவனமாக வைத்துக் கொள்வது நல்லது.

**பரிகாரம்:**
கன்னிப் பெண்கள் 9 பேருக்கு தாம்பூலம், பூ, மஞ்சள் கொடுத்து உபசரிக்க எல்லா பிரச்சினைகளிலும் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும்.

## விருச்சிகம்

பார்க்க சாதுபோல் இருந்தாலும் திடீர் உத்வேகத்துடன் எதிலும் வேகம் காட்டும் விருச்சிக ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் ராசிநாதன் செவ்வாய் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குரு சாரம் பெற்று பலமாக இருக்கிறார். எதிர்ப்புகள் அகலும். எல்லா நலன்களும் உண்டாகும். விரும்பியது கிடைக்க கூடுதல் முயற்சி தேவை. தனாதிபதி குருவின் சஞ்சாரத்தால் பணவரத்து அதிகரிக்கும். பயணம் மூலமும் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய நபர்களின் நட்பு உண்டாகும். வாகனம் மூலம் லாபம் வரும். அரசு தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பல விதத்திலும் புகழ் கூடும். மற்றவர்கள் பிரச்சினைகளில் வாதாடி வெற்றி பெறுவீர்கள்.

தொழில் ஸ்தானாதிபதி சூரியன் தனது சுய சாரம் பெற்று தைரிய ஸ்தானத்தில் இருக்கிறார். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம் விரிவாக்கம் செய்ய தேவையான பண உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பாதிபதி குரு லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்க குடும்ப ஸ்தானத்தில் புதன் சஞ்சாரம் செய்கிறார். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்கள் வருகை இருக்கும். திருமணம் போன்ற சுப காரியம் நடக்கும். நிலம், வீடு மூலம் லாபம் கிடைக்கும். கணவன், மனைவிக் கிடையே நெருக்கம் அதிகரிக்கும். சுவையான உணவு கிடைக்கும். மனோபலம் கூடும். பெண்களால் புதிய நபர்களின் அறிமுகமும் அவர்களால் உதவியும் கிடைக்கும். கலைத் துறையினருக்கு தனாதிபதி குருவின் லாபஸ்தான சஞ்சாரம் பண வரத்தை அதிகப்படுத்தும். பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியம் கைகூடும்.

புண்ணிய காரியங்களில் நாட்டம் அதிகரிக்கும். சூரியனுடன் ராசியாதிபதி செவ்வாய் இருவரும் சேர்ந்து இருப்பதால் அனைவருடனும் அனுசரித்துச் செல்வது நல்லது. அரசியல் துறையினருக்கு பூர்வீகச் சொத்துகள் மூலம் வரவேண்டிய லாபம் தாமதப்படும். எதிர்பார்த்த காரியங்கள் நல்லபடியாக முடிய கடினமாக பணியாற்ற வேண்டியிருக்கும். புதிய ஒப்பந் தங்கள் கிடைப்பதில் தாமதம் உண்டாகும். வீண் அலைச்சல் உண்டாகலாம். மேல்மட்டத்தில் இருப்பவர்கள் உங்களை ஆலோசனை செய்யாமல் தானாக எதையும் செய்வது உங்களுக்கு மன வருத்தத்தை தரலாம். மாணவர்களுக்கு போட்டிகள் விலகும். பாடங்களில் கவனம் செலுத்துவீர்கள். சக மாணவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமையில் மாரியம்மனுக்கு தீபமேற்றி அர்ச்சனை செய்து வழிபட எல்லா கஷ்டங்களும் நீங்கும். மன அமைதி உண்டாகும்.

# எழுத்துக்களால் உலகையே வசமாக்கிய பழுத்த பெண்ணியவாதி குறமகள்

கே.எஸ்.சிவஞானராஜா

எட்டு தசாப்த காலமாக உலகில் உச்சரிக்கப்பட்ட மூத்த பெண்ணியவாதியும் முதிர்ந்த படைப்பாளியுமான வள்ளிநாயகி இராமலிங்கம் (குற மகள்) நாம் படிக்கும் காலத்தில் கொடிகட்டிப் பறந்த மேதாவியாவார். அழகு- அளவு, எளிமை -புதுமை, சிந்தனை- வந்தனை, வாய்மை- தூய்மை, அனுமானம் -பெறுமானம், முடிவு- துணிவு, ஆளுமை- திறமை, தரம் -வரம், சந்ததிக்கு -சாருமதி எனப்பல வகையாலும் பேறு பெற்றவர் தான் குறமகள். திருமகளாய் 1933 இல் இலங்கையின் சிரம் எனப்படும் காங்கேசன்துறையில் அவதரித்தார். மாவிட்டபுரம், கீரிமலை துறைமுகம், சிமெந்துத் தொழிற்சாலை, கடற்கரை, கல்லூரிகள் என்று பரவசப்படுத்திய மண்ணில் மலர்ந்த பூவாக இரண்டு வயதிலேயே மணம் வீசத் தொடங்கியது. அது முதுமாணிப் பட்டம் வரை கமழ்ந்தது.

### வண்ணம்

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக எண்ணிலும் எழுத்திலும் கண்ணாக காலையும் மாலையும் பிரகாசித்தார் வள்ளி. தந்தையார் சின்னத்தம்பியின் ஆற்றலும் தாயாரின் அரவணைப்பும் இரண்டு வயது ஆக முன்னரே உயிரெழுத்து மெய்யெழுத்துக்களிலும் உயிர் மெய்யெழுத்துக்களிலும் அவற்றைச் சொல்லவும் எழுதவும் வல்லமை பெற்றார். 1935 ஆம் ஆண்டு மாவிட்டபுரம் கந்தசுவாமியார் ஆலயத்திருவிழாவில் ஓதிய தேவாரம் ஒன்றின் மூலமாகவே யாவராலும் அறியப்பட்டார். அந்தத் தேவாரம் உலகமே வாழவும் வாழ்த்தவும் ஓதக் கூடியதான தேவாரமாகும். எந்தப் பிரபல்யமான எழுத்தாளர்களும் அவரவர் சமயப்பின்னணியில் தான் முழுமை பெறுகிறார்கள். ஆனால் ஒரு சிலர் அதனை மறந்து விடுகிறார்கள். வள்ளிநாயகியோ மாவிட்டபுர முருகனைத் தான் கனடாவில் இறக்கும் வரைக்கும் முருகா முருகா என அடிக்கடி சொல்லி மாவிட்டபுரத்தானைக் கனடாவுக்கு அழைத்து மகிழ்ந்தார். முருகன் இவரது குடும்பத்தில் பேறாகியதால் மகளுக்கு குக பாலிகா எனப் பெயரிட்டார். தாயைப் போலவே மகளும் அதிவிவேகியாகி இளம் பருவத்திலே மேஜராகி இந்த மண்ணிலே சுவர்க்கமடைந்தார். எது எப்படியிருந்தபோதும் குறமகள் துவளாமல் கொள்ளாமல் மகளின் சுவடுகளிலிருந்து உயிர்பெற்று மீண்டெழுந்தார்.

### முக்கனிச் சோறு

கனகசெந்திநாதன், நாகராஜன், சிவத்தம்பி மூவரினது தளத்தில் தனது களத்தை வளமாக்கிய வள்ளியாம் குறமகள் பெண்கள் அடிமையாகி வேதனையடைவதையெண்ணி குமுறியதன் பிரகாரம் பெண்களின் கண்ணீரைக் குறமகள் துடைக்க முடிந்தது. பெண்கள் தைரியமாக எழுந்து நிமிர்ந்து உயர்ந்து கௌரவம் பெறுவதற்கு வித்திட்டவர் குறமகளே யாவார். அவரைத் தொட்ட இடம் சீதனக் கொடுமையே. இதோ அந்தச் சம்பவம்.

### தொட்ட இடம்

ஒடிந்து நலிந்து போன ஒருகுடும்பம் வறுமையின் கோரப்பிடியில் அகப்பட்ட போது கல்வியால் நிமிர்ந்தது. அடுத்த கட்டம் திருமணம், அடுத்த கட்டம் சீதனம். வீடே இல்லாத போது சீதனம் எப்படி? சீதன ஒப்பந்தத்தில் தங்கையின் திருமணம் ஒப்பேறியது. மூன்றாம் நாளிலேயே சீதனப் பிரச்சினையால் அண்ணனும் தங்கையும் வீடு வீடாகக் கடன் கேட்டு அலைந்தார்கள். கிடைக்கவில்லை. அழுத வண்ணம் மாமியாரிடம் சரணடைந்தார்கள். மாமியாரும் மகனுமாகக் கல்யாணப் பெண்ணை வருத்தி வாட்டி எடுத்தார்கள். சாவின் விளிம்புக்கே நகர்த்திச் சென்றார்கள். இறைவனே கைவிட்ட நிலையில் தங்கையும் அண்ணனுமாக அடுத்தடுத்துத் தற்கொலை செய்து கொண்டார்கள். இதை எம் சமூகமும் வாய்மூடி மௌனமாக வாழ்ந்ததேயொழிய வழிகாட்டவும் வீட்டுக்கு வந்த மகாலட்சுமியைப் பேறாக்கவும் முடியாமல் தலை விதியை வணங்கி வரவேற்றனர்.

இந்தச் சம்பவம் ஒன்றே தான் பன்னிரண்டு வயதான வள்ளிக்கு இதயத்தில் வலியை ஏற்படுத்தியது. கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் கழிந்து பதினேழு வயதான போது தான் பேனா உயிர்பெற்றது. காரணம் தற்கொலை செய்த பெண் கர்ப்பிணியும் கூட.

### படைப்பு

அந்தச் சம்பவமே கருக்கொண்டு தனது முதலாவது சிறுகதையைப் பிரசவித்தார். அதுவே ஈழகேசரியில் போலிக்கௌரவம்என்றபெயரில்வெளி வந்தது. போலிக் கௌரவம் என்ற சிறுகதை சமூகமட்டத்தில் பெரும் புரட்சியையும் விழிப்புணர்வையும் மாற்றத்தையும் ஏற்படுத்தியது. அத்துடன் பெண்களின் மாற்றத்துக்கும் ஆண்களுக்கான திருப்பத்தையும் ஏற்படுத்த வல்லது. கல்வி ஒன்றே என்ற முழக்கத்தையும் தனது படைப்புக்களில் புகுத்த ஒரு போதும் தவறியதேயில்லை. அதனால் பெண்ணியவாதியானார்.

வீரகேசரி
ஈழகேசரி
தினகரன்
கலைச் செல்வி
ஆனந்தவிகடன்
யாழ்ப்பாண ஊடகங்கள்
சுதந்திரன்
சுடர்

ஆகியவற்றிலும் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கனடா ஊடகங்கள், தனிப்பட்ட ஒலிப்பரப்புக்கள் யாவற்றிலும் இவரது எழுத்துக்கள் ஜொலித்தன. இவர்

சிறுகதைகள்
நாவல்கள்
கட்டுரைகள்
நாடகங்கள்

என நூற்றுக்கணக்கான படைப்புக்களை வெளியிட்டுத் தமிழிலக்கிய படைப்பிலக்கியப்பரப்பில் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். மத்தாப்பு என்ற குறுநாவலே குறமகளை 15.09.2016 ஆம் திகதி கனடாவில் இறக்கும் வரை ஒட்சிசன் கொடுத்து வாழ வைத்தது என்றால் அவருக்கு அது சாந்தியே.

> பெண்கள் தைரியமாக எழுந்து நிமிர்ந்து உயர்ந்து கௌரவம் பெறுவதற்கு வித்திட்டவர் குறமகளேயாவார். அவரைத் தொட்ட இடம் சீதனக் கொடுமையே. இதோ அந்தச் சம்பவம்.

# தமிழர்கள் அனைவரும் நலமே வாழ உதயனின் படையல் உண(ர்)வாகியது

கருடன்

பொங்கல் புதுவருட மலர் உதயனின் புதிய பரிணாமம். அடேயப்பா! எங்கள் கரங்களில் பொங்கலுடன் இனித்த சூரியப் படையல் 144 பக்கங்களில் சொக்க வைத்து உணரவைத்த உதயன் குடும்பத்தவர்கள் அனைவருக்கும் பாராட்டுகள் உரித்தாகுக.

தரமான, வரமான, திறமான கட்டுரைகள். கனதியான வார்ப்புக்கள் கடினமான உழைப்புக்குக் கிடைத்த காத்திரமான வெளியீடு. அதன் நிறையும் நிறைவும் வெல்ல முடியாதது அற்புதமரமாய் ஜொலிக்கும் பல்சுவை வயக்கரா இது.

**1. கட்டுக்கரைப்படையல்**

கண்டவையும் கண்டுபிடித்தவையுமான ஆய்வுக்கும் பேராசிரியரின் நிறுவுதலுக்கும் ஒரு பதக்கம் சூட்டலாம். க.புஷ்பரட்ணம் ஐயாவுக்கு இவரின் இன்னுமோர் ஆய்வு அண்மையில் வெளியிடப்பட்டது யாதெனில் மாணிக்கவாசக சுவாமிகள் குதிரைகள் வாங்க வந்த இடம் நெடுந்தீவு தான் என்று நிறுவுகின்றார். வெல்க எம் தமிழ் மண்.

**2.ஊடுருவி**

இலங்கையில் ஊடுருவி ஆக்கிரமிக்கும் அந்நிய உயிரினங்கள் பற்றிய விழிப்புணர்வுக்கு கலாநிதி திருமதி ஞானேஸ்வரனின் கருத்துக்கள் வலுச்சேர்க்கின்றன. வித்தியாசமான ஒரு பார்வை. எமது வாழ்வும் அப்படித்தானே.

**3.நீர்**

ஒருவர் தனது சொந்தக் கிணற்றிலிருந்து இறைக்கும் அதிக நீர் அயலவர்களையும் சுற்றுச் சூழலையும் பாதிக்கும். யாருக்குப் புரியப்போகிறது. றேணுகாபதி கந்தையாவின் பவ்வியமான கருத்துக்கு பலே!

**4. வாசிப்பு**

இலக்கியம் படைத்தவனே அரசாள வேண்டும்" உலகியே வாசிப்பில் அதிகமானவர்கள் கியூபியர்களே! சிவராசா சிவ கருணாகரனின் படையல் பொங்கலுக்கு விடைகளாயின.

**5. பெண்**

பெண்ணும் ஒரு சிறந்த விளை நிலம். அவள் மனித வலுவுக்கான ஒரு வளமான வயல். தை நீராடிய தவம் பெண்களாலே தரப்படுகிறது. மணியான கருத்து! மனோன்மணி அல்லவா! உதயனின் தேடல் வென்றதே!

**6. இலக்கியம்**

இலக்கியம் மக்களுக்கானதே என்ற கே.ஆர்.டேவிட்டின் கருத்துக்கு எஸ்.மல்லிகா உயிரூட்டுகிறார். அராலியூரில் ஒரு மல்லிகை பூத்திருக்கிறது.

**7.மதிப்பீடு**

ஒரு மாணவனை முழுமையாக மதிப்பீடு செய்ய உதவுவது பரீட்சையா? பழக்க வழக்கங்களா? நெடுந்தீவு மகேஷ் சும்மா அல்ல! நல்ல கேள்வி! பண்புக்கு நிகரேது? பண்பு தவறினால்?

**8. கலைஞன்**


கலைஞனாக இருப்பதற்கு முதற்படி அவன் மனிதனாக இருப்பதே. இன்னுமொன்று கலைக்குத் தம்மை அர்ப்பணித்தல்! சரி அந்த நிலாந்தன் யார் என்று ஆசையாக இருக்கிறதே! ஆசை இராசையா ஓர் அற்புத மனிதன்தான். நகுதாசன் ஜெயதாஸின் வார்ப்பு அருமை.

**9.அரங்கம்**

சந்தியில் ஒரு சம்பவம் இங்கிருந்தே ஆங்கில மொழிக் கற்பித்தலில் ஓர் அரங்கத்தை எமக்குக் கற்பித்தவர்கள் ஆரம்பித்திருப்பார்களாயின் நாமும் நாமாக வென்றிருக்கலாம். அரங்கச் செயற்பாடுகள் உள்ள நேரத்தில் நாம் பிறந்திருந்தால் எப்படி இருக்கும்? பத்தியமான கட்டுரைக் குக் கந்தையா ஸ்ரீகணேசன் சொந்தமாகின்றார்.

**10. முடியும்**

உன்னால் முடியும் தம்பி நானும் அதைத் தான் சொல்கிறேன் மதிசுதாவுக்கு! துலைக்கோ போறியள்" - சி.ப.வேந்தனின் முயற்சி மதிசுதாவுக்கு இனிமேல் பக்கபலமாக அமையும். உதயன் கைதூக்கி விடுவான்.




**11. ஆசை**

சுதாவுக்கு ஒரு பூகோள உருண்டை கொடுக்க வேண்டும். சின்னச் சின்ன ஆசைகள் தான். ஒரு வாழ்க்கையின் விடிவுகள். ஐ. சாந்தனுக்கு வேறென்ன ஆசை?

**12. சுருதி**

தவமைந்தன் யாழ்.மண் செய்த தவமே! யாழ்.மண்ணின் சுருதியே அவர்.

**13. ஆதங்கம்**

சீக்கிரமே பொங்கலாம் கேப்பாப்பிலவு முருகன் 2018 இல் உங்களைப் பொங்க அழைப்பான். கா.கணேசதாசனின் ஆதங்கம் மிகமிகச் சரியானதே.

**14. கலாசாரம்**

கதிரவனுக்கும் காளைக்கும் காக்கைக்கும் அதிலும் மேலாக உழவனுக்கும் உழைப்புக்கும் ஊரே ஒன்று திரண்டு எடுக்கும் கலாசார விழா - தைப்பொங்கல் பண்டிகை என வீ.எஸ்.ரியினது பார்வை உதயனுக்கு ஒரு கார்வையாகிறது.

**15. கண்ணாடி**

சித்திரையில் புத்திரன் பிறந்தால் என்ன தான் செய்யலாம்? அப்போ ஆடிமாதம் சிந்திக்க வைத்த சிறுகதை விடையில்லாத வினாக்களில் சில குடும்பங்கள் பொங்கியது பொங்கல் அல்ல! மனமே பொங்கியது. மிருசுவில் தமிழ்தாசன் ஒரு காலக் கண்ணாடியே.

**16. தேன்**

தந்தையார் பெருங்கருணை உள்ளம் படைத்த சிவபக்தன் அல்லவா! கருணைக்குத் தேன் என்ன? கோள் என்ன? ஐம்புலனும் அடக்கம் கோகிலாவின் அந்த மூன்று நாள் இனியும் செல்லம் கொஞ்ச முடியாது.

**17. மனச்சாட்சி**

இலக்கியம் ஒவ்வொரு சமூகத்தினதும் மனச்சாட்சி சாதனைகளை மட்டுமல்ல குறைகளையும் தவறுகளையும்சொல்ல வல்லது அது. நன்று கிரிஷாந்! இன்றும் நின்று வெல்பவையாகட்டும்.

**18. இரகசியம்**

எமில் - டோலி" இப்படி எத்தனைபேர் நல்ல வேளை இங்கு அப்படியென்றால்...? பரணீதரனின் முடிவு கதையை மறுபரிசீலனை செய்ய வைத்துவிட்டது. தலைப்பு புதுமையானதே!

**19. பகிர்வு**

வாசிப்பின் கதவுகளை அகலத் திறந்து வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் அழைப்பும் உற்சாகமும் விழிப்புணர்வும் தருகிறார்கள். அது மட்டுமன்றி பழந்தமிழ் இலக்கியங்களில் நுழைந்து தமிழை அனுபவிக்குமாறு தூண்டுகிறார்கள். வாசகனை உள்ளவாறே வைத்திருப்ப வனல்லன் எழுத்தாளன். எழுத்துக்கள் உயிரோட்டமாகவும் அதேவேளையில் தர்மம் பிசகாமலும் உண்மைத் தன்மையதாகவும் படைப்பு அமைய வேண்டும். கவிதைக்கு மட்டுமல்ல எல்லாக் கலைப் படைப்புக்களுக்கும் லயம் அவசியம். ஆனால் மனதைத்தைக்கும்படி சொல்வதானால் வாசிப்பதற்குத் தயாராகவும் இல்லை. அதே வேளை வாசிப்பதற்கு மனிதர்களும் இல்லை. நூல்களும் எழுத் தாளர்களும் தினந்தினம் உருவாகிய வண்ணமாயிருப்பதனால் பல கோணங் களில் வாசகர்களால் படைப்புக்கள் விமர் சிக்கப்படுகின்றன. விமர்சகர்கள் என்ப வர்கள் வாசகர்களே!

**20. பதிவு**

எது எப்படி இருந்தபோதும் வாசகர்கள் எழுத்தாளர்களை உரிய முறையில் நிறுத்து வைத்திருக்கிறார்கள். நீ உருப்பட மாட்டாய் என்று ஆசிவழங்கியவர்களே நாணும்படியாக பல்கலைக்கழகங்கள் பிள்ளைகளை அரவணைத்துள்ளன. குழந்தைகளின் மொழிகளையே எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லையே. ஆகவே படைப்புக்கள் தாக்கங்களின் வெளிப்பாடேயாகும். அவற்றைத் தர்க்கிக்க மனிதனுக்குச் சுதந்திரம் உண்டு.

கிளிநொச்சி வவுனியாவைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் புதிய கண்டுபிடிப்புக்கள் பலவற்றைக் கண்டுபிடித்து ஊடகங்கள் மூலம் பிரபல்யப்படுத்திய போதும் பெரியவர்கள் மனந்திறந்து பாராட்டிய செய்திகளுக்குச் சொந்தக்காரர்களாக ஏன் நாமாக இருக்கக் கூடாது. காரணம் நாம் நாமாக இருப்பதில்லை.

**21. கவிதைச் சரம்**

1.மாண்டாலும் மீண்டும் உயிர் பெறுவோம் என்ற அபிர்ராஜன் அன்ரனி பீற்றரின் நம்பிக்கையும்

2. பொய்கள் வேடப்புனைவு கலைந்தெங்கும் புது மெய்கள் பூக்காதோ? என்ற த. ஜெயசீலனின் ஆதங்கமும்

3.எனது திசையை எந்தத் திசைகாட்டியும் காட்டத் தயாராகவே இல்லை" என்ற கோகுலராகவனின் அஜீரணக்குறிப்பும்

4. மாதகல் மயூரனின் உலக இரட்சகனின் வரவும்

5. சின்னத் தனங்களைச் சிறைவைத்துப் பென்னம் பெரியவனாய் உன்னை நீ காட்டினாயா? அருமையான வார்ப்புக்கு உரிமையாகும் நாகேந்திரம் நவராஜ்

5. நாடியைப் பார்த்தார் இல்லை! லேடியைப் பார்க்க வேண்டும்" என்றார் வைத்தியர்! அமரர் ம.பார்வதிநாதசிவத்துக்கு ஒரு சபாஷ்!

22. விளைந்த நெல்லு கரும்பு தானியம் வீட்டை அடைந்த செய்தியைக் கவிதைக்குள் வரமாக்கிய நடராசா இராமநாதனின் பாங்கும் பங்கும்

23. மகிழ்ச்சியை நெய்த வேலணையூர் தாஸின் வர்ணஜாலங்கள்

24.தொழுவத்தில் பிணைத்த பசுவின் கதறல்களைச் சுமந்த ந.சத்தியபாலனின் சிதறல்கள்

25. இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே. சங்குவேலி தின்னவேலி, அச்சுவேலி, நீர்வேலி எல்லா வேலிகளுக்குள்ளும் சங்குவேலியோடு அப்பிளுக்குப் போட்டி போட முடியுமா? சோ.பவின் கற்பனைக்கு வெள்ளரியின் விற்பனை - பலே!

மற்றும் பென்னம் பெரிய படைப்பாளிகளின் படையல்கள் யாவும் ஆறுதலாக இருந்து ரசித்துச் சுவைத்து அனுபவிக்க வேண்டிய பொக்கிசங்களாகும். வருடம் முழுக்க வாசிக்க வைத்து விட்ட உதயன் பொங்கல் சிறப்பிதழ் 2018 இல் எப்படி இருக்கும்!

**26. ஒருவரல்ல**

நாம் எழுதும் சிறுகதைகள் மூலம் ஒருவராவது பயனடைய வேண்டும். ஆம் ஒருவரல்ல பலர். கு.சக்தீனா ஒரு சரியான எழுத்தாளரைக் கண்டுபிடித்து அவரது இதயத்தைத் திறந்து பார்த்து உள்ளபடி அனுபவித்து எழுதியுள்ளமை பொங்கலில் சர்க்கரைபோல் இனிக்கிறது. சக்தீனாவுக்கு ஒரு சக+தீனாக்கலாம். மகாலிங்கசிவம் பேறாகிறார்.

போட்டியாக இருங்கள். பொறாமைப் படாதீர்கள். யாருடைய சாயலுமின்றிச் சுயமாக இருங்கள். சுயமாக எழுதுங்கள். எழுத ஆசைப்படும் முதல் படைப்பாளிக்குப் பேனாவாக இருங்கள். கரம் கொடுங்கள். அவர்களை இனங்காட்டுங்கள். திருமதி றஜீவன் தர்மினியின் மேற்படி கருத்துக்களுக்கு மல்லிகா மூலம் ஒருபதக்கம் சூட்டலாம்.

28. ஒரு கனியை அடித்துப் பழுக்க வைக்க இயலாது. அது இயற்கையாகவே பழுக்கும்போது அடடா என்ன ருசி இதுபோலவே நடன அமைப்பும் தேவையில்லாததும் வேண்டாததுமான துள்ளல் கற்பனை மனதை நெருடவல்லனவே. சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லியுள்ளார் சாந்தினி சிவனேசன்.

**மான்மியம்**

29.மருத்துவரின் கருத்தை நெஞ்சினில் இருத்துவதைப் பொருத்தமாய் நயினை மான்மியம் வரமாக்கியது.

அடியவர்கள் - வேல்கொடு வருவார்
விழிகொடு வருவார்
கால் கொடு வருவார்
கரங்கொடு வருவார்
பால்கொடு வருவார்
பழங்கொடு வருவார்
மால் கொடு வருவார்
மனங்கொடு வருவார்

குண்டலினிபுரக் காப்பியம் கொண்ட பேறு தொண்டர்களுக்கு உண்டு என்று மருத்துவர்சி.யமுனாநந்தா பக்தி சொட்ட பொங்கல் படையலாக்குகின்றார்.

படையல்களில் கந்தபேரின்பம், ரமேஷ், பிரேம், மகாலிங்கசிவம் (மாலி), மதுரகவி, தேவிபரமலிங்கம், அஜந்தகுமார், இயல்வாணன், சபாரத்தினம், தவரத்தினம், சோ.ப, மல்லிகா, ஜெயதாஸ், கலாநிதி கே.ரீ. கணேசலிங்கம், சேரலாதன், கஜவதனி, அபிராமி, சிவகருணாகரன், சிதம்பர திருச்செந்திநாதன், றேணுகாபதி, யதார்த்தன், தர்சனன், யோசப்பாலா, தர்சன், லலீசன், செல்வமனோகரன், கௌதமி, தேவானந், சட்டநாதன், கடம்பேஸ்வரன், சிந்துதாசன் ஆகியோரின் படையல்கள் அந்த மாதிரி! பிரேம் சொன்னதுபோலப் பக்கெனப் பிடித்த வன்நாள். இது பிரமாதம் இலக்கிய வயக்ரா!

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மாணவர் அறிவுத்தேடலுக்கு பெற்றோரின் பங்களிப்பின் முக்கியத்துவம்

■ தெல்லியூர்த்தேவி

கல்வியானது பாடசாலை, ஆசிரியர் என்று கூறுவதற்கு முதற்படியாக அது வீட்டிலேயே ஆரம்பிக்கப்படல் வேண்டும். நேர்த்தியான வீட்டுக்கு இணையான பள்ளிக் கூடமும் இல்லை. நேர்மையான பெற்றோருக்கு நிகரான ஆசிரியரும் இல்லை என்றார் காந்தி அடிகள். ஒவ்வொரு வீட்டிலும் பெற்றோர் தங்களின் குழந்தைகளை வளர்க்கவில்லை, எதிர்கால சுபீட்மான சமூகத்தை நாட்டை வளர்த்து வளமாக்குகிறார்கள் என்பதே வெள்ளிடைமலை. இளைய தலைமுறையினரின்எதிர்கால ஒளிமயமான, சுபிட்சமான வாழ்வுக்கு பெற்றோரின் பங்களிப்பே முதலிடம் வகிக்கின்றது என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது.

பிள்ளைகளை வளர்க்கும் ஓர் உன்னத பணியைச் செய்யும் வாய்ப்புப் பெற்ற காரணத்தாலேயே அந்தவாய்ப்புப் பெற்றவர்கள் 'பெற்றோர்' என்ற உன்னத சொல்லால் அழைக்கும் பேறு பெற்றவர்களாக ஆகின்றனர். குழந்தை வளர்ந்து நன்மக்களாக வீட்டுக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பெறுமதி உடையவர்களாக ஆக்குகிறார்களோ! அவர்கள் எல்லோரும் பேறுபெற்றவர்களே. கருத்தரிப்போரெல்லாம் பெற்றோரல்லர் கருத்துடன் வளர்ப்போரே பெற்றோராவர்"

> குழந்தைகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை பெற்றோர்கள், முதியவர்கள் தங்கள் செயலில் செய்து காட்ட வேண்டும். குழந்தைகள் பின்பற்றுவதற்கு பெற்றோரின் தியாகமே குழந்தைகளைத் தியாக சீலர்களாக மாற்றும். இன்று குழந்தைகளுக்காக நேரத்தை ஒதுக்கி அவர்களுடன் கலந்துரையாடி மகிழ்வித்தால் நாளை பெற்றோரின் முதுமைப்பருவத்தில் அவர்கள் தங்கள் நேரத்தை ஒதுக்கி பெற்றோரை மகிழ்விப்பர். குழந்தைகளின் முன்னேற்றம் பெற்றோரின் அரவணைப்பிலேயே தங்கியுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

தமது குழந்தைகளை குழந்தைத் தொழிலாளிகளாக விற்பவர்களும், முட்புதரில் குப்பைத் தொட்டியில் வீசுபவர்களும் பெற்றோர்களாக மதிக்கப்படுவதில்லை. பெற்றோரில் இருவித இயல்புடையோர் காணப்படுகின்றனர். அதாவது பூனையானது தனது பிள்ளைக்ளை ஓரிடத்தில் வைத்து பராமரிக்க முடியாத கட்டத்தில், தன் குட்டியை வாயில் கவ்விக் கொண்டு பத்திரமாக இடம்விட்டு இடம்செல்லும். தாய்ப்பூனை எவ்வளவு வேகமாக ஓடினாலும், பாய்ந்தாலும், தாவினாலும் குட்டியைப் பத்திரமாகப் பாதுகாப்பாகக் கொண்டு சென்று சேர்க்கும்.

ஆனால், குரங்கு தன்குட்டியை எடுத்துச் செல்லும்போது குட்டியானது தன்தாயின் வயிற்றைக் கெட்டியாக இறுகப் பிடித்துக் கொள்ளும். தாய்க்குரங்கு வேகமாகத் தாவிச் செல்லும்போது குட்டியானது கீழே விழுந்து விடலாம். மகாத்மா காந்தி அடிகள் கூறிய கருத்தை ஒவ்வொரு பெற்றோரும் புரிந்து கொள்ளல் நன்மை பயக்கும். "ஒரு நல்ல குழந்தை தனது முதல் 5 வயதுக்குள் கற்றுக் கொள்ளாததை எந்தக் காலத்திலும் கற்றுக் கொள்வதே இல்லை" - என்றார். கருவில் இருக்கும் போதே குழந்தையின் கற்றல் ஆரம்பமாகி விடுகிறது.

குழந்தை பிறந்ததும் தன் சூழலிலுள்ள தன்னுடன் இயங்குகின்ற பெற்றோரைப் போலவே செயற்படக் கற்றுக் கொள்கிறது. இந்த உண்மையை அறிந்து, பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் உடல் நலனுக்கும் - மனநலனுக்கும் - ஆன்ம நலனுக்கும் வேண்டிய அறிவைப் பெற்று அதன் பயன்களைக் குழந்தைகள் பின்பற்றக் கூடிய வகையில் வாழ்ந்து காட்டுதல் வேண்டும்.

இன்றைய பெற்றோர்கள் பலர், தாங்கள் தங்கள் தாய் தந்தையரிடம் வளர்ந்த மாதிரி கண்டிப்புடன் தங்கள் பிள்ளைகளுடன் நடந்து கொள்வதா? அல்லது தொலைக்காட்சி விளம்பரங்களில் வரும் அப்பா அம்மா மாதிரி குழந்தைகளுடன் ஜாலியாகப் பழகுவதா என்ற குழப்பநிலையில் தவறிழைக்கிறார்கள். இன்று தேவையான இடத்தில் தம் பிள்ளையைக் கண்டித்தோ அடித்தோ வளர்க்காத பெற்றோர் நாளை தம் மார்பில் தாமே அடித்துக் கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத்தள்ளப்படுவதைக்காணமுடிகிறது. குழந்தை வளர்ப்பில் இயற்கை அன்னையின் நடைமுறையைப் பின்பற்றினால் வெற்றி நிச்சயம்.

*நம்பிக்கை விதைதூவி அன்பெனும் நீர்பாய்ச்சி*
*நன்னெறிக்கதைகள் எனுமுரமிட்டு*
*கண்காணிப்பெனும் வேலி போட்டு*
*கலந்துரையாடல் மூலம் களை நீக்கி*
*கலகலப்பான வாழ்வை அமைத்திட*
*குழந்தைகளிடம் மனித நேயத்தை*
*வளர்த்திடல் வேண்டும்.*

குழந்தைகளை மனிதர்களாக்க முயலாமல் வெறும் படிப்பாளியாக்கி பணம் காய்க்கும் மரமாக்க முயற்சித்தால் முயற்சி பயனளித்தாலும் அவர்கள் சாத்தான்களாகக் குடும்பத்துக்கோ சமுதாயத்துக்கோ, நாட்டுக்கோ உதவாது தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளக்கூடிய நிலைக்குத்தான் தள்ளப்படுவார்கள். அதாவது குரங்கின் கைப்பூமாலைபோல் அழிவிடுவார்கள். அவர்களது படிப்பு, புகழ், பணம் எதுவுமே பயனற்றதாகிவிடும்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு கர்மயோகத்தைப் பற்றி விளக்கும்போது மூவுலகிலும் எனக்கு கடமை ஏதும் கிடையாது. ஆயினும் நான் கர்மம் செய்து கொண்டே இருக்கிறேன். நான் கர்மத்தில் ஈடுபடாவிட்டால் மனிதர்கள் என் வழியையே பின்பற்றுவர் என்றார். மக்கள் கர்மம் புரிய பகவான் கர்மம் புரிவதுபோல, குழந்தைகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பெற்றோர்கள், முதியவர்கள் தங்கள் செயலில் செய்து காட்டவேண்டும். குழந்தைகள் பின்பற்றுவதற்கு பெற்றோரின் தியாகமே குழந்தைகளைத் தியாக சீலர்களாக மாற்றும். இன்று குழந்தைகளுக்காக நேரத்தை ஒதுக்கி அவர்களுடன் கலந்துரையாடி மகிழ்வித்தால் நாளை பெற்றோரின் முதுமைப்பருவத்தில் அவர்கள் தங்கள் நேரத்தை ஒதுக்கி பெற்றோரை மகிழ்விப்பர். குழந்தைகளின் முன்னேற்றம். பெற்றோரின் அரவணைப்பிலேயே தங்கியுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

பெற்றோர்கள் எதைச் செய்தாலும் தங்கள் நன்மைக்காகத்தான் செய்கி றார்கள் என்பதைக் குழந்தைகள் புரிந்து கொள்ளும் வகையில் செயற்பட்டால் அவர்கள் தவறான பாதையில் செல்ல மாட்டார்கள். அத்தகைய நம்பிக்கை குழந்தைகளிடம் ஏற்படும் படி பெற்றோர் நடந்து கொள்ளல் வேண்டும். குழந்தை வளர்ப்பு என்பது இறைவனால் அளிக்கப்பட்ட இறைபணி. அதைச் சரியாகச் செய்வதே முதற்பணி. தான் ஒப்படைத்த குழந்தைகளைச் சரியாக வளர்க்காமல் தன்னை வழிபடுவதை இறைவன் விரும்பமாட்டார்.


ஒவ்வொன்றிலும் நன்மையும்- தீமையும் இருக்கும். தீமையை விலக்கி நன்மையை மட்டும் ஏற்பதே வாழ்தல் எனப்படும். எனவே நல்லவற்றை மட்டும் அறிந்து கற்று பயனடைய வேண்டுமென குழந்தைகளிடம் விளக்கிக்கூறி அவர்களை நல்வழிப்படுத்தல் வேண்டும்.

பிள்ளைகள்-குழந்தைகள் படிக்கும் நேரங்களில் பெற்றோர்களும் அவர்கள் கூடவே இருந்து படிப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பதே சிறந்த செயற்பாடாகும். அதைவிடுத்து பிள்ளைகளைப் படிக்கும்படி கூறிவிட்டு அவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதோ வேறு ஆள்களுடன் சல்லாபிப்பதோ சண்டையிடுவதோ ஆகாது.


மேலும், தொலைக்காட்சியில் வரும் எத்தனையோ நல்லவிடயங்களைப் பிள்ளைகளுடன் சேர்ந்தே பெற்றோரும் அவதானிக்கும் போது இருபகுதியினருமே அதன் உச்ச பயனைப் பெறக்கூடியதாக இருக்கும்.

உலகமயமாக்கல் அபரிமிதமான அறிவியல் வளர்ச்சி ஆகியவற்றால் கிடைத்த தொலைத்தொடர்பு தகவல் தொழில்நுட்பம் தகவல் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றை முறையாகப் பயன்படுத்தாததால் ஏற்படும் கலாசார சீரழிவைத் தடுத்து நிறுத்தும் பொறுப்பு பெற்றோருக்கே உண்டு.


(24ஆம் பக்கம் பார்க்க)



மு.ஈழத்தமிழ்மணி



# தமிழ் மொழிக்கு அழிவு ஏற்படப் போவதில்லை



தேமதுரத் தமிழோசை பரவுக உலகமெலாம்; தமிழுக்கு அமுதென்றுபேர், இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர், தமிழ் பக்திமொழி, கனிமொழி, செம்மொழி, தேனினும் இனியமொழி, என்றெல்லாம் பெருமை பேசுகின்ற தமிழன் தமிழில் பேசவும், தமிழனாய் வாழவும் இன்று வெட்கப்படுகின்றான்.

தமிழாங்கிலத்தில் பேசிமகிழ்வதே இன்றைய காலத்தில் மரபாகிவிட்டது. அண்மைக் காலமாகத் தமிழோடு சிங்களச் சொற்களும் அநேகமானவர்களின் வாயில் இலகுவாக நுழைந்து விட்டன. இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் சரி தமிழ்த் தொலைக்காட்சிகளிலும் தமிழ் மொழி பின்தள்ளப்பட்டு ஆங்கில உச்சரிப்புடனேயே சகல நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.



சகல தமிழ் தொலைக்காட்சிகளுக்கும் தமிழ் மொழி என்பது எட்டாப் பொருத்தமாக இருக்கின்றது. தினசரிப் பத்திரிகைகளில் ஆங்கிலச் சொற்களே கவர்ச்சியான இடத்தைப் பிடித்து வருகின்றன. ஆங்கிலத்துக்குள் தமிழும், தமிழுக்குள் ஆங்கிலமும் ஒன்றுக்குள் ஒன்று புகுந்து விளையாடுகின்றன. வர்த்தக நிறுவன பெயர்ப் பலகைகளிலும் தமிழை விட ஆங்கிலமே எழுச்சியாய் காட்சியளிக்கின்றது.

அதுமட்டுமன்றி, கைபேசியூடாகப், பேசப்படுகின்ற வார்த்தைகள் குறும்தகவல்கள் உட்பட அநேகமானவை ஆங்கிலத்தில் அமைவதுடன், தமிழ் மொழிப் பிரயோகத்தின்போது இந்த இரண்டு மொழிகளோடு பிற அந்நிய மொழிகளும் ஆங்காங்கே ஊடுருவுகின்றன. இன்றைய யுகத்தில் இப்படிப் பேசினால்தான் தமிழ்மொழி சிறப்புப் பெறும் என்று நினைக்கின்ற தமிழர்கள் அதிகமாகவே எம் நாட்டிலும், இந்தியாவிலும் காணப்படுகின்றனர். தமிழக மக் களது ஆங்கிலமோகம் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தென்னிந்தியாவிலிருந்து வெளிவருகின்ற தமிழ்த் திரைப் படங்களில் அநேகமானவை ஆங்கிலச் சொற்களில் மூழ்கியிருக்கின்றன. படத்தின் தலைப்புப் பெயர்களும் ஆங்கிலச் சொற்களிலேயே வைக்கப்படுகின்றன. பாடல்கள்கூட ஆங்கில மொழிக் கலப்பற்ற விதத்தில் பாடலாசிரியர்களால் கூடியவாறு இயற்றமுடியாத நிலை, தமிழகத்தின் சினிமாக்களில் உருவாகிவிட்டது.

உதாரணமாக, ஒரு சில வருடங்களுக்கு முன்பு வெளிவந்த கொலைவெறி... கொலைவெறி... கொலைவெறிடா என்ற திரைப்பாடல் மூலம் தமிழ் மொழியும் கொலை வெறித்தாண்டவத்துக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. தமிழ் அன்னை இப்பாடலை இயற்றியவர் குறித்து என்ன நினைத்திருப்பாளோ தெரியவில்லை.

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் ஒரு மொழியை எங்கும் கண்டதில்லை என்று சொன்னவனும் தமிழகத்தில் பிறந்த பாரதியாரும் உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்று கூறிய தமிழகத்தில் பிறந்த பாரதிதாசனும் மட்டுமன்றி தமிழகத்திலும், ஈழத்திலும் தமிழுக்காக தமிழை வளர்ப்பதற்காக பிறந்த தமிழ்க் கவிஞர்கள் பல நூற்றுக்கணக்கானவர் தோன்றிய மண்ணிலே தமிழ் மொழிபடும் பாட்டையும், தமிழ் மொழியை எங்கே கொண்டு செல்கின்றோம் என்பதையும் இன்றைய நவீன காலத்துத் தமிழர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தமிழ் மொழிக்கு இருக்கும், அழகும், அர்த்தமும் வேறு எந்த மொழிக்கும் இல்லை என்பது தமிழறிஞர்கள் மற்றும் தமிழ்ப் புலவர்கள் கண்ட உண்மையாகும். தமிழ் மக்கள் தமிழகத்திலும் ஈழத்திலும் பலவிதமாக தங்கள் பிரதேசத்துக் கேற்றவாறு தமிழைப் பேசிக் கொள்வார்கள். மதுரைத் தமிழ், திரு நெல்வேலித் தமிழ், கொங்கு தமிழ், தஞ்சாவூர்த் தமிழ், சென்னைத் தமிழ் என்றவாறு தமிழர்களின் பேச்சு வழக்கும், சொல்லும் வேறுபடும்.

இலங்கைத் தமிழ், யாழ்ப்பாணத் தமிழ், மட்டக்களப்புத் தமிழ், மலையகத் தமிழ், கொழும்பு இஸ்லாமியத் தமிழ் என்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த குடியாம் தமிழ்க்குடி" என்று சொல்கின்றனர். தமிழ் மொழிக்கு எடுக்கப்படுகின்ற ஆய்வுகளில் மாநாடுகளில் தமிழ் மொழியைப் புகழ்ந்து தள்ளுகின்றனர்.

தமிழ் மொழிக்கு இருக்கும், அழகும், அர்த்தமும் வேறு எந்த மொழிக்கும் இல்லை என்பது தமிழறிஞர்கள் மற்றும் தமிழ்ப் புலவர்கள் கண்ட உண்மையாகும். தமிழ் மக்கள் தமிழகத்திலும் ஈழத்திலும் பலவிதமாக தங்கள் பிரதேசத்துக் கேற்றவாறு தமிழைப் பேசிக் கொள்வார்கள். மதுரைத் தமிழ், திருநெல்வேலித் தமிழ், கொங்கு தமிழ், தஞ்சாவூர்த் தமிழ், சென்னைத் தமிழ் என்றவாறு தமிழர்களின் பேச்சு வழக்கும், சொல்லும் வேறுபடும்.

நல்லதமிழையும், நாடகத்தமிழையும் குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு இன்றைய நாகரிகமாக தமிழைப் பேசி நடந்து கொள்கின்ற முறைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவா இருக்கின்றது. இப்படியே தமிழை பேசிக் கொள்வோமாக இருந்தால் நாளைய சந்ததி எப்படித் தமிழைப் பேசிப் பெருமைப்படப் போகின்றது.

உலகில் இப்போது பேசப்பட்டு வருகின்ற மொழிகளில் ஒவ்வொரு வருடமும் பத்து மொழிகள் அழிந்து வருவதாக மொழியியல் வல்லுனர்களால் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உலகின் அநேக மொழிகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட நிலையில் தமிழும் அழிந்துவிடுமென ஆய்வாளர்களால் எதிர்வு கூறப்பட்டு வருகின்றது.

உலகில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த மொழியான தமிழ்மொழிக்கு இருக்கின்ற சிறப்புக்கள் வேறு எந்த மொழிக்கும் இல்லை. "எங்குமுள தென் தமிழ் இயங்கிய இசை உண்டான்" என்ற கவிச் சக்கரவர்த்தி கம்பன் வியந்த தமிழை ஓங்கலிடைபிறந்து உயர்ந்தோர் தொழ விளங்கி என்று ஆரம்பித்து தண்ணேரில்லாத் தமிழே என்று சங்க காலப் புலவர் பாடிய தமிழ்தான் இன்றைக்கு தமிழர்களுக்கு வெறுப்பாகத் தோன்றிய மொழிபோலிருக்கின்றதா?

எத்தனை ஆயிரம் தமிழ்ப் பிள்ளைகள் ஈழத்திலும் தமிழகத்திலும் தினமும் பிறக்கின்றனர் தமிழ்ப் பெயர்களால் நாமம் சூட்டுகின்ற பெருமையையும் தமிழர்கள் இழந்துவிட்டனர். பிறமொழிப் பெயர்களைச் சூட்டி மகிழ்கின்றனர். தமிழில் உள்ள பெயர்களை பிறக்கின்ற பிள்ளைகளுக்குச் சூட்டுவதற்கு வெட்கப்படுகின்றனர்.

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்தமிழ் எங்கள் புலவர்க்கு புகழ் மிக்க வேல் என்று-புரட்சிக்காரப் புலவன் பாரதிதாசன் போற்றிய தமிழ்தான்

பூ மலர்ந்த நேரத்தை வண்டறியும்-பொழுதலர்ந்த நேரத்தை புள்ளறியும்-சேய்பிறந்த நேரத்தை தாய் அறிவாள்-செந்தமிழே நீ பிறந்த நேரத்தை யாரறிவார்? என்று தமிழின் தோற்றத்தையும், சீரிளமையையும் வியந்து பாடியதை கேட்கவும்-வாசிக்கவும் தமிழருக்கு இன்றுநேரமில்லை.

தமிழ்மொழியை உலகில் பத்துக்கோடி தமிழ் மக்கள் பேசுகின்றனர். மொழி என்பதன் முழுமையான் அர்த்தத்தை தமிழர்கள் இன்றும் புரிந்து கொள்ளவில்லை. தமிழைச் சிதைப்பதிலேயே இன்றைய இளைய தலைமுறையினர் முன்நிற்கின்றனர். தமிழர்களே நம் தாய் மொழியை அழித்துக் கொண்டு பிற இனத்தவர் தமிழை அழிக்கின்றார்கள் என்று கூறுவது நியாயமாகுமா?

பாரெல்லாம் பரந்து பேசும் தமிழ்மொழிக்கு, ஊரெல்லாம் ஒன்று கூடி ஆண்டுகள் தோறும் விழா எடுத்தாலும், தேனினும் இனிய தமிழ் மொழியைக்கற்று பாரினில் பட்டங்கள் பல பெற்று ஊர்கள் தோறும் தமிழுக்குத் தொண்டு செய்தாலும் தமிழர்கள் தமிழுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவமானது கீழிறங்கிச் செல்கின்றது. கற்ற தமிழ் மொழியை மறப்பது இப்பாரினில் பெற்ற தாயை மறப்பதற்கு ஒப்பான செயல் என்று எத்தனை தமிழர்கள் உணருகின்றனர்.

கலப்பு மொழிகளைத் தமிழுடன் இணைத்து நாளாந்த வாழ்க்கையிலும் சரி, பிற இடங்களிலும் சரி பேசுவதை ஏன் தவிர்க்க இயலாது? தமிழைக் கொச்சையாகவும், பச்சையாகவும் பேசுவதை வழக்கப்படுத்திக் கொள்கின்ற தமிழர்களுமுண்டு .

எங்கள் இனமும், எங்கள் மொழியும் உலகத்தில் முதன் முதலில் தோன்றியது என்பது வரலாற்றாசிரியர்களால் கூறப்பட்ட உண்மையாகும்.

தற்காலிக நாகரிகமும், பணமும், பிறமொழிச் சேர்க்கைகளும், ஐரோப்பிய நாட்டுக் கலாசாரமும், சினிமாப் பாணிகளும் தமிழையும் தமிழனையும் எளிதில் அழித்துவிடக் கூடியகாரணிகள் என்பதை தமிழர்கள் மறந்துவிடலாகாது.

புலம் பெயர்ந்த தமிழர்களின் பிள்ளைகளில் அநேகமானோர் தமிழ்மொழியையிழந்து அந்தந்த நாட்டு மொழிகளையும் பொதுவாக ஆங்கிலத்தையும் கற்று வேற்று நாட்டுக் கலாசாரத்துக்குள் சங்கமித்துள்ளனர். தமிழ் மொழிப் பற்று என்பது அறவே இல்லாது வளர்க்கப்பட்டுள்ளனர். தங்கள் தாயகத்துக்கு உறவுகளைச் சந்திப்பதற்கு வருகின்றனர். தங்களது பெற்றோர் வழி உறவுகளோடு தமிழில் பேசி மகிழமுடியாதுள்ளது. தமிழ்மொழியின் சிறப்பியல்புகள் என்னவென்று அவர்களுக்குப் புரியாதுள்ளது. ஒருபகுதி தமிழர்களில் இளைய தலைமுறையினர் அடுத்த சந்ததியினர் தமிழ் மொழி தெரியாதவர்களாகிவிட்டனர்.

உலகில் ஏறத்தாழ நாற்பத்துநான்கு நாடுகளில் தமிழினம் வாழுகின்றது. அங்கெல்லாம் தமிழ் மொழி கலப்புற்றும், சிதைந்தும், திரிபுபெற்றும் வழங்கப் பெறுகின்றது.

பலநெருக்குதல்களுக்கு மத்தியில் உலகில் தமிழ் மொழி வாழ்ந்து கொண்டிருக்கின்றது. தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு யார் பொறுப்பு? தமிழகத்திலும், தாயகத்திலும் போர்முடிந்த பின்னர், தமிழ் மொழிபடும் பாட்டை சொல்லித் தெரியவேண்டியதில்லை. தமிழைச் சிதைப்பதிலும் பண்பாட்டை அழிப்பதிலும் சிங்கள அரசுகள் திட்டமிட்டுச் செயற்படுகின்ற நிலையில தமிழர்களாகிய எமக்கு தமிழைக் காக்கவேண்டிய தேவையும், வாழவைக்க வேண்டிய கட்டாயமும் தமிழர்களுக்கு உண்டு.

# சுயமதிப்பு

■ அ.அஜந்தன்

சுயமதிப்பு என்பது எம்மைப் பற்றியும் எமக்கு இருக்கும் திறன்கள் பற்றியும் எமக்கு உள்ள மதிப்பு அல்லது எண்ணக்கரு எனலாம். சுயமதிப்பென்பது மற்றவர்கள் எங்களைப் பற்றி நினைத்திருப்பதோ தற்புகழ்ச்சியோ சுய நலமோ மற்றவர்களை விட நாம் உயர்ந்தவர்களாக காண்பிப்பதாலோ அர்த்தப்படாது. மாறாக எம்மைப்பற்றி எமக்கு இருக்கும் உருவமாகவே உள்ளது. அத்துடன் எமது சுய விழிப்புணர்வுக்கும் இது பெரும் பங்காற்றுகின்றது. இதில் உயர்ந்த சுயமதிப்பு தாழ்ந்த சுயமதிப்பு என இருவகையான சுயமதிப்பை நாம் கொண்டிருக்கின்றோம். இந்த சுயமதிப்பானது உயர்ந்ததாக அமையும் பொழுது நாமும் எமது செயல்களும் சமூகத்தில் உயர்ந்துவிடும். மாறாகத் தாழ்ந்த சுயமதிப்பாக இருக்குமாயின் அது எமது வாழ்வைத் தாழ்த்திவிடும்.


ஒவ்வொரு மனிதனும் பிறக்கின்ற பொழுதே நல்லபண்புகளையும் திறமைகளையும் தன்னகத்தே கொண்டிருப்பான். ஆனால் அவற்றை அறியாமல் இருப்பதாலும் சுயமதிப்பின்றி வாழ்வதாலுமே தவறான பண்புகளையும் இயலாமைகளையும் தலைதூக்க அனுமதிக்கின்றனர்.

## குறைவான சுயமதிப்பு

குறைவான அல்லது தாழ்வான சுயமதிப்பு எமது வாழ்வில் ஒரு திருப்தியற்ற தன்மையைத் தோற்றுவிக்கும். மற்றவர்கள் எம்மைப்பற்றி குறை கூறுவர், விமர்சிப்பார்கள். நாமும் அடிக்கடி தனிமையை நாடிச் சிந்தனையில் ஆள்பவர்களாக இருப்போம். பிறர் நம்மீது வைக்கும் நம்பிக்கை குறைவடையும். எப்பொழுதும் கவலையுடனும் எதனையும் வெற்றிகரமாகச் செய்ய இயலாதவராகவும் இருப்போம்.

## குறைந்த சுயமதிப்புக்கான அறிகுறிகள்

1. உறுதியற்ற விதத்தில் முடிவுகளை எடுத்தல்
2. வெட்கம்/ முன்னின்று செய்வதற்கு தயக்கம்
3. விமர்சனங்களை ஆரோக்கியமாக எதிர்கொள்ளவோ கையாளவோ முடியாதிருத்தல்
4. பரிபூரணத்துவத்தை எதிர்பார்ப்பதால் தவறுகள் விடும்பொழுது மனமுடைதல்
5. எப்பொழுதும் எதிர்மறையான சிந்தனைகளால் ஆக்கிரமிக்கப்படல்
6. எப்பொழுதும் மற்றவர்களைக் குறை கூறுதல்
7. எதிர்காலம் தொடர்பாக அடிக்கடி கவலை கொள்ளுதல்
8. உடற்தோற்றத்தில் சுயகவனிப்பின்றி இருத்தல்
9. எம்மைப்பற்றிய மிகைப்படுத்தல் சிந்தனைகள் தோன்றும்
10. எல்லாவற்றுக்கும் மன்னிப்புக்கேட்டல்
11. உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல் இருத்தல்
12. மற்றவர்களில் தங்கிவாழ்வார்கள்
13. எதிலும் எல்லைகளை வரையறுக்க முடியாதநிலை
14. அவநம்பிக்கை மேலோங்கி நிற்கும்
15. மனம்விட்டுச் சிரிக்க முடியாதவர்கள்
16. பிறரிடமிருந்து தனிமைப்படுத்தப்படல்
17. அவர்களை மாற்றிக் கொள்ளவும் புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவும் பயம் கொள்ளல்



## சுயமதிப்பை விருத்தி செய்தல்

எமது சுயமதிப்பை விருத்தி செய்ய சில வழிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும். அவை எமக்குள் இருக்கக் கூடிய திறன்கள், இயலுமைகள் முயற்சிகள் என்பவற்றை அறிந்து கொள்ளவும் விருத்தி செய்யவும் பயன்படுவதோடு சுய விழிப்புணர்வையும் எமக்குள் ஏற்படுத்துகின்றன. எமது சுயமதிப்பை உயர்த்தும் வழிகள்.

1. உறுதியாக இருக்கக் கற்றுக்கொள்வது அவசியம்
2. இல்லை என்று சொல்வதற்குக் குற்ற உணர்வு தேவையில்லை
3. சாதகமாகச் சிந்திக்க வேண்டும்
4. எங்களை நாங்களே நம்ப வேண்டும்
5. எதிர்காலத்துக்காகத் திட்டமிட வேண்டும்
6. இலக்கைத் தீர்மானிப்பதோடு அதை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும்
7. தினந்தோறும் சவாலாக சிலவற்றைச் செய்யவேண்டும்.
8. எங்களுக்குள் சிறந்த பண்புகளையும் திறமைகளையும் அவதானிக்க வேண்டும்
9. புதிதாகக் கற்றுக் கொள்ளும் திறனை வளர்க்கவேண்டும்.
10. ஒரு சமயத்தில் ஒருவிடயத்தை மட்டும் செய்யவேண்டும்
11. ஆக்க பூர்வமான விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளல்
12. உதவிகேட்பதும் கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்
13. நாளாந்தம் எம்மை வளர்த்துக் கொள்ள நேரமெடுத்துக் கொள்ள வேண்டும்
14. எம்மைப்பற்றிய தவறான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதைத் தவிர்த்தல்
15. அடிக்கடி எம்மை நாமே வெகுமதியாக்குவதும் ஊக்குவிக்கப்படுத்துவதும் அவசியம்
16. நாளாந்தம் மாலையில் உங்கள் சாதனைகளைநினைத்துப்பாருங்கள்
17. எமது திறன்களை நாங்களாகவே மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

## சுயமதிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

1. நாம் செய்கின்ற பயனுள்ள வேலைகள்
2. மற்றவர்கள் எமது செயலை மதித்தல்
3. நாங்கள் எங்களை ஒரு வெற்றிகரமானவர்களாக நினைத்துக் கொள்ளல்
4. நாம் எம்மை எப்படிப் பார்க்கின்றோம் என்பது எமது தன்னம்பிக்கைக்கு ஊக்குவிப்பாக அமையும்.
5. எமது பலம் பலவீனம் தொடர்பான பொது விழிப்புணர்வு
6. சமூகத்தில் எமது நிலையை எப்படி உணர்கின்றோம்
7. எப்படி மற்றவர்களைத் தொடர்பு கொள்கின்றோம்
8. சுயமாக முடிவெடுக்கும் திறன்


## உயர் சுயமதிப்பு

உயர் சுயமதிப்பை உடையவர்கள் எப்பொழுதுமே தம்மைப்பற்றிய் பிறரது அபிப்பிராயம் அல்லது தீர்மானங்களை நினைத்துக் கவலைப்படமாட்டார்கள். தம்மை வெளிக்காட்டும் தைரியமுடையவர்களாக இருப்பர். அவர்கள் மற்றவர்களிடம் இனிமையாக இருப்பார்கள். அவர்களது ஆலோசனைகள் சிறப்பானதாகவும் மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும் அத்துடன் அவர்களுக்குச் சாதகமான சந்தர்ப்பங்கள் அமையும்.

இதனால் எமக்குப் பல அனுகூலங்கள் கிடைக்கப்பெறும். மற்றவர்களை வழி நடத்துபவராகத் திகழமுடியும். தோல்வியையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வரும். எமக்குள் இருக்கும் தீயகுணங்கள் அகலும்

சிந்தனைகளைமாற்றும் புதியவிடயங்களில் முயற்சிகளை மேற்கொள்ள ஊக்குவிக்கும். பிறர் மெச்சும் வகையில் வாழமுடியும். எம்மை நாமே நம்பமுடியும். எமது செயல்கள் மற்றவர்களுக்கு தீங்காக அமையாது.

உயர்வான சுயமதிப்பை வளர்ப்பதில் அதிகம் அக்கறை கொள்வதும் தாழ்வான சுயமதிப்பைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளைக் கையாள்வதும் எமது சுயமதிப்பை நாமே தீர்மானிப்பதும் மகிழ்ச்சிகரமானதும் வெற்றிகரமானதுமான வாழ்வுக்கு வழிவகுக்கும். சுயமதிப்பை உயர்த்திக் கொள்வதன் மூலமாக சமூகத்தில் நாமும் ஓர் உயர்ந்த இடத்தைப் பெறமுடியும்.



குறைவான அல்லது தாழ்வான சுயமதிப்பு எமது வாழ்வில் ஒரு திருப்தியற்ற தன்மையைத் தோற்றுவிக்கும் மற்றவர்கள் எம்மைப்பற்றி குறை கூறுவர், விமர்சிப்பார்கள். நாமும் அடிக்கடி தனிமையை நாடிச் சிந்தனையில் ஆள்பவர்களாக இருப்போம்.

# நாத வரம் ஈயும் இறைவன்

கே.எஸ்.சிவஞானராஜா

வேத முதல்வா விளங்கு சுடர் வேலவனே
நாதங் கடந்து நின்ற நம்பனே - மாதவர்க
ளேத்துகின்ற மாவையெழினகரில் வீற்றிருக்குங்
கார்த்திகை மைந்தா வெனை நீ கா
(வித்துவ சிரோன்மணி)

சொயமேறு தும்புரு நாரதர் பண்பாடச்
சுரேமேறுந் தந்திரி யாழ் சுருதி கூட்ட
நயமேறு மரம்பையர்கள் நடனமாட
நண்பேறுங் கந்திருவர் நயந்து நாடப்
பயமேறும் பல்லியமென் டிசையினீடப்
பண்பேறுங் கொம்பினிசை பரவை மூட
வயமேறும் புகழேற வாடீரூஞ்சல்
மாவை நகர்க் கந்தரே யாடீரூஞ்சல்
(மா.க.தி.வ.பக்.60)

மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் நீங்கப்பெற்ற தலமானது சகல பேறுகளையும் கொண்டிருப்பதால் ஆயகலைகள் அறுபத்தி நான்கும் மாவிட்டபுரத்தில் விளைந்தன போலும்.

மேற்படி பாடலில் தும்புரு நாரதர் பண்ணோ்டு இசைபாட யாழில் கீதம் இசைக்க நயம் சொட்டும் அரம்பை மகளிர்கள் நடனமாட அன்பின் மிகுதியால் கந்தருவ வேத இசையாளர்கள் இலயித்து ஒன்றுசேர பயபக்தியோடு பல்லிய வாத்தியங்களான வீணை, புல்லாங்குழல், நாதஸ்வரம், தவில், மிருதங்கம், கடம், கெஞ்சிரா, தாளம், தம்புராவுடன் முழங்க இரம்மியமான கொம்பிலிருந்து கிளம்பும் ஓங்கிய ஓசை எங்கும் பரவ விண்ணைத்தொடும் இசை முழங்கும் துந்துபி, தவில், மேளம், டமாரம், இடமானம், பம்பை, முரசு, சங்கு ஆகியன ஆர்ப்பரிக்க மாவைக் கந்தன் எழுந்தருளுகின்றார்.

### பல்லியம்

மாவிட்டபுரம் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கும்போது மாருதப்புரவீகவல்லியின் வேண்டுகோளுக்கிணங்கவும் திசையுக்கிரப் பெருவழுதி மன்னனது ஆணைப்படியும் சிதம்பர தீட்சதர்கள் பரம்பரா மூலாதார பெரிய மனத்துள்ளார்களின் ஆசீர்வாதங்களின் பிரகாரமும் நாதவேள்வி அர்ப்பணம் செய்யப்பட்டது.

குதிரை முகம் நீங்கியதன் பின்னர் நடைபெறும் உற்சவகாலங்கள் அனைத்திலும் பல்லிய வாத்தியங்களின் சங்கமம், வாத்தியார்ப்பணம், நடனார்ப்பணம், பண்ணார்ப்பணம், வேதார்ப்பணம், அன்னார்ப்பணம், அமுதார்ப்பணம், தீர்த்தார்ப்பணம், அபிசேகார்ப்பணம் யாவும் நடத்தப்பட வேண்டி விரதம் இருந்து சகல தோசங்களும் நீங்கும்படியாக ஆலயச் சுற்றுப் பிரகாரம் முழுவதுமாக ஆயிரத்தெட்டு மாவிளக்குப் படைத்து வழிபட்டு முழு அழகுடைய இளநங்கையாக மிளிர்ந்ததாகக் கர்ணபரம்பரைக் கதை இயம்பும்.

### அனுசரித்தல்

தீட்சதர் பெரிய மனத்துள்ளார் (02.06. 0789 எழுநூற்று எண்பத்தொன்பதாம் ஆண்டு) ஆரம்பத்திலிருந்து சுமார் ஆயிரத்து இருநூற்று இருபத்தெட்டு வருடங்களைக் கடந்து இற்றைவரைக்கும் முன்சொன்ன அனைத்து அர்ப்பணங்களும் முறையாகவும் பயபக்தியாகவும் நாட்டுநலன்கருதியும் சிவநெறிதழைக்கவும் இன்றுமட்டுமல்ல என்றைக்குமாக ஆற்றப்படுகிறது. 46 வருடங்கள் தீட்சதராக விளங்கிய தீட்சதராம் சா.சுப்பிரமணியக் குருக்கள் மூலம் 1927 ஆம் ஆண்டு நடைபெற்ற மூலஸ்தான மகா கும்பாபிகேம் தொடக்கம்
தீட்சதர் சு.துரைச்சாமிக்குருக்கள்
தீட்சதர் து.சண்முகநாதக் குருக்கள்
தீட்சதர் ச.இரத்தின சபாபதிக்குருக்கள்
ஆகியோரது மாவை ஆதீன வம்சாவளி ஈறாக வேதமந்திரம் பண் இசை பல்லியம் நடனம் ஏனைய கலைகளாக மங்கல வாத்திய நாதாம்ருதம் என்பன மாவிட்டபுரம் கந்தசுவாமியார் கோயிலில் குறைவின்றி அரங்கேறுகின்றன. தொடர்ந்தும் நடைபெறும்.

### நாத மாவிளக்கு

புராண காலத்திலிருந்து மாவிட்டபுரத்தில் மா+விட்ட+விளக்கு, மா+விளக்கு மா+விலக்கு என்றவாறு குதிரை முகத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதனால் இவ்வாறு வடிவமைக்கப்பட்ட குதிரை முக விளக்கிலேயே மாவிளக்கு ஏற்றப்பட்டது. மாவிளக்கு ஏற்றிப் போற்றி வழிபாடாற்றும்போது வீணா வேணு நாயன மிருதங்க தாள லய தவில் வாத்திய பிருந்தகானம் இசைக்கப்படுவது சம்பிரதாயமாகும். இலங்கைக் கலைஞர்கள் தேவையான இடத்து இந்தியக் கலைஞர்கள், சங்கீத இசை விற்பன்னர்கள் ஆகியோரின் இசையரங்கு பல இடம் பெறும். மாவை ஆதீனம் ஒரு பல்கலைக் கழகமாக ஆய கலைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. எனவே மாவையின் பிரசாதத்தில் நாதமும் வேதமும் கலந்திருக்கும். இப்பொழுது மாவிளக்கினையோ அமுதையோ பஞ்சாமிர்தத்தையோ சாப்பிட்டுப்பாருங்கள். சங்கீதம் என்றாலும் சரி நடனம் என்றாலும்சரி தமிழ் என்றாலும் சரி ஏனைய பாடங்கள் என்றாலும் சரி தானாகப் பிரவாகிக்கும். அவ்வாறு பிரவாகித்த ஒரு வேணுகானம் இதோ! ஆம் வேணுகானப் பிரியர்களின் கூற்றுப்படி பதினெட்டாம் திருவிழா இருபத்தி ஐந்து மாபெரும் திருவிழாக்களின் வரமாக ஒரு வேணுகான அடியவரை இலங்கையில் அதுவும் விற்பன்னராகத் தோற்றுவித்துள்ளது. அவரே மாவிட்டபுரமே தஞ்சமென வாழ்ந்து வரும் கலாபூசணம் த.சுப்பிரமணியம் ஆவார். இவர் கட்டுவன் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்.

அவர்களைப் பற்றி மாவை ஆதீன முதல்வர் குறிப்பிடுகின்றார். இற்றைக்கு அரை நூற்றாண்டு காலமாகத் தம் உடல்பொருள் ஆவி குடும்ப சகிதமாய் மாவிட்டபுரத்தானுக்கு அபிசேக ஆராதனைகளோடு நின்றுவிடாமல் தனக்கு விவரந்தெரிந்த நாள் முதலாக வேணுகானத்தை நாத அர்ப்பணமாக வாசித்துப் பேறு பெற்றுள்ளார் என்று மாவை ஆதீன கர்த்தா மகாராஜ ஸ்ரீ சு.து.சண்முகநாதக் குருக்கள் முருகனின் திருவருளோடு வியந்து பாராட்டியுள்ளார். மெய்யன்போடு கூறும் அவர் பேரனார் சுப்பிரமணியத்தின் மறைவுக்குப் பின்னர் குருவாக மாவிட்ட புரத்தானே வேணுகான இசைக்கு வரமாக அமைந்து இன்று ஒரு விருது பெறும் தகைமையோடு புல்லாங்குழல் கலைஞனாக மிளிர்கின்றார்.



















# காரைநகரில் முப்பெரும் விழா

சுவிஸ்-காரை அபிவிருத்திச் சபையும், காரைநகர் அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்திய முப்பெரும் விழா அன்மையில் யாழ்ற்ரன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இதில் தியாகச்சுடர் நினைவுத் தொகுப்பு நூல் அறிமுகம், தியாகத் திறன் வேள்வி எனும் மாணவர் போட்டிகளுக்கான பரிசளிப்பு, சான்றோர் மதிப்பளிப்பு என்பன இடம்பெற்றன.

அதிகளவான பார்வையாளர்கள் கலந்து கொண்ட இந்த விழாவில் முதன்மை விருந்தினராக மலாயா காரை ஒன்றியத் தலைவர் சண்முகம் சிவானந்தனும், கௌரவ விருந்தினர்களாக தெய்வீகத் திருப்பணி அரசு சுப்பிரமணியம் கதிர்காமநாதன், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத் துறை விரிவுரையாளர் திருமதி வீர மங்கை யோகரத்தினம்.யாழ் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி கணேசன், கிழவன்காடு கலாமன்ற ஸ்தாபகத் தலைவர் நடராசா சோதிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக காரைநகர் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி வாசுகி தவபாலன் மற்றும் பன்னாட்டு காரை அபிவிருத்திச் சங்கங்களின் கௌரவ உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர்.

கலாபூசணம் நா.தர்மராஜா, கலாபூசணம் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, கலாபூசணம் வே.நடராசா,ஓய்வு பெற்ற அதிபர் க.தில்லையம்பலம், பேராசிரியர் ஆறுமுகம் நல்லைநாதன் ஆகியோர் இந்த நிகழ்வில் மாண்பு பெற்றனர்.

அத்துடன் கனடா-காரை கலாசார மன்றத்தின் ஊடாக அதன் தலைவர் திரு த.பரமானந்தராஜா தமது பெற்றோரின் நினைவாக வழங்கிய நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் இந்த நிகழ்வில் வழங்கப்பட்டன. (250)






Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மாணவர்...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)



அவற்றைத் தங்களின் முன்னிலையில் தங்களின் பங்களிப்புடன் கட்டுப்பாடாகப் பயன்படுத்த பெற்றோர் முன்னின்று செயற்பட வேண்டும். இவற்றால் எத்தனை எத்தனை நல்ல வாழ்வுக்குப் பயன்படக் கூடிய நல்ல விடயங்களை நமது வீட்டிலி ருந்தபடியே அறிந்து கொள்ள முடிகிறது என்பதைக் குழந்தைகள், மாணவர்கள் மனதில் பதிய வைத்து நல்லதையே பெற்றுக் கொள்ள வழிகாட்டல் பெற்றோரின் கடமையே.

எங்களது கலாசாரத்தின், பாரம்பரியத்தின் சிறப்புக்களைத் தக்க உதாரணங்களுடன் சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் எடுத்துக் கூறுங்கள். கோயிலுக்குச் செல்லும்போது நவக்கிரகங்களைக் காட்டி சூரியன் நடுவில் இருக்கிறது. மற்றக் கோள்கள் எல்லாம் சூரியனைச்சுற்றி நிற்கின்றன. இது உணர்த்துவது என்ன? சூரியனைச் சுற்றியே ஏனைய கோள்கள் வலம் வருகின்றன என்ற உண்மையை ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரேயே நம் முன்னோர் அறிந்தே இத்தகைய கோயில் அமைப்பை ஏற்படுத்தி உள்ளனர். ஆனால் மேலை நாட்டினர் ஆராய்ச்சியின் பயனாக 500 வருடங்களுக்கு முன்னர் தான் இதை அறிந்துள்ளனர் என்று விளக் கம் கூறி நம்முன்னோரின் அறிவுச் சிதறல்களை நினைத்து பெருமிதம் அடையச் செய்தல் வேண்டும்.

மேலும், இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி, வாழ்க்கையோடு தொடர்புடையது. இலக்கியச் சுவையை இசையுடன் பாடச் செய்தல் வேண்டும். இசையோடு கூறப்படும் ஒழுக்கநெறிகள், கருத்துக்கள் எப்போதும் மனதில் பதிந்து நினைவில் நிற்பன. இசையோடு பாடும்போது இசைக்கு மனம் கட்டுப்படுவதால் கருத்துக்கள் மனதில் ஆழமாகப் பதிகின்றன. இசை நினைவாற்றலை அதிகரிக்கும். இதனாலேயே

காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு
மாலை முழுவதும் விளையாட்டு'

என எதுகை மோனையுடன் இசையுடன் பாடினார் மகாகவி பாரதியார்.

இதேபோன்று இயற்கையின் நியதிகளையும் ஓரளவிலேனும் அறிந்து செயற்பட பழக்க வேண்டும். இரவு வருகிறது என யாரும் அழுவதில்லை. அதனை எதிர் கொள்ள எல்லோரும் தங்களைத் தயார் படுத்திக் கொள்கிறார்கள். அதேபோலவே பகல்வரும் என்பதிலும் ஐயப்பாடில்லை. அது போல இன்பமும், துன்பமும் மாறி மாறி வரும் என்பதை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை சிறு வயதிலேயே ஏற்றுக் கொள்ளப் பயிற்சி அளித்தல் வேண்டும். இவற்றை இளவயதில் புரிய வைத்துவிட்டால் சுயகட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள பழகிக் கொள்வார்கள். இன்பத்தை அடக்கமாக, எளிமையாக, அனுபவித்தால் பிறகு துன்பம் வந்தாலும், அது விரைவில் எங்களைவிட்டு நீங்கிவிடும். தடுப்பூசி மருந்துபோல சிறுசிறு ஏமாற்றங்களையும் தோல்விகளையும் சந்திக்கச் செய்து குழந்தைகளின் மனதை உறுதிப் படுத்தப் பழக்கிக் கொள்ளல் வேண்டும். நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கை யுடன் செயற்படப்பழகித் தீயனவற்றையும் எதிர்பாராததையும் எதிர்கொள்ளவும் தயாராக வேண்டும் எனக் கூறித்துணிவை ஏற்படுத்த வேண்டும். இறை நம்பிக்கை அற நம்பிக்கைமூலம் பணிவை ஏற்படுத்த வேண்டும். குழந்தைகளை அளவுக்கு மீறி பாராட்டக் கூடாது. ஏனெனில் பாராட்டுக் கிடைக்காத போது மனச்சோர்வு ஏற்பட்டுவிடும். அளவான பாராட்டு ஊட்டச் சத்தாக நின்று பிடிக்கும். பெற்றோர்கள் கல்வியின் மீது பிள்ளைகளுக்கு விருப்பத்தை ஏற்படுத்தி தாங்களாகவே விரும்பிக் கற்கும் முறைக்கு அவர்களைத் தயார்படுத்த வேண்டும். ஏன் படிக்க வேண்டும். அதனால் ஏற்படப்போகும் பயன்கள் என்ன நன்மைகள் என்ன என்பவற்றை பிள்ளைகளுக்கு கதை கள் மூலமாக மனதில் பதிய வைக்க முயல வேண்டும். படிப்பிலும், பண்பிலும் முன்னேறியவர்களின் வாழ்க் கையைச் சரித்திரத்தைக் கதையாகக் கூறி பிள்ளைகளை நல் வழிப்படுத்த வேண்டும்.

குழந்தைகள் தங்கள் திறமைகளைத் தாங்களே வெளிப்படுத்தும் சூழ்நிலையை உருவாக்குவது தான் பெற்றோரின் கடமையே, தவிர திணிக்கக்கூடாது. தேர்வில் தோல்வி அடைவது இழப்பல்ல, அடுத்த தேர் வில் திறமையாக முதல் மாணவனாக மிளிரலாம் என ஊக்கப்படுத்தலே பெற்றோரின் செயலாக இருக்க வேண்டும்.

அடுத்ததாக தீயசக்திகள் குழந்தைகளை அணுகாதவாறு கண்காணிக்க வேண்டும். கண்காணிப்பு என்ற பெற்றோரின் வேலி உள்ளது என்று தெரிந்தாலே தீயசக்திகள் நெருங்கா. பிள்ளைகள் தவறு செய்யக்கூடிய சூழலையும் தவிர்க்க வேண்டும்.

தனது குழந்தைப் பருவத்தில் கேட்ட சிரவணன் கதையும், பார்த்த அரிச்சந்திரன் நாடகமும் தங்கள் குடும்ப வேலைக்கார கிழவி சொல்லிக் கொடுத்த ராம நாம ஜபமும்' தீமை செய்தோர்க்கும் நன்மையே செய் என்ற கருத்தைப் போதிக்கும் ஒரு குஜராத்திய பாடலும் தன் வாழ்க்கையின் வழிகாட்டிகளாயின என மகாத்மாகாந்தி அடிகள் கூறியுள்ளார். இவைபோன்ற நல்லனவற்றை 10-15 வயதுக்குள் குழந்தைகளின் மனதில் பதியச் செய்தலே பெற்றோரின் தலையாய செயற்பாடாகும்.

படிப்பு வளர பண்பு வளராவிட்டால் அந்த பண்பற்ற படிப்பால் பயன் எதுவும் கிடையாது. குழந்தைகள் என்று விட்டுவிடாமல் அவர்களின் வயதுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற சில பொறுப்புக்களை அவர்களிடம்பகிர்ந்து கொடுத்து, அவர்களைப் பொறுப்புடன் அந்தவேலைகளைச் செய்யப் பழக்குதல் வேண்டும். பெற்றோர்கள் பொறுப்புடன் நடந்து, குழந்தைகளைப் பொறுப்பேற்றுச் செயற்பட வழிகாட்டுதல் மூலம், நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகம் ஆக அமைக்க முடியும்.

> குழந்தைகளை அளவுக்கு மீறி பாராட்டக்கூடாது. ஏனெனில் பாராட்டுக் கிடைக்காத போது மனச்சோர்வு ஏற்பட்டுவிடும். அளவான பாராட்டு ஊட்டச் சத்தாக நின்று பிடிக்கும். பெற்றோர்கள் கல்வியின் மீது பிள்ளைகளுக்கு விருப்பத்தை ஏற்படுத்தி தாங்களாகவே விரும்பிக் கற்கும் முறைக்கு அவர்களைத் தயார் படுத்த வேண்டும். ஏன படிக்க வேண்டும், அதனால் ஏற்படப் போகும் பயன்கள் என்ன, நன்மைகள் என்ன என்பவற்றை பிள்ளைகளுக்கு கதைகள் மூலமாக மனதில் பதிய வைக்க முயல வேண்டும்.



# காண்டாமிருகம்..!

## ஒற்றைக்கொம்பு கொண்ட ஒரு மக்கு குண்டான் .!

உலகில் தென் ஆபிரிக்காவுக்கு அடுத்ததாக காண்டா மிருகங்கள் அதிகம் வாழ்ந்துவருவது இந்தியாவில்தான். அண்ணளவாக 2 ஆயிரத்து 300 காண்டாமிருகங்கள் இங்குள்ளன. உலகில் காணப்படுகின்ற இரண்டு பெரிய வகையான காண்டாமிருகங்களில் இந்தியாவின் ஒற் றைக்கொம்பன்களும் ஒன்றாக விளங்குகின்றன. ஆரம்ப காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இவை வாழ்ந்து இருக்கலாம் என சொல்லப்படுகிறது. குறிப்பாகசிந்துவெளிநாகரிகத்தில்தொடங்கி இற்றைவரையான காலப்பகுதி மட்டும் இவற்றின் எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன.



### பழைமையான விலங்கினம்

உலகின் பழைமையான விலங்கினங்களில் ஒன்றாக காண் டாமிருகம் சொல்லப்படுகிறது. உலகின் பல்வேறு நாடுகளிலும் இவை தொடர்பில் ஏராளமான புனைவுகள் உண்டு. காண்டாமிருகத்தின் சிறுநீரில் தொடங்கி குருதி, இறைச்சி, கண், எலும்புகள் என்று அதன் ஒவ்வோர் உறுப்புகள் தொடர்பிலும் பேசப்படுகிறது. பேசப்பட்டு வருகிறது. இந்த நம்பிக்கைகளின் உச்சம் என்பது காண்டா மிருகங்களின் கொம்புகளில் இருப்பதாகச் சொல்லப்படும் மருத்துவத் தன்மையிலும் அடங்கிப் போயுள்ளது.

பிறந்து ஆறு ஆண்டுகள் கழிந்த தன் பிற்பாடே காண் டாமிருகங்களுக் குரித்தான கொம்பு கள் வெளிப்படும். பொதுவாக, ஒரு அடி நீளம் வரை இவை வளரும். கெராட்டின் எனப்படும் இழைப் புரதங்களால் ஆன இந்தக் கொம்பில் மருத்துவக் குணங்கள் எவையும் இல்லை என்று சொல்கிறது விஞ்ஞான உலகம்.

ஆனாலும் பாரம் பரிய மருத்துவர்களோ காய்ச்சலில் தொடங்கி புற்று நோய் வரையான எல்லா வியாதிகளுக்கும் இவை சிறந்த நிவாரணியாக விளங்குகிறது என்று சொல்லிப் பணம் பார்க்கிறார்கள். முக்கியமாக நீடித்த பாலியல் உறவுக்கு இவை உதவுவதாக கூறுகின்றனர்.

### மருத்துவ குணம்

எல்லாப் பாரம்பரிய மருந்துகளைப் போலவும் காண்டா மிருகக் கொம்பு மருந்துத் தயாரிப்புக்கும் சீன மருத்துவம் தான் தாய். சீன அரசே இதை ஊக்குவிப்பதாக ரைக்கப் படுகிறது. உலகிலேயே காண்டாமிருகக் கொம்புகள் அதிகம் இறக்குமதி செய்யப்படும் நாடுகளின் பட்டிய லில் சீனா முன்னிலை பெற்றுள்ளது. இங்கிருந்து இருந்து வெவ்வேறு வடிவங்களில் காண்டாமிருகக் கொம்புகள் வேறு இடங்களுக்கு பயணிக்கிறது அல்லது அனுப்பப்படு கிறது. இவற்றிற்கான முக்கியமான சந்தையாக வியட்நாம் விளங்குகிறது.

வன உயிரினக் கடத்தல் என்பது ஒரு பெரிய வியாபாரம் எனப்படுகிறது. போதை மருந்துக் கடத்தலுக்கு அடுத்து உலகில் அதிக அளவில் பணம் சேர்க்கப்படுவது காண்டா மிருகங்களின் கொம்பு விற்பனை என்று சொல்லப்படு கிறது. ஆண்டுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் இந்தத் தொழில் மூலமாக கிடைக்கிறது. அதி உச்ச விலை போகும் பொருளாகக் காண்டாமிருகக் கொம்பு கள் காணப்படுகின்றன. ஒரு முழு போலார் கரடியின் விலை யானது 6 இலட்சம் ரூபா. சைபீரியப் புலியின் விலை 35 லட்சம் ரூபா. ஆனால் காண்டாமிருகக் கொம் பின் விலையோ ஒரு கிலோவுக்கு 30 இலட்சம் ரூபா என்ற விலை நிர்ணயம் சந்தைகளில் காணப்படுவதாக கூறப்படுகிறது.

### இயல்பு

அடிப்படையிலே மிகச் சுவாரஸ் யம் நிறைந்த ஒரு விலங்காகக் காண்டா மிருகம் பேசப்படுகிறது. அதன் பிரமாண்ட உருவத்துக்குக் கொஞ்சமும் பொருத்தமற்ற மந்த மான விலங்கு. ஓட ஆரம்பித்தால் காடே புழுதி பறக்கும். 2 ஆயிரம் கிலோ எடை உள்ள ஒரு மிருகம் 50 கிலோமிற்றர் வேகத்தில் ஓடும் காட்சி எப்படியிருக்கும்? அற்புத மாக நீந்தும். புல்லை பிடித்த மான உணவாக உட்கொள்ளும். தனிமை விரும்பி. பகல் முழுதும் நீர் நிலைகளில் புரண்டு கழித்து விட்டு இரவிலும் அதிகாலையி லும் மேயும். ஒரு காண்டாமிருகம் தன் ஆளுமையைப் பொறுத்து இரண்டு முதல் எட்டு சதுர கிலோ மீற்றர் வரை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும். சிறந்த மோப்பசக்தியும் செவிப் புலத்திறனும் கொண்டது. பார்வைத் திறன் குறைவு. சில அடி தொலைவுக்கு அப் பால் உள்ள பொருள்கள் கூட இதன் கண்களுக்குத் தெரி யாது.

எங்கே முதன்முதலில் சாணி போடுகின்றதோ அதே இடத்தில்தான் திரும்பத் திரும்ப சாணி போடும். சாணி போடும் இடத்தை நெருங்கி விட்டதை தனது மோப்ப சக்தியின் மூலம் நீண்ட தூரங்களுக்கு முன்பாகவே தெரிந்து கொள்கிறது. அந்த இடத்தைப் பின்னோக்கி நடந்தே சென்றடைகிறது. உண்மையில் காண்டா மிருகத்தை ஒரு மக்கு குண்டான் என்றே சொல்லலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள். இவற்றின் மேற்போந்த பண்புகள்தான் காண்டா மிருக வேட்டையை எளிமையான தாக்கிவிடுவ தாகவும் அவர்கள் தகவல் அளிக்கின்றனர்.

இந்தியாவில் 102 ஆண்டுகளுக்கு முன்பதாகவே காண்டாமிருக வேட்டைக்குத் தடை விதிக்கப்பட்டுவிட்டதாக கூறப்படுகிறது. ஆனாலும் கீரி முடி, பாம்புத் தோல், புலி மற்றும் சிறுத்தைப் பல், எலும்பு, தோல், யானைத் தந்தம், மான் கொம்பு என்று விரியும் இந்திய வன உயிர் கடத்தல் சந்தைகளில் காண்டாமிருகக் கொம்புக்குத்தான் முக்கிய மான இடம் காணப்படுகிறது.

### காண்டாமிருக வேட்டை

பொதுவாக காண்டாமிருக வேட்டை என்பது மூன்று விதங் களில் நடக் கிறது. குழிப் பறிப்பு, மின் தாக்குதல், துப்பாக்கிச்சூடு. கால் நூற்றாண்டுக்கு முன்வரை குழிப் பறிப்பு, மின் தாக்குதல் முறைகளையே அதிகம் இந்திய வேட்டையாடிகள் கையாண்டனர்.

இப்போது அதிகரித்துவரும் கண்காணிப்பு நடவடிக்கைகள் காரணமாக துப்பாக்கிச் சூட்டையே இவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். முதல்தோட்டா காண்டாமிருகத்தின் காலுக்



கும், அடுத்து மார்புக்கும், பின்ப தலைக்குமாக சுடப்படு கிறது. அதன்பிற்பாடு கோடரி யால் கொம்பை வெட்டி எடுக்கி றார்கள். இது இந்தியப் பாணி எனச் சொல்லப்படுகிறது. ஆபிரிக்காவில் இந்த வேட்டை இன்னும் கொஞ்சம் நவீனமயமாக காணப்படுகிறது. பதிவு எண் அழிக்கப்பட்ட ஹெலிகொப்டரில் வந்து துப்பாக்கி மூலம் உயிர்க்கொல்லி ஊசி மருந்தைச் செலுத்தி காண்டாமிருகத்தைச் செயல் இழக்க செய்கிறார்கள். பின்பு தானியங்கி அரிவாள்கள் மூலம் கொம்புகளை அறுத்துச் செல்கின்றனர். எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யலாம், அவ்வளவுக்கு வருமானம் இதில் இருக்கிறது என்கிறார்கள் வேட்டையாடிகள்.

### ஆரம்பகால வேட்டை

ஆரம்பகாலங்களில் ஏழ்மை, வறுமை காரணமாகப் பாதிக்கப்பட்ட பழங்குடி மக்களும் ஏழைத் தொழிலாளர்களும் காண்டாமிருக வேட்டையில் முன்னின்றதாக கூறப்படுகிறது. காண்டாமிருக மருந்தும் பாரம்பரிய நாட்டு வைத்தியர்களிடம்தான் கிடைத்தது. ஆனால் தற் போது முற்றமுழுதாக ஆயுதப் பயிற்சி எடுத்துக்கொண்ட தொழில் முறை வேட்டையாடிகளும் இணைய வழியே தொழில் நடத்தும் கனவான்களும் உட்புகுந்து ஆக்கிரமிப்புச் செய்த தொழில் ஆகிவிட்டது காண்டாமிருக வேட்டை.

ஆக,வன உயிரினக் கடத்தல் தடுக்க முடியாதது அல்ல. ஆனாலும் இதற்குப் பின்பாக பெரும் அரசியல் இருக்கிறது என்கின்றனர் விலங்கியல் ஆய்வாளர்கள். உலகெங்கும் பயங்கரவாத மற்றும் பாதாள உலக அரசியலுக்குச் செல்லும் பணத்தில் பெரும் பகுதி இதன் மூலம் செல்வதாகவும் அவர்கள் கருத்துக்களை சுட்டிக்காட்டியுள்ளனர். பிரதானமாக இந்தக் கடத்தல் செயற்பாடுகளுக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டால் ஆயுதச் சந்தையில் வீழ்ச்சி ஏற்படுவதாகவும் இவை ஒரு போதும் நடைபெறமுடியாத, விடை தரமுடியாத் கதை என்கின்றனர் சூழலியலாளர்கள்.

மேலும் பல்லாயிரம் ஆண்டுகளைக் கடந்து விட்ட ஒரு பிரமாண்ட உயிரினம் இப்போது மனிதர்கள் முன் உயிர்ப்பிச்சைகேட்டுநிற்பதாக கவலை வெளியிடுகின்றனர். சிந்திக்க வேண்டியதும், செயற்பட வேண்டியதும் நாம் என்ற அடைமொழியற்று மனிதம் பேண வேண் டிய உயிரினங்களான மனிதர்கள் தான்..!

மினி பஸ் தேவை
நல்ல நிலையில் உள்ள
JOURNEY BUS
விரும்பத்தக்கது.
தொடர்பு - 077 978 9223

வீடு வாடகைக்கு உண்டு
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில்
சகல அடிப்படை வசதி கொண்ட வீடு.
அரசாங்க/ மருத்துவ ஊழியர்களுக்கு
மட்டுமே.
072 627 5626, 077 408 9147,
021 222 2452

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
24.01.2017 | 2087 | நீலம்
02 15 41 51
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 7,090,295/=
2017.01.27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும். வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

மரண அறிவித்தல்கள்

இராமநாதன் தியாகராஜா
(முகாமையாளர் முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை, கிளிநொச்சி)



காரைநகர், வாரிவளவை பிறப்பிடமாகவும், கருவேலடி மணியகாரன் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் தியாகராஜா நேற்று (24.01.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.
மணியகாரன் வீதி, கொக்குவில்.
தகவல்: குடும்பத்தினர்
077 376 9386

திருமதி சுதமதி சத்தியமூர்த்தி



தோற்றம் 26.01.1962 மறைவு 23.01.2017

பருத்தித்துறை மாதனையைப் பிறபிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுதமதி சத்தியமூர்த்தி 23.01.2017 திங்கட்கிழமை இறையடி சேர்ந்தார்:
அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-கௌசாம்பிகையம்மா தம்பதியரின் பாசமகளும் சத்தியமூர்த்தியின் அன்பு மனைவியும் பிரணவனின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பாலாம்பிகையம்மா, குமாரசாமி ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான அருமைநாயகம், சிவபாக்கியம், கு.க.சிங்காரவேலு, இரத்தினவேலு, இராசம் மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் மருமகளும் கேதீஸ்வரன் (சவுதி), சுரேந்திரராசா (மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும் குகசொரூபன், அமலோற்பவி, பவதாரணி, ஜெனனி, அருளானந்தம் காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் சுமதி, பத்மாவதி, ரமனி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் பருத்தித்துறை கோரியடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
பாடசாலை வீதி,
மாதனை,பருத்தித்துறை.
தகவல்:
குடும்பத்தினர்.

முருகேசு சண்முகமூர்த்தி
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சண்முகமூர்த்தி நேற்று (24.01.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- இலட்சுமி தம்பதியரின் பாசமிகு புத்திரனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் நிர்மலகுமாரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் ரூபகாந்தன் (மக்கள் வங்கி, ஊர்காவற் றுறை), காந்தரூபினி ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கேஸ்வரி (பிரான்ஸ்), சுந்தரமூர்த்தி (பிரான்ஸ்), கிருஷ்ண மூர்த்தி (பிரான்ஸ்), இராசலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் சோ.சிவகுமாரன் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உதவியாளர்,RDA), தேவகுமாரி (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பரிமளகுமாரி, நந்தகுமாரி, சீராளன் (லண்டன்), அன்பழகன் (நோர்வே) காலஞ்சென்ற திருவருட்செல்வன் மற்றும் வாசுதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2017) புதன்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் த்கனக்கிரியைக்காக வளுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
ச.ரூபகாந்தன் (மகன்)
077 900 4207

## குழந்தையின்மை, ஆண்மைக்குறைவிற்கு நிரந்தர தீர்வு



உயிரணுக்கள் உற்பத்தியில் சாதனை

எங்களது மருந்தை ஒரு சில நாட்கள் மட்டும் தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் செயற்கையாக இல்லாமல் இயற்கையாகவே குழந்தை பாக்கியம் பெறலாம்.

திருமணத்திற்கு தயாராகும் வாலிபர்கள் மற்றும் முதியவர்கள் எங்களது சிகிச்சையின் பலனை முதல் மாதத்திலேயே முழுமையாகப் பெற்று இல்லறவாழ்வை இனிமையாக ஆரம்பிக்கலாம்

பாரம்பரிய சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்கள்

செல்: 0091 9842457673, 0091 9600336009
இலங்கை செல்: 075 4154364

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
Email: sridevisiddha@email.com Skype: sridevisiddha

## வேலையாள்கள் தேவை

1. இரும்பு ஒட்டுவேலை (Welding Works)
2. அலுவலக உதவியாளர் (Office Assistant/Accounting Assistant)
3. வயறிங் வேலை (Electrical Works)
4. மேசன் +கூலி (Mason+Labour)
5. நிலக்கல் பதிக்கக் கூடியவர்கள் (Paving Block)

தொடர்புக்கு:- 077 233 0790, 077 854 4910

## தவறிவிட்டது

மானிப்பாயைச் சேர்ந்த இந்திரகுமார் கபிலோஷன் என்பவருடைய தே.அ.அட்டை , சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு பதிலாக பொலீஸ் உத்தியோகத்தினரால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரம் ,நகை அடைவு பற்றுச்சீட்டு என்பனவற்றுடன் பேர்ஸ் ஒன்று சிவன் கோயிலடி வீதியில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்புக்கு:-077 9413 155

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
11.06.1953

மறைவு
20.01.2011

அமரர்
**கதிரவேலு குணசேகரம்**

இமைகள் மூடித் திறப்பதற்குள்
ஆண்டாறாகிவிட்டது
உம்முகம் காண ஆசை
ஆனால் இங்கு நீரில்லை
உம் இடத்தை யாரால் நிரப்பமுடியும்

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

# புதிய ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்தது இந்தியா



பாலாசோர், ஜன. 25

இராணுவ பயன்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கும், அதி நவீன, 'பினாகா ராக்கெட் மார்க் 2' ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்தது. ஒடிசா மாநிலம் பாலாசோரில் உள்ள, சண்டிபூர் ஏவுகணை ஏவுதளத்திலிருந்து, அதி நவீன, 'பினாகா ராக்கெட் மார்க் 2' நேற்று நண்பகல், 12:45க்கு, சோதனை முறையில் ஏவப்பட்டது. ராணுவ பயன்பாட்டில், எதிரியின் இலக்கை துல்லியமாக கணிப்பது, இலக்கை மாற்றுவது உள்ளிட்ட முக்கிய செயற்பாடுகளில் இந்த ஏவுகணை பயன்படுத்தப்படும். இந்த நிகழ்ச்சியில், ராணுவ உயர் அதிகாரிகள், டி.ஆர்.டி.ஓ., அதிகாரிகள், விஞ்ஞானிகள் பங்கேற்றனர். ஏவுகணைச் சோதனை வெற்றி பெற்றதை அடுத்து, விஞ்ஞானிகளுக்கு, ராணுவ அமைச்சர், மனோகர் பாரிக்கர் வாழ்த்துத் தெரிவித்தார். (வ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தின்
32 ஆவது பட்டமளிப்பு விழாவில்
"அரசறிவியல் சிறப்புக்கலைமாணி"
(B.A. (Hons), First class)
பட்டத்தைப் பெற்ற
செல்வி
**லக்ஸ்சினி சிவபாலசுப்பிரமணியம்**
அவர்களை மேன் மேலும் பட்டங்கள் பெற்று சிறப்புக்களைப் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அன்புடன்: அக்கா,அத்தான்
அண்ணா,சஞ்சிதன்,கிர்ஷ்ஷிகா
(லண்டன்)




## அச்சுவேலி மத்திய கல்லூரி பழைய மாணவர் ஒன்றுகூடல்

யா/அச்சுவேலி மத்திய கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு நாளை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கும் பாடசாலையின் வளர்ச்சிப் போக்கினை பகிர்ந்து கொள்வதற்கும் பழைய மாணவர் ஒன்றுகூடல் இடம் பெறவுள்ளது. இதில் அனைத்துப் பழைய மாணவர்களையும் நலன் விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் - பாடசாலை மண்டபம்
காலம் - 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - பிற்பகல் 3 மணி

திருமதி பு.கணபதிப்பிள்ளை
தலைவர், பழைய மாணவர்சங்கம்.

சி. திரிகரன்
அதிபர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
18.03.1947

ஈசன் தாழில்
06.02.2016


அமரர் **சுந்தரம்பிள்ளை கோபாலசிங்கம்**
(பிரபா)
(பிரபா ரக்ரர் உரிமையாளர்)
திதி : அபரபக்கதிரயோதசி
(தேய்பிறை 25.01.2017)



அன்பையும் அறிவையும் ஊட்டி வளர்த்த தந்தையே!
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்தாலும்
என்றும் அழியாது உங்கள் நினைவுகள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தான்தோன்றி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

"பிரபா இல்லம்"
நாரந்தனை வடக்கு
ஊர்காவற்றுறை.

குடும்பத்தினர்.




## SOFTWARE ENGINEERING

HND & BSc (Hons)

Qualified Lecture Panel | Library, Laboratory, Modern Lecture Hall facilities
Cafeteria | Recreation Area | Student Friendly Environment | Easy Payment

Accredited by:
Cardiff Metropolitan University, UK | European Quality Assurance Agency | NAARIC

580,Hospital Rd., Jaffna | Tel: -0214 777 888
0770 746 553 | 0769 289 784

## அறிவித்தல்
## பரீட்சை நிலையத்தினை மாற்றம் செய்தல்

### மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வடக்கு மாகாணம்

**வடக்கு மாகாண பொதுச்சேவையின் காணி வெளிக்களப் போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

மேற்படி போட்டிப் பரீட்சையின் பரீட்சை நிலையை மாகவிருந்த யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, மண்டப இலக்கம் - 02 இன் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை மண்டப ஒழுங்குகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

100451 தொடக்கம் 100600 வரையான சுட்டெண்களையுடைய பரீட்சார்த்திகள் மட்டும் இவ்விடயத்தைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இதனால் பரீட்சார்த்திகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருத்தத்தினைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலதிக விவரங்கள் தேவைப்படின் 021 221 9939 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(IN/00444)
(11,17,18)

ரூ. வரதலிங்கம்,
செயலாளர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 1 | |
| | | 4 | 7 | | 6 | | | |
| | | 2 | | 4 | | 9 | | 5 |
| | | | | 7 | | | 9 | |
| | 9 | 6 | | | | | | |
| | 8 | | | | 4 | 3 | | |
| 6 | | | | | | | 8 | 1 |
| 1 | | | | 2 | | | | |
| | | | | 5 | | | 3 | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 7 | 6 | 5 | 1 | 9 | 2 | 8 |
| 6 | 8 | 5 | 9 | 2 | 3 | 4 | 1 | 7 |
| 9 | 2 | 1 | 7 | 4 | 8 | 5 | 6 | 3 |
| 2 | 5 | 3 | 8 | 9 | 7 | 6 | 4 | 1 |
| 1 | 7 | 9 | 3 | 6 | 4 | 8 | 5 | 2 |
| 8 | 6 | 4 | 5 | 1 | 2 | 7 | 3 | 9 |
| 7 | 9 | 2 | 4 | 3 | 5 | 1 | 8 | 6 |
| 4 | 3 | 6 | 1 | 8 | 9 | 2 | 7 | 5 |
| 5 | 1 | 8 | 2 | 7 | 6 | 3 | 9 | 4 |

சுடோக்கு
ஒரு எண் விளையாட்டு.
தர்க் கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப்பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.



## குஜராத்தில் -ஷாருக்கானை பார்க்க குவிந்த ரசிகர்கள்: கூட்ட நெரிசலில் ஒருவர் சாவு

குஜராத் மாநிலத்தில் நடிகர் ஷாருக்கானைப் பார்க்கக் குவிந்த ரசிகர்கள் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். பொலிவூட் நடிகர் ஷாருக்கான் நடிப்பில் ராயீஸ் என்ற திரைப்படம் வெளியாக உள்ளது. இந்தத் திரைப்படத்தை ரசிகர்கள் மத்தியில் கொண்டு செல்லும் விதமாக குஜராத் மாநிலத்தில் உள்ள வதோதரா பகுதிக்கு சென்றிருந்தார்.

ராஜஸ்தானி விரைவு ரயிலில் வந்த ஷாருக்கானைக் காண ரசிகர்கள் குவிந்து இருந்தனர். அதனால் ரயில் நிலையத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

இரவு 10.30 மணிக்கு ரயில் நிலையத்துக்கு வந்தது. சுமார் 10 நிமிடம் அங்கு நின்றிருந்தது. அந்த நேரத்தில்தான் ஷாருக்கானை காண ரசிகர்கள் திரண்டு இருந்தனர். இந்தக் கூட்ட நெரிசலில் சிக்கி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். இரண்டு பொலிஸார் காயம் அடைந்தனர்.

ரயில் புறப்பட்ட பிறகுகூட அதனைப் பின் தொடர்ந்து ரசிகர்கள் ஓடினர். அதனால் ஒருவர் மீது ஒருவர் கீழே சரிந்து விழுந்தனர். கூட்டத்தைக் கலைக்க லேசான தடியடியும் நடத்தப்பட்டது என்று பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



காலையில பல்லு
தீட்டி சாப்பிட
வேண்டாம்
சாப்பிட்டுகிட்டே
பல்லு தீட்டலாம்
நாங்களும்
யோசிப்போம்ல

தாதி நீங்க என்னோட இதயத்தைத் திருடிட்டீங்க



அதுக்கு முன்னாடி எங்க மருத்துவர் உங்க கிட்னியைத் திருடிட்டாரு

SMILEY TALKS™

"ஓபிஎஸ் ஒழிக!
மோடி ஒழிக!
பீற்றா ஒழிக!
திவ்யா ஒழிக!
பெப்சி ஒழிக!
"யோவ்! எல்லாம் சரி நடுவில அது யாரு திவ்யா?"
"என் மனைவி சார் கண்டுக்காதீங்க"

எல்லா பொன்ணுங்களும் 'சூர்யா' மாதிரி பையன் வேணும் என்று தான் சுத்து வாங்க....



அப்புறம் கடைசியா 'ஏரியா' வுல இருக்கிற எவனாவதுதான் உஷார் பண்ணுவான் மச்சி...

என்ன வெல்லாமோ ஆகனும் என்று ஆசைப்பட்டு.... கடைசியில்



"குழந்தையாகவே இருந்திருக்கலாம்" என்ற ஏக்கத்தில் முடிகிறது வாழ்க்கை



**மேடம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். எதிர்பார்த்த சுப செய்தி தாமதமாக வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப லாபம் கிடைக்கும். பெணகள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உறவினர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**மிதுனம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை உண்டாகும். நண்பர்களிடம் பேசி மகிழ்வீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை இலக்கு, குறித்த காலத்தில் நிறைவேறும். பணியாளர்களுக்கு பாராட்டு வெகுமதி கிடைக்கும்.

**கடகம்:** பணிகள் நிறைவேற விடாமுயற்சி தேவை. தொழிலில் உருவாகிற இடையூறை உடனடியாக சரிசெய்வது நல்லது. சுமாரான பணவரவு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பேச்சில் நிதானம் தேவை.

**சிங்கம்:** சுயநல நோக்கில், சிலர் உங்களை குறை சொல்வர். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். மாணவர்களுக்கு விடாமுயற்சி தேவை.

**கன்னி:** அவமதித்து பேசிய வரும் அன்பு பாராட்டுவர். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி யால் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். ஆரோக்கியம் பலம் பெறும்.

**துலாம்:** வீண் பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில் இடையூறுகளை சரி செய்வது அவசியம். லாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்குவர். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** பணி நிறைவேற உத்வேகமுடன் செயற்படுவீர்கள். நண்பரின் உதவி எதிர் பார்த்த வகையில் கிடைக்கும். தொழிலில் தாராள வருமானம் வந்து சேரும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**தனுசு:** தேவையற்ற விவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். மிதமான பணவரவு கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**மகரம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். பிறர் வியக்கும் வகையில் ப... களை மேற் கொள்வீர்கள். தொழிலில் லாபம் ... திகரமான அளவில் இருக்கும். பணிய... கள் பணி யிடத்தில் செல்வாக்குடன் திகழ்...

**கும்பம்:** இனிய பேச்சால் அ... வரையும் கவர்ந்திழுப்பீர்கள். பணிகளில் ... ர்வம் அதிகரிக்கும். தொழிலில் உற்பத்தி வி... னை பெருகும். பணவரவு அதிகரிக்கும். பெண்... டு, தாடை, ஆபரணம் வாங்குவர்.

**மீனம்:** உங்களிடம் உதவிபெற்ற... ன்றி மறந்து செயற்படுவர். குடும்பத்தினரின் ... தரவு மன அமைதிக்கு வழிவகுக்கும். தொழி... வியாபாரத் தில் பணிச்சுமை அதிகரிக்கும். ெ... கள் நகைகளை இரவல் கொடுக்கவும் வாங்கவும் ... ண்டாம்.



# அடக்கப்பட்ட குரல்

உளடக தர்மத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, உண்மையை உலகுக்குக் கொண்டு சென்ற சுகிர்த ராஜனை ஊடகத்துறையால் காப்பாற்ற முடியாமல் போயிற்று என்பது கசப்பான உண்மையே.

மட்டக்களப்பு குருமண்வெளியில் பிறந்த சுப்பிரமணியம் சுகிர்தராஜன் என்ற ஊடகவியலாளர், தனது தொழில் நிமித்தமாக திருமலையில் தங்கியிருந்த நேரத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் திகதி இனம் தெரியாத நபர்களினால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

திருகோணமலையில் இருந்து சுடரொளி, உதயன் ஆகிய பத்திரிகைகளின் திருகோணமலை நிருபராகக் கடமையாற்றிய சுகிர்தராஜன், வீரகேசரி, மெற்றோ நியூஸ் ஆகிய பத்திரிகைகளில் அரசியல் கட்டுரைகளையும் எழுதிவந்தார்.

வீரகேசரியில், எஸ்.எஸ்.ஆர், மனோ, ரஹ்மான் ஆகிய புனைப்பெயர்களிலும் மெற்றோ நியூஸ் பத்திரிகையில் ஈழவன் என்ற பெயரிலும், அரசியல் விடயங்களை எழுதி வந்தார்.

இந்த நிலையில் கடந்த 2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் திகதி திருகோணமலையில் வைத்து பல்கலைகழகத்திற்கு தெரிவாகியிருந்த ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை உலகுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டியிருந்தார் ஊடகவியலாளர் சுகிர்தராஜன். இதன் காரணமாக அவர் குறிவைக்கப்பட்டிருந்தார்.

அந்த வேளையில் திருகோணமலையில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரிகள், குறித்த ஐந்து மாணவர்களின் இறப்புக்கு கைக்குண்டு தாக்குதலே காரணம் எனக் கூறி விசாரணையைத் திசைதிருப்ப முயற்சிசெய்த நேரத்தில் ஊடகவியலாளர் சுகிர்தராஜன், மிகவும் துணிச்சலுடன் செயற்பட்டு சுட்டுகொல்லப்பட்ட மாணவர்களின் சூட்டுக்காயங்களை நுட்பமாகப் ஒளிப்படமெடுத்து குறித்த மாணவர்கள் தலையில் துப்பாக்கியால் சுடப்பட்டே இறந்துள்ளனர். அவர்களின் தலையில் உள்ள காயங்கள் கைக்குண்டு தாக்குதலால் ஏற்பட்டவை அல்ல அது துப்பாக்கிக் குண்டுகளால் ஏற்படுத்தப்பட்டவை என்பதை உலகுக்கு வெளிப்படுத்தியிருந்தார்.

சுகிர்தராஜனின் குறித்த செய்தி, அரசுக்கு சர்வதேச ரீதியில் பெரிய அழுத்தத்தைக் கொடுத்ததுடன், அது ஐக்கியநாடுகள் சபையின் விசாரணைக்கும் உள்வாங்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவமே அன்று சுகிர்தராஜன் சுட்டுக்கொல்லப்படக் காரணமாக அமைந்திருந்தது என கூறப்படுகிறது.

தமிழ்ச் சமூகத்தின் ஊடகப்போராளியாகச் செயற்பட்ட சுகிர்தராஜனின் இழப்புக் குறித்த செய்திகள், அப்போது நிலவிய கடுமையான போர்ச் சூழ்நிலை காரணமாக பெரிதாக கவனம்செலுத்தப்படவில்லை என்பதோடு, பின்னாள்களில் கூட அது குறித்துக் கவனம் செலுத்தப்படாமல் போனமையானது வேதனையானதே.

குறிப்பாக, போர்ச் சூழ்நிலை காரணமாக, பாதுகாப்புக்காக நாட்டைவிட்டு பல தமிழ் ஊடகவியலாளர்கள் வெளியேறி பாதுகாப்பாக இருந்தாலும், அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய பின்னர் நாட்டில் மீதமிருக்கும் ஊடகவியலாளர்கள் குறித்து அவர்கள் சிறிதும் கவனம் செலுத்தத் தவறிவிடுகின்றனர்.

> போர்ச் சூழ்நிலை காரணமாக, பாதுகாப்புக்காக நாட்டைவிட்டு பல தமிழ் ஊடகவியலாளர்கள் வெளியேறி பாதுகாப்பாக இருந்தாலும், அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய பின்னர் நாட்டில் மீதமிருக்கும் ஊடகவியலாளர்கள் குறித்து அவர்கள் சிறிதும் கவனம்செலுத்தத் தவறிவிடுகின்றனர்.

மிகமுக்கியமாக ஊடகத்துறைக்காக தங்களது உயிரை அர்ப்பணித்த ஊடகவியலாளர்களின் குடும்பங்கள் குறித்து கவனம் செலுத்த தவறிவிடுகின்றனர்.

சுகிர்தராஜன் போன்ற ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு இலங்கையில் உள்ள ஊடகநண்பர்களை விட, புலம்பெயர் தேசத்தில் உள்ள ஊடகநண்பர்களினால் மட்டுமே தற்சமயம் உதவிகள் செய்யமுடியும்.

மிதுசா(15), சதுர்சன்(13) என்ற பெயர்கள் கொண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுகிர்தராஜன், தனது குடும்பத்தின் எதிர்காலத்துக்காக எதையுமே சேர்த்து வைக்கவில்லை.

ஊடகத்துறையில் பணியாற்றி, உயிர்நீத்த பல ஊடகவியலாளர்கள் குடும்பங்கள் இன்றும் பல்வேறு துன்பங்களைச் சுமந்து கொண்டே வாழ்கின்றனர் என்பது அனைவரும் அறிந்ததே.

அந்த வகையில் தனது 36ஆவது வயதில் இன்னும் பல சாதனைகளை புரியவேண்டியிருந்த நிலையில் தனது இரு குழந்தைகளையும், இளவயது மனைவியையும் திவிக்க விட்டு சுகிர்தராஜன் இந்த மண்ணை விட்டுப் பிரிந்து சென்ற துயரம் அந்தக் குடும்பத்தை இன்றும்கூட வாட்டிவதைத்துக் கொண்டே இருக்கின்றது. 11 வருடங்கள் கடந்தாலும் சுகிர்தராஜனின் இழப்பு தமிழ் ஊடகச் சமூகத்துக்கு மட்டுமல்ல அவரது குடும்பத் துக்கும் பேரிழப்பே ஆகும்.

---

## அமைச்சர்கள் எடுத்த....

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி

### அமைச்சரவை அங்கீகரித்துள்ள தேசிய மனித உரிமைகள் செயல் திட்டத்தின் சில பகுதிகள்

இலங்கை அரசின் தேசிய மனித உரிமைகள் செயல் திட்டமானது கடந்த வாரம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. அதன் நோக்கம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை முன்னேற்றிப் பாதுகாப்பதற்கான சர்வதேசத் தரங்களையும், திறமான நடைமுறைகளையும் நிறைவேற்றுபவையாக இருப்பதை உறுதிப்படுத்துவதாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் பிரதியொன்று, பிரஸல்ஸிலுள்ள ஐரோப்பிய யூனியனது தலைமைக்காரியாலயத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று பதில் வெளியுறவு அமைச்சர் ஹர்ச டி சில்வா அமைச்சர்களிடம் தெரிவித்தார். இது, இலங்கைக்கு ஜி.எஸ்.பி. மற்றும் சலுகைகளை ஐரோப்பிய யூனியன் அறிவிக்கச் செய்வதற்கான ஏற்பாடாகும். இது பத்து பல்வேறு விடயங்கள் தொடர்பாக இலங்கை கடைப்பிடிக்கவிருக்கும் செயற்பாடுகள் தொடர்பான, மறுசீரமைக்கப்பட்ட 261 பக்கங்கள் கொண்ட அறிக்கையாகும். இந்தத் திட்டத்தின்படி ஆங்கிலத்தை அரசபணிகள் மொழியாக அறிவிப்பதற்கு அரசமைப்பு மாற்றம் செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### செயல் திட்டத்தின் சில முக்கிய அம்சங்கள்

அரசமைப்பில் திருத்தம் செய்யும் வகையில் இரகசியம் பேணும் உரிமை தொடர்பான வரைவிலக்கணம் மற்றும் நோக்கத்தை ஆலோசனைக்குட்படுத்தலும், அவ்வாறான மறு ஆய்வு செய்ததும், பின்னர் அரசமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் இரகசியம் பேணும் உரிமையை இடம் பெறச் செய்வதற்கான திருத்தத்தை மேற்கொள்ளல். 2016 ஆம் ஆண்டின் 12 ஆவது இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்வரும் சகல பொது அதிகார சபைகளிலும் பயிற்சியளித்து தகவல் அதிகாரிகளை நியமித்தல், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விரிவான மறு ஆய்வுகளை நடத்தி அதன் மூலம் கிடைக்கும் விவரங்களை வெளியிடுதலும், அவ்வாறான மறுபரிசீலனையின் மூலம் தெரிவிக்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்

அவ்வாறான மறு பரிசீலனையின் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொது மாகாண மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்தல். அதற்கேற்றாற்போல் சொத்துக்கள் கொடுப்பனவுகளை வெளிப்படுத்தும் சட்டத்தில் மாற்றம் செய்து அவ்வாறான அறிவித்தலானது மறு தேர்தலுக்கான முன்னிபந்தனையாகவும் அறிவிக்கப்படச் செய்தல்.

சமயங்கள் தொடர்பான வன்செயல்களுக்கு பொறுப்பானவர்கள் தொடர்பாக புலனாய்வு செய்து சட்டத்தின்முன்னிறுத்தி தண்டித்தல். இது தொடர்பில் பொருத்தமான சட்டத்தில் திருத்தம் செய்தல்.

### சித்திரவதையைத் தடைசெய்தல்

சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக் கொண்டு விசாரணைகளை மெற்கொள்வதற்குப் பொறுப்பாக பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட சுயேச்சையான ஒரு பிரிவை உருவாக்கி அதனைப்பலப்படுத்தும் வகையில் பொருத்தமான சட்டத்தைத் தயாரித்தல். சித்திரவதைகள் தொடர்பாக ஆய்வுகளை நடத்தி வழக்குத் தொடரும் வகையில் இந்தத் பிரிவை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து செயற்பட அதிகாரமளித்தல்.

### பெண்களின் உரிமைகள்

பெண்கள் தொடர்பான அரசமைப்பு அதிகாரத்தின் கீழ் செயற்படுவதான, பெண்களுக்கான தேசிய ஆணைக்குழுவை ஏற்படுத்தல். பொருளாதார வளங்கள் தொடர்பான சமத்துவ உரிமைகள் வழங்குவதற்கான சீர்திருத்தங்களைக் கொண்டு வருதல். திருமணமானவர்கள் வன்புணர்வுக்குட்படுத்தப்படுவதை எதுவித பாரபட்சமுமின்றி குற்றச் செயலாக்குதல். மணமுறிவு செய்து கொண்டவர்களும் இதில் அடங்குவர். பால்வினை வன்செயல்கள் தொடர் பான வழக்குகளை விரைவாக முடிவுக்கு கொண்டு வரும் வகையில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிறப்புப்பிரிவை ஏற்படுத்தல்.சபைகள் கூட்டுத்தாபனங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் நியமனத்தை ஏற்படுத்தல்

### உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் திரும்பி வரும் அகதிகள்

சொந்தமான காணி உரித்துடையவர்கள் என்று நிர்ணயம் செய்ய முடியாத நிலையிலுள்ளவர்களுக்கு, கூட்டு உரித்துடைய வகையில் காணிகள் வழங்கல். காணி வழங்குவதில் பாகுபாடுகள் காட்டப்படாத வகையில், கண்காணிப்பதற்கான பொறிமுறையை நிறுவுதல். இடம்பெயர்வதற்கான அடிப்படைக்காரணத்தைக் கண்டறிதல். எதிர்காலத்திலும் இடம் பெயர்தல் இடம் பெறக் கூடிய நிலைமைகளைக் கண்டறிந்து களைதல்.

### பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள்

பொது மற்றும் தனியார் துறைகளில் வேலைத் தலங்களில் பால்நிலை நெருக்கீடுககளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்தல். ஊழியர்கள் அமைதியான முறையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதைத் தடுத்தல். தொழிற்சங்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் நேரடியாக நீதிமன்றங்களை நாடுதல்.

உயர்கல்வித்துறையில் தனியார் துறையின் பங்களிப்பை உறுதிப்படுத்தல்.

தமிழில் உள்ள பிரதான இலக்கிய ஆக்கங்களைச் சிங்களத்திலும், சிங்களத்திலுள்ளவைகளைத் தமிழிலும் மொழியாக்கம் செய்து வெளியிடுதல். அவைகள் பாடசாலைகளிலும், இளைஞர்கள் மத்தியிலும், பரவ வகை செய்தல். அரசகரும மொழிக் கொள்கையைத் தனியார் நிறுவனங்களிலும் அமைப்புகளிலும் கௌரவிக்கப்படுவதை முன்னகர்த்தல். ஆங்கிலத்தை அரசகரும மொழியாக அரசமைப்பில் கொண்டுவருவதற்கான அறிவித்தல்

வாகனங்களிலிருந்து வாயு வெளியேற்றம் தொடர்பாக சர்வதேச தரத்தில் புதிய முறையொன்றுக்காக சட்டங்கள் அறிமுகப்படுத்தல். இன்னும் பல முக்கிய விடயங்கள் தேசிய மனிதஉரிமைகள் செயல்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

## திட்டமிட்டவாறு...

அமைச்சர் பைசர் முஸ்தபா, இருப்பினும் திட்ட மிட்டபடி எதிர்வரும் 31 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட இழு பறியின் பின்னர் கடந்த 17 ஆம் திகதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் கையளிக்கப்பட்டது. அறிக்கை இன்னமும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் பைசர் முஸ்தபா, எல்லை நிர்ணயக் குழு அறிக்கையில் தொழில்நுட்ப ரீதியான குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பில் எல்லை நிர்ணயக் குழுவுடன் கலந்துரையாடப்படவுள்ளது. குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே வர்த்தமானிப் பிரகடனத்தை வெளியிட வேண்டியுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் என்று அவர் குறிப்பிட்டார். (த-5)

## கூட்டமைப்பின்...

உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சபையில் எச்சரிக்கை விடுத்தார். மத்திய வங்கி பிணை முறி விற்பனை மோசடி தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட தமிழ் உறவுகள் இருக்கின்றார்களா? இல்லையா என்பதை ஆளும்கட்சி உறுப்பினர்களால் தற்பொழுது கூறமுடியுமா? தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் எதனைக் கூட்டு அரசு செய்துள்ளது. தற்பொழுது பெரும்பான்மையின மக்களை, இனவாதிகளுடன் இணைந்து அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் பிழையாக வழிநடத்திச் செல்லும் நிலையில் எவ்வாறு நல்லிணக்கத்தைக் கொண்டுவர முடியும் என்றும் கேள்வி எழுப்பினார். (த-5)

## கேப்பாபிலவு...

எனக் கோரி உணவு ஒறுப்பு போராட்டத்தில் இன்றைய தினம் ஈடுபடவுள்ளனர். கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் கோயில் முன்பாக இந்தக் கவன வீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இன்றைய தினம் வருகை தரவுள்ளார். வித்தியானந்தக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பதுடன், காணி உறுதிப் பத்திரமும் வழங்கவுள்ளார். கேப்பாபிலவில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள காணியில் ஒரு தொகுதியையும் விடுவிக்கும் அறிவித்தலை விடுக்கவுள்ளார்.

இது தொடர்பில் கேப்பாபிலவு மக்கள் தெரிவித்ததாவது:

மீள்குடியேற வந்த எங்களைச் சொந்த மண்ணுக்கு விடாமல் மாதிரிக் கிராமத்தில் குடியேற்றினார்கள். எங்கள் பூர்வீக நிலத்தில் குடியேற்றுங்கள் என்று பல போராட்டங்கள் மேற்கொண்டிருந்த நிலையில், சிறு பகுதி விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்படும் பகுதியில் ஆறு மாதத்துக்குப் பின்னரே மக்கள் மீள்குடியேற்றப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. பகுதி பகுதியாக விடுவிப்பதைத் தவிர்த்து முழுமையாக விடுவிக்கவேண்டும். இதுவே எங்களுடைய கோரிக்கை. இதனை வலியுறுத்தி பிள்ளையார் கோயிலில் அடையாள உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்- என்றனர். (த-5)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**லோகநாதன் கஜேந்திரன் (கஜன்)**

நேசத்துடன் அன்பு பாசத்துடன்
ஒரு கூட்டுக்கிளியாக வாழ்ந்தோம்
நேர்வழியில் வாழ்ந்த உத்தமனே
அனைவருடனும் அன்புடனும்
பண்புடனும் வாழ்ந்திட்டு
நம்மையெல்லாம் தவிக்கவிட்டு
எங்கு சென்றாயடா?
நெஞ்சிலே நெருப்பேந்தி
தவிக்கின்றோம் நாமடா...

மண் மகிழ 15.09.1987
கண்நெகிழ 18.01.2015

குடும்பத்தினர்.
49, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



பிறப்பு: 15.11.1933
இறப்பு: 22.01.2017

**கந்தையா குழந்தைவடிவேல்**

யாழ். கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் காளி கோயில் வீதி, சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குழந்தைவடிவேல் 22.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கைராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாதர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சுந்தரம் அவர்களின் அன்புக் கணவரும், கலைச்செல்வி (லண்டன்), சிவச்செல்வன் (லண்டன்), கலைவதனி (ஆசிரியை, யாழ். திருஞானசம்பந்த வித்தியாசாலை சுன்னாகம்), உமாச்செல்வன் (லண்டன்), துளசிச்செல்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சண்முகம் மற்றும் தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மாதர் பொன்னம்மா மற்றும் கண்மணி (லண்டன்), காலஞ்சென்ற உருக்குமணி ஆகியோரின் மைத்துனரும், சிவபாலன் (லண்டன்), வாசுகி (லண்டன்), சுரேஸ்குமார் (ஸ்ரீலங்கா ரெலிக்கொம் யாழ்ப்பாணம்), தர்மினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காத்திகன், மயூரன், பிரணவன், அபிராமி, நிவேதனன், கவிந்தன், துவேரிதா, மயூரா, சந்தோசியா, யாதவன், நிதி, பார்கவி, பைரபி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2017) புதன்கிழமை பி.ப.ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி வீதி,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.

சுரேஸ்குமார் - 0094 471 8565679 / 0094 212 240252
சிவா - 004479391 36853/ துளசி - 0044 77035 5231

## முதலாம் ஆண்டு நீங்கா நினைவாக



அமரர்

**செபஸ்ரியாம்பிள்ளை யேசுதாசன்**

தோற்றம் 05.04.1947
மறைவு 25.01.2016

ஆண்டு ஒன்று ஆனதுவோ
எம் துயர் ஆறவில்லை நேரம் தவறாமல்
உம் நினைவு வந்து வந்து வாட்டுவதை
யார் அறிவார் நீங்களின்றி நாமின்று
நிர்க்கதியாய்த் தவிக்கின்றோம்
வாரீரோ இன்னொரு காலம்
எம்மோடு வாழ்வதற்கு

இல.69, 5ஆம் குறுக்கு,
உதயபுரம், மணியந்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(08/7846)(12.16)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
**ஜெயலட்சுமி (றஞ்சி) சிவகுருநாதன்**

மலர்வு 19.03.1953
உதிர்வு 29.12.2016

29.12.2016 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்ப குலவிளக்கின் துயரச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசியிலும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு அனுதாபங்களைத் தெரிவித்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

26.01.2017 வியாழக்கிழமை காலை 6 மணிக்கு கிரியைகள் [illegible] அம்மன் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். மறுநாள் 27.01.2017 வெள்ளிக்கிழமை வீட்டில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

75/9, நா.மு.வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

## எம் இதய தெய்வத்தின் ஓராண்டு நினைவலைகள்



**அமரர் முத்தாபரணம் பாலசிங்கம்**

25.01.2017



சீர்பெற்ற குவலயத்தில் சிறப்பான வாழ்வு கண்டு
போரின் கொடுமையினால் இடம்விட்டு
இடம்பெயர்ந்து உற்ற சகோதரரை
உறவினையும் பிரிந்து வாழ்ந்து பற்றுடனே
கணவனையே கண் இமைபோல் காத்துவந்தீர்.
தொற்றா நோய் வந்து துன்புறுத்தும்
வேளையிலும் துன்பத்தைக் கண்டு துவளாது
பணிசெய்த கண[illegible]
விட்டு கால[illegible]
ஆண்டொன்று ஆனாலும்
உன் நினைவு மாறாது.

**முருகேசு பாலசிங்கம்**
(கணவர்)
பாலாவோடை,
உடுவில் தெற்கு, இணுவில்.

## மரண அறிவித்தல்



### பத்மநாதன் நதானியல் இராஜதுரை

**(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்- தொலைத்தொடர்பு பிரிவு)**

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், பிடாரி கோயிலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட P.N.இராஜதுரை நேற்று (24.01.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் விக்ரோறியாவின் அன்புக் கணவரும், கீதாஞ்சலி, புஸ்பாஞ்சலி, சுரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தற்போதைய முகவரி:-**
**இல.118, சப்பல் வீதி,யாழ்ப்பாணம்.**

**தகவல்:** R.விக்ரோறியா
**(மனைவி)**


**021 222 9107, 072 611 1986** (ஜே/279) (11,18)

## மரண அறிவித்தல்

### தம்பன் பூபாலன்

இலந்தைக்காட்டைப் பிறப்பிடமாகவும், பாலவத்தான் இமையாணன், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பன் பூபாலன் 23.01.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பன் - வள்ளிஅம்மா தம்பதியரின் அன்பு மகனும் தேவிகாவின் அன்புக் கணவரும் ஜெகன் (சமுர்த்தி உத்தியோகத்தர் பருத்தித்துறை), அகிலன், தர்சினி (ஆஸ்திரேலியா), பார்த்தீபன் (ஆஸ்திரேலியா), காயத்திரி, பிரதீபன், கெங்காதரன், பாருத்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்சினி (துபாலதிபர், பருத்தித்துறை), சுதர்சன் (நில அளவையாளர் - ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் கனிஷ்டன், சங்கவிதா, அனோஜிதன், சஜின் டெனிஸ், ஸ்ரீவருன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.



பிறப்பு: 06.01.1945
இறப்பு: 23.01.2017

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2017) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"பாலவத்தான், இமையாணன்,**
**உடுப்பிட்டி.**

(N/ 237) (12,17,18,)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 394 6482, 077 190 0196**

## கர்ப்பிணி...

பொலிஸார். கொலை நடந்த சிறிது நேரத்தில் சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களே இந்தக் கொலையைச் செய்தவர்கள் என்று பொலிஸார் நம்புகின்றனர். நகைகளைக் கொள்ளையடிப்பதற்காக இந்தக் கொலை இடம்பெற்றது என்றும் அவர்கள் கூறினர்.

கொலைச் செய்தி பரவியதும் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. பொலிஸார் பிடித்து வைத்திருந்த சந்தேகநபர்களைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி கேட்டு மக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. குற்றவாளிகளுக்குத் தாமே தண்டனை வழங்கப் போகிறோம் என்று கூடிய மக்கள் கொந்தளிக்கத் தொடங்கினர். மாலை 4 மணிவரை மக்களின் கொந்தளிப்புத் தொடர்ந்தது.

### நேரில் கண்ட சாட்சி

யாழ்ப்பாண நகரில் இருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது ஊர்காவற்றுறை. அங்குள்ள கரம்பொன் என்ற இடத்தில் வாழ்கிறார் ஞானசேகரன் மேரி ரம்சியா (வயது - 27). ஊர்காவற்றுறை நீதிமன்றில் பணியாற்றும் அவரது கணவன் வேலைக்குச் சென்ற பின்னர் வீட்டில் தனித்திருந்தார். பகல் 11 மணியளவில் அவர் கொல்லப்பட்டார். கொல்லப்படும்போது ரம்சியா 8 மாதக் கர்ப்பிணி. அவர் அணிந்திருந்த தங்க நகைகள் காணாமற்போயிருக்கின்றன என்கின்றனர் பொலிஸார்.

பிடரிக்குக் கீழே கழுத்தில் வெட்டுக் காயம் காணப்படுகிறது. உச்சந்தலை சிதறிக் காணப்படுகிறது. பலமாகத் தாக்கப்பட்டதில் அவரது மூளை சிதறியிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோ ஒன்றில் வந்தவர்களில் ஒருவர் ரம்சியாவின் வீட்டுக்குள் சென்றுவிட்டுத் திரும்புவதை வாய்பேச முடியாத சிறுவன் ஒருவன் நேரில் கண்டுள்ளார். அயலவர்களும் வழங்கிய தகவலை அடுத்து மண்டைதீவில் உள்ள பொலிஸ் காவலரணில் வைத்து ஓட்டோ மடக்கப்பட்டது. அதிலிருந்த சகோதரர்களான நாகேந்திரன் துசியந்திரன் (வயது - 30), நாகேந்திரன் துசியந்தன் (வயது-32) ஆகியோரே கைது செய்யப்பட்டனர். இவர்கள் வட்டுக்கோட்டை பழைய நீதிமன்றத்தடி கரம்பகம் என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள்.

"ரம்சியா இயலாமல் கிடக்கிறார், உதவிக்கு வருங்கள் என்று 11 மணியளவில் அயல்வீட்டுப் பெண் ஓடிவந்து என்னை அழைத்தார். குறித்த பெண் கர்ப்பமாக இருந்தமையால் அதற்குத்தான் அவசரமோ என்று ஓட்டோவுக்கு அழைத்துவிட்டு ரம்சியா வீட்டுக்குச் சென்றேன். அங்கே அவர் குருதி வெள்ளத்தில் மிதந்தார்" என்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார் அயல் வீட்டுப் பெண்.

உடனடியாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத்தகவல்வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். "எமது வீதியின் ஊடாக அந்த நேரத்தில் இரும்பு வியாபாரிகளைத் தவிர வேறு யாரும் சென்றதை நான் காணவில்லை. அதைப் பொலிஸாரிடம் தெரிவித்தேன். அயலில் உள்ள 12 வயதுடைய வாய்பேச முடியாத சிறுவன் ஓட்டோவில் வந்தவர்கள் அந்த வீட்டுக்குள் சென்றதைக் கண்டுள்ளான்" என்று அந்தப் பெண் மேலும் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்குத் தகவல் வழங்கப்பட்டதும் விரைந்த நோயாளர் காவு வண்டி ரம்சியாவை வைத்தியசாலைக்கு எடுத்து விரைந்தது. எனினும் வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது அவர் உயிரிழந்திருந்தார்.

### சந்தேகநபர்கள் கைது

கொலை மற்றும் ஓட்டோவில் வந்தவர்கள் குறித்துத் தகவல் கிடைத்ததும் தீவகம் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள் காவல் நிலைகள் உசார்ப்படுத்தப்பட்டன. மண்டைதீவு பொலிஸ் காவலரணில் நடத்தப்பட்ட சோதனையில் ஓட்டோ ஒன்றைப் பொலிஸார் மடக்கினர். அதிலிருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு ரம்சியாவின் அயல் வீட்டுச் சிறுவன் அவர்களில் ஒருவரை அடையாளம் காட்டினார். "வாய்பேச முடியாவிட்டாலும் வீட்டுக்குள் சென்றவர் என்று ஒருவரை அந்தச் சிறுவன் அடையாளம் காட்டினார். பொலிஸார் அவர்களைச் சோதனையிட்டபோது அவரது ஆடையிலும், உடலிலும் குருதிச் சிதறல்கள் காணப்பட்டன. பொலிஸ் தடயவியல் நிபுணர்கள் அந்தக் குருதி மாதிரிகளையும் ரம்சியாவின் குருதி மாதிரிகளையும் எடுத்துள்ளனர். அவற்றை மரபணுச் சோதனைக்கு உட்படுத்துவதன் மூலம் இரண்டும் ஒரே குருதிதானா என்பது தெரியவரும்" என்று தெரிவித்தார் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர்.

"வீட்டுக்குள் வைத்து ரம்சியா தாக்கப்பட்டபோது, அவர் தப்பியோடியிருக்கிறார். விரட்டிச் சென்ற கொலையாளிகள் மீண்டும் கொட்டனால் பலமாகத் தாக்கி அவரை கொன்றுள்ளனர். இதனால் வீட்டுக்குள்ளும் வெளியே மரத்தடியிலும் குருதிக்கறை படிந்துள்ளது. கொலைக்குப் பயன்படுத்தியதாக நம்பப்படும் கத்தி மற்றும் கோடரி என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன" என்றும் அந்தப் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### மக்கள் கொந்தளிப்பு

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுவிட்டனர் என்ற செய்தி அறிந்ததும் அந்தப் பகுதி மக்கள் பொலிஸ் நிலையம் முன்பாகக் கூடினர். கொலையாளிகளைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மக்களின் கொந்தளிப்பை அடுத்து விசாரணைகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்களைக் கடும் பாதுகாப்புடன் விரைவாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு மாற்றினர்.

மக்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்குமாக மேலதிக பொலிஸார் ஊர்காவற்றுறைக்கு வரவழைக்கப்பட்டனர். யாழ்ப்பாண உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பொதுமக்களுடன் பேசினார். எனினும் மக்கள் அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் இரு மருங்கிலும் பொலிஸார் நிறுத்தப்பட்டு கடும் பாதுகாப்புக்கு மத்தியில் பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஞானசேகரன் தம்பதியினருக்கு 4 வயதில் ஒரு மகள் இருக்கிறார்.

(உ-4,101,106,26)

## நினைவஞ்சலிகள்

### ஐந்தாம் ஆண்டு




மலர்வு 1957 . 12 . 31
உதிர்வு 2012 . 01 . 25

**அமரர் தேவதாஸன் விவேகானந்தன்**

அன்பு அப்பா..... !
எமக்கு தவமாய் கிடைத்த வரம் நீங்கள்....
என்ன பாவம் செய்தோம் அப்பா......
கடவுள் மீண்டும் தன்னோடு சேர்த்துக் கொண்டார்
கடந்து ஆண்டுகள் ஐந்து ஆனது அப்பா
பலன் இல்லை என்று தெரிந்தும் எங்கள் எதிர்பார்ப்பு தொடர்கின்றது
என்றோ ஒரு நாள் உங்கள் அன்பு வதனத்தைக் காண்போம்
என்ற ஏக்கத்தில்....!

### இரண்டாம் ஆண்டு



மண்மகிழ 1980 . 06 . 20
மனம் நெகிழ 2014 . 12 . 20

**அமரர் விவேகானந்தன் பிரகாஸ்**

ஆண்டுகள் இரண்டு ஆனது நீர் பிரிந்து
தவிக்கின்றோம் நாம் இங்கு உமைப்பிரிந்து
கனவுகள் யாவும் நனவாகும் முன்பே
உம் வாழ்வைக் கலைத்தானே காலன்
கலங்குகின்றோம் நாம் இங்கு
உம்மைக் காண்பதற்கு..... !

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

இல.15/A, தனங்களப்பு,
சாவகச்சேரி.

என்றும் அன்புடன் நினைவிலிருக்கும்
குடும்பத்தினர்.

## பெண்...

சகோதரர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

"கைது செய்யப்பட்டவர்களில் ஒருவருக்குத் திருமணம் நடக்க இருக்கிறது. அந்தப் பெண்ணைப் பார்ப்பதற்காகவே அவர்கள் ஊர்காவற்றுறைக்குச் சென்றிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டபோது அவர்கள் மீது குருதிச் சிதறல்கள் காணப்பட்டன. கொலையைச் செய்ததற்கான காரணம் என்னவென்று இதுவரையில் சொல்லவில்லை" என்று யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஸ்ரெனிஸ்லஸ் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஓட்டோ ஒன்றிலேயே இவர்கள் இருவரும் ஊர்காவற்றுறையிலிருந்து தப்பியோட முற்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் ஓட்டோ சாரதி பொலிஸாரால் விடுவிக்கப்பட்டார்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்து சந்தேகநபர்களின் சகோதரி ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையம் விரைந்தார். அவரிடம் நேற்றிரவு வரை பொலிஸார் துருவித் துருவி விசாரணை நடத்தினர்.

(உ-4)

## றோ, சி.ஐ.ஏ.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகப் பரபரப்புக் குற்றச்சாட்டை, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில முன்வைத்துள்ளார்.

மகிந்தவை அரசியலில் இருந்து ஒதுங்குமாறு பலம்மிக்க நாடு ஒன்றும், அயல் நாட்டின் புலனாய்வுத் துறையும் அழுத்தம் கொடுத்து வருவதாகச் செய்திகள் வெளியாகியிருந்ததன் பின்னணியில், உதய கம்மன்பில மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த தொடர்ந்து அரசியலில் இருப்பதே அரசுக்கு உள்ள மிகப் பெரிய சவாலாகும். அரசு எதிர்பார்க்காத ஒன்றை மகிந்த செய்துள்ளார். இதைக் கவனத்தில் எடுத்து 'மகிந்த அரசியலில் இருந்து விலகினால் அவ ரது வாரிசுகள் மீதுள்ள வழக்குகள் தள்ளு படி செய்யப்படும் என்று இந்தியாவின் றோ அமைப்பு அழுத்தத்தைப் பிரயோகித்தது.

மகிந்த இதற்குச் சம்மதிக்கவில்லை. இதனால் அவரின் உயிருக்கு ஆபத்து உள்ளது. இந்த அழுத்தத்துக்கு அமெரிக்கா வின் சி.ஐ.ஏ. அமைப்பும் தொடர்புபட்டுள்ளது.

நாட்டின் அரச தலைவர் என்று கூடப் பார்க்காமல் ஜோன் கெனடியை அமெரிக்காவின் சி.ஐ.ஏ. அமைப்பு கொலை செய்தது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும் - என்றார். (த-5)

## லசந்தவை...

ராஜபக்ச தெரிவித்தார்.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை, முன்னாள் அரச தலைவர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலருக்குத் தெரிந்தே நடந்தது என்றும், முன்னாள் பாதுகாப்புச் செயலரே இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்றும், பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கிய வாக்குமூலத்தில் கூறியிருந்தார்.

இந்தக் கொலை தொடர்பாக மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்சவிடம் விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் அவர் கோரியிருந்தார். இது குறித்து கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ள மகிந்த ராஜபக்ச, லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்குப் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்று நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தக் கொலை தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் என்னிடம் விசாரணை நடத்தினால், கொலையாளியின் அடையாளங்களை வெளிப்படுத்துவேன். சில தரப்பினர் விளைவுகள் அல்லது தீவிரத்தன்மையைப் புரிந்து கொள்ளாமல், இலகுவாக கருத்துக்களை வெளியிடுகின்றனர் - என்றார். (த-5)

## மகளை...

மனநிலையையும் கருத்தில் கொண்டு விமலுக்குப் பிணை வழங்கவேண்டும் என்று மன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, விமல் வீரவன்சவின் விளக்கமறியல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று அவரை முன்னிலைப்படுத்திய போதே விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மகிந்த ஆட்சிக் காலத்தில் விமல் வீரவன்ச நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சராகப் பதவி வகித்த வேளை, அந்த அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையால், அரசுக்கு சுமார் 41 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. கடந்த 10 ஆம் திகதி அவர் வாக்குமூலம் அளிக்க பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். அங்கு சென்ற அவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

வழக்கு மீள விசாரணைக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது, விமல் வீரவன்ச உள்ளிட்ட இருவர் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கைது செய்யப்பட்டவர்களை விளக்கமறியலில் வைக்கும் அளவுக்கு சாட்சிகளை முன்வைக்க பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவின் உதவிப் பொலிஸ் அதிகாரி தோல்வியடைந்துள்ளார் என்று குறிப்பிட்டார். விமல் வீரவன்சவின் மகள் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதால் அவரது மனநிலையையும் கருத்திற்கொண்டு தனது கட்சிக்காரருக்குப் பிணை வழங்கவேண்டும் எனவும் அவர் வாதிட்டார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிவான் லங்கா ஜயரத்ன, சந்தேகநபர்களுக்கு எதிராக போதுமான சாட்சிகள் உள்ளன எனவும், முன்வைக்கப்பட்ட ஏனைய காரணங்கள் பிணை வழங்கப் போதுமானது இல்லை எனவும் கூறினார்.

இதனையடுத்து இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், மோசடி இடம்பெற்றது எனக் கூறப்படும் காலப் பகுதியில் பிரதி அமைச்சராகச் செயற்பட்ட லசந்த அழகியவன்ன மற்றும் அப்போதைய அரச பொருளியல் கூட்டுத்தாபனத் தலைவர் அஞ்சு மாரசிங்க ஆகிய இருவர் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவு பிறப்பித்தார். (த-5)

## மேன்முறையீட்டு...

கடற்படைப் புலனாய்வாளர்கள் 3 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர். வழக்கு விசாரணை சிறப்பு அறங்கூறும் சபை முன்பாக நடைபெற்றது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அனைவரையும் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பு வழங்கிக் கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது. இதற்கு எதிராக, நடாராஜா ரவிராஜின் மனைவி சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

மனுதாரரோ அவரது சட்டத்தரணியோ மன்றில் கடந்த 19 ஆம் திகதி முன்னிலையாகவில்லை என்பதைக் காரணம் குறிப்பிட்டு, மேன்முறையீட்டு மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதற்கு எதிராக மற்றொரு மனு உடனடியாகவே சமர்ப்பிக்கப்பட்டது. அந்த மனுவில், மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்யும்போதே வழக்கு எடுக்கப்படுவதற்கான மூன்று திகதிகள் சமர்ப்பிக்கவில்லை. வழக்குத் தொடர்பான கொழும்பு மேல் நீதிமன்றத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி எமக்குக் கிடைக்கவில்லை. அது கிடைத்த பின்னர் நீதிமன்ற வழக்கு நாள்களில் சாத்தியமான மூன்று திகதிகளை வழங்குவதாகக் குறிப்பிட்டிருந்தோம். அப்படியிருந்தும், கடந்த 18 ஆம் திகதி நீதிமன்ற வழக்கு விவரங்களில் இந்த வழக்கு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. திடீரெனக் கடந்த 19 ஆம் திகதி புதிய வழக்குப் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டு அதில் வழக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. மீளவும் வழக்கு நிரலில் இந்த மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், வழக்குத் தொடர்பில் சட்டத்தரணிகளுக்கு அறிவிக்காததோடு வழமையாகப் பின்பற்றப்படும் நடவடிக்கை பின்பற்றப்படவில்லை எனக் குறிப்பிட்டமை தொடர்பில் ஆராய்ந்து சட்டத்தரணியின் கூற்று உண்மையெனக் கண்டறிந்தது. இதன் காரணத்தினால் அந்த வழக்கை விசாரணைக்கு ஏற்பதாக அறிவித்துள்ளது. இதன் பிரகாரம் குறித்த வழக்குத் தொடர்பான முதல் ஆய்வு எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி இடம்பெறும். (த-5-101)

## அடை மழைக்கு...

நாளாக முன்னெடுத்தனர்.

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினர் வவுனியா நகரின் மையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை கோயில் வழிபாடுகளுடன் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கொட்டகை அமைக்கப்பட்டு அங்கு அமர்ந்து அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்தனர். 16 பேர் இந்த உணவு ஒறுப்புப் போராட்டத்தில் பங்கெடுத்துள்ளனர். காணாமற்போன தங்களது உறவுகளின் படங்களையும் அவர்கள் தாங்கியிருந்தனர். நேற்று முன்தினம் இரவு, கொட்டகையினுள்ளேயே அவர்கள் படுத்து உறங்கினர். போதிய வெளிச்சம் இல்லாமல், லன்ரன் வெளிச்சத்தில், கடும் குளிரின் மத்தியிலும் படுத்திருந்தனர்.

நேற்றுக் காலை நகரசபைக்குச் சொந்தமான பொதுமலசல கூடத்தில் காலைக் கடன்களை முடித்துவிட்டு, மீளவும் வந்து போராட்டக் களத்தில் அமர்ந்தனர். கனமழை பெய்த போதும் அவர்கள் கூடாரத்தை விட்டு வெளியேறவில்லை. மழை காரணமாக அந்தப் பகுதியில் வெள்ளம் தேங்கியது. இருப்பினும் போராட்டக்காரர்கள் அதனையும் பொருட்படுத்தாமல் தமது உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இரு தினங்களாக உணவு, குடிதண்ணீர் எதுவுமின்றி மிக உறுதியான போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான இந்திரராசா, தியாகராசா, மயூரன் ஆகியோர் நேரில் சென்று போராட்டத்துக்கு ஆதரவளித்தனர்.

தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறும், சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்குமாறும் போராட்டக்காரர்கள் கோரிக்கையாக முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5-402)

## குற்றவாளிகள்...

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மீள வழங்கப்படும் என்ற தகவல் வெளியாகியுள்ளது. இலங்கைக்கான பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தங்களும் குறைவடைந்து வருகின்றன. கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டுள்ள எங்கள் பிள்ளைகள் உயிருடன் உள்ளனர் என்று நாங்கள் கருதுகின்றோம். அவர்கள் உயிருடன் மீட்கப்படும் வரை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதை நிறுத்திவைக்க வேண்டும். இலங்கையில் பல இரகசியத் தடுப்பு முகாம்கள் இருப்பதைப் பல அமைப்புகள் உறுதி செய்துள்ளன. - என்று தெரிவித்தனர்.

'எனது மகன் பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டார். மகனுக்கு நீதி கேட்டு நான் நீதிமன்றம் சென்றேன். ஆனால், குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை வலுவிழந்துவிட்டது' - என்று காணாமற் போனோர் சங்கத்தைச் சேர்ந்த ஆஸா குறிப்பிட்டார். (த-5)

## கூட்டு...

பட்டுக் கைதுகள் இடம்பெறுகின்றபோதிலும், இதுவரை யாருக்கும் தண்டனை வழங்கப்படவில்லை. போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றனவா என்பது பற்றி மக்களுக்குத் தெரியவேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் நேற்று வலியுறுத்தினார்.

மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணைமுறி விவகாரம் குறித்து விசாரணைகளை நடத்தி கோப் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல், மோசடி என்பது தொற்றுநோய் போன்றது. அதற்கு முடிவு கட்டாவிட்டால் ஜனநாயகத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்திவிடும். ஊழல், மோசடியே சர்வாதிகாரத்துக்கும் வழிவகுக்கும். ஊழல், மோசடிகள் நிறுத்தப்பட்டுச் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியன ஒவ்வொரு கட்சிகள் மீது விமர்சனங்களை - குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன. ஊழல், மோசடியில் ஈடுபட்டதற்காக எவரும் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவில்லை - தண்டிக்கப்படவும் இல்லை. இவ்வாறான அணுகுமுறையின் ஊடாக மக்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் முட்டாளாக்கப் பார்க்கின்றனர். இதனால் மக்களுக்கும் விரக்தியேற்பட்டுள்ளது.

டி.எஸ்.சேனாநாயக்க, பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க, சிறிமாவே பண்டாரநாயக்க போன்ற முன்னாள் தலைவர்களுக்கு மோசடிக் குற்றச்சாட்டுக்கள் வந்திருக்கவில்லை. அதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவோ அல்லது தலைமை அமைச்சர் விக்கிரமசிங்கவோ ஊழலுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று நான் கூறவில்லை. ஊழல்கள் தற்போது இடம்பெறுகின்றன. அவை நிறுத்தப்படவேண்டும். கடந்த ஆட்சிக் காலத்தில் அதிக ஊழல், மோசடிகள் இடம்பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைதுகள் இடம்பெறுகின்றபோதிலும், இதுவரை யாருக்கும் தண்டனை வழங்கப்படவில்லை. போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றனவா என்பதுபற்றி மக்களுக்குத் தெரியவேண்டும். கடந்த ஆட்சியில் அதிக மோசடிகள் இடம்பெற்றிருந்தன என்றால் ஏன் யாருக்கும் இதுவரை தண்டனை வழங்கப்படவில்லை என்பதே இங்கு கேள்வியாக இருக்கின்றது. தற்போதைய அரசுக்கு எதிராகவும் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் இருக்கவே செய்கின்றன.

மத்திய வங்கியின் இந்தச் சர்ச்சைக்குரிய பிணைமுறி விவகாரத்தைப் பொறுத்தவரையில், இதனுடன் சம்பந்தப்பட்ட எவரும் தப்பிக்கவிடப்படாமல் சட்டத்தின் முன்நிறுத்தித் தண்டிக்கப்பட வேண்டும். இந்த விடயம் தொடர்பில் உரிய சுயாதீன விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தி மக்களுக்கு உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும். யார் குற்றவாளி என்றாலும் உரிய விசாரணை நடத்தித் தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றார். (த-5)

## ஊடக...

மீதான அடக்குமுறைக்கும் எதிரான கறுப்பு ஜனவரி நிகழ்வு கொழும்பில் நேற்று நினைவுகூரப்பட்டது.

ஊடகவியலாளர்களின் படுகொலைக்கு நீதி கோரி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குத் தபால் அட்டைகள் அனுப்பும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இதுவரை காலமும் படுகொலை செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட ஊடகவியலாளர்களின் ஒளிப்படங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவர்களின் உயிரிழப்புக்கு அரசு நீதியைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். படுகொலைகள் தொடர்பில் விசாரணை நடத்த அரச தலைவர் சிறப்பு ஆணைக்குழுவையும் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பெரும்பாலான ஊடகவியலாளர்கள் பங்கேற்று ஊடக அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

காணாமற்போன மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென அவர்கள் இதன்போது வலியுறுத்தினர். (த-5)

## நல்லூரிலும்...

வியாழக் கிழமை நல்லூரில் அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் முன்னெடுக் கப்படவுள்ளதாக, வடபகுதி பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்கள் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

காணாமற்போனோரின் உறவுகள் வவுனியாவில் சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள். இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து நல்லூர் கோயில் வீதியில் நாளை வியாழக்கிழமை அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. காணாமற்போனோரின் உறவினர்கள் அனைவரையும் அணிதிரளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (த-5)

# அல்ஹிஜிரா இறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஜன. 25
வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால் பந்தாட்டத்தில் அல்ஹிஜிரா அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில், நியூபைட் அணியை எதிர்த்து அல் ஹிஜிரா அணி மோதியது. இதில் அல்ஹிஜிரா அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)



# யங்ஸ்ரார் கழகம் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 25
வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் யங்ஸ்ரார் அணி இறுதிக்குத் தகுதிபெற்றது. வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில், ஈஸ்வரன் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளிலேயே வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் யங்ஸ்ரார் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# சண்சைன் வென்றது

யாழ்ப்பாணம், ஜன.25
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சண்சைன் அணி வெற்றிபெற்றது. சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காகவே இந்தத் தொடர் இடம்பெற்று வருகிறது. யங்ஸ்ராரின் மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் சண் சைன் அணியை எதிர்த்து கோல்டன் ஸ்ரார் அணி மோதியது. இதில் சண் சைன் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# கலைமகள் இருதயநாதர் சம்பியனாகின

யாழ்ப்பாணம், ஜன. 25
மாந்தை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் கலைமகள் அணியும் பெண்கள் பிரிவில் இருதயநாதர் அணியும் சம்பியனாகின.

கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டங்கள் இடம்பெற்றன. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கலைமகள் அணியை எதிர்த்து ஸ்கைலாப் அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில், கலைமகள் அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் இருதயநாதர் அணியை எதிர்த்து கலைமகள் அணி மோதியது. இருதயநாதர் அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 25

**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்**

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச்சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன் கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்ஹிஜிரா அணியை எதிர்த்து லக்கிஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)

# சென். மைக்கல் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஜன. 25
வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் உரும்பிராய் சென். மைக்கல் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அச்சுவேலி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் காலிறுதியாட்டம் இடம் பெற்றது. உரும்பிராய் சென். மைக்கல் அணியை எதிர்த்து கலைவாணி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். மைக்கல் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களை பெற்றது. அதிகபட்சமாக கஜீவ்ராஜ் 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கலைவாணி அணியின் சார்பில் நிசாந், நிக்சன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலைவாணி அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றது. இதனையடுத்து இரு ஓட்டங்களால் வென்றது சென் மைக்கல். பந்துவீச்சில் கபில்ராஜ் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம-422)



# சென். ஜோன்ஸ் அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 25
நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் சென். ஜோன்ஸ் கழக அணி சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் அணியை எதிர்த்து சென். பற்றிமா அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 17:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தது சென். ஜோன்ஸ். எனினும் அந்த அணி சரிவில் இருந்து மீண்டு அடுத்த இரு செற்களையும் முறையே 25:18, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# எவ்.ஏ.கிண்ண கால்பந்தாட்டத் தொடர் இமையாணன் மத்தி. அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஜன. 25
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம்.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வடமராட்சி லீக்கில் பதிவுசெய்ய கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இரு அணிகளும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தின. முதல் 40 நிமிடங்கள் வரை கோல் எதுவும் பதிவாகவில்லை. 40 ஆவது நிமிடத்தில் மத்தியின் வீரர் சாரு முதல் கோலைப் பதிவு செய்தார். 1:0 என்று இமையாணன் மத்தியின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் இமையாணன் அணி வெற்றிபெற்றது. (ம-108-422)

# விசுவமடு மத்திய வி.கழகம் கிண்ணத்தைக்கைப்பற்றியது

யாழ்ப்பாணம், ஜன. 25
புதுகுடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் விசுவமடு மத்திய விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

விசுவமடு மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் விசுவமடு மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் விசுவமடு மத்திய விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# இளங்கதிர் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜன. 25
மாந்தை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் இளங்கதிர் அணி சம்பியனானது.

கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் இளங்கதிர் அணியை எதிர்த்து உதயதாரகை அணி மோதியது. இதில் இளங்கதிர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## அஸ்வின் ஜடேயாவுக்கு ஓய்வு

இங்கிலாந்துக்கு எதிரான ரி-20 தொடர் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத் தொடரில் இருந்து சுழல்பந்து வீச்சாளர்களான அஸ்வின் மற்றும் ஜடேயா இருவருக்கும் ஓய்வு கொடுத்தது இந்திய கிரிக்கெட் சபை.

இந்தத் தொடருக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அஸ்வின், ஜடேயா இருவரும் அணியில் இடம்பெற்றிருந்தனர். ஆனால் அடுத்து நடைபெறவுள்ள ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கருத்தில் கொண்டு, முன்னணி சுழல் வீரர்களான இருவருக்கும் ஓய்வு கொடுக்கப்படலாம் என்று கருதப்பட்டது.

இதன்படி தெரிவுக்குழு அவசர ஆலோசனையை நடத்தி, அணியில் மாற்றம் செய்துள்ளது. அஸ்வின், ஜடேயா இருவரும் நீக்கப்பட்டு பதில் வீரர்களாக சுழற்பந்து விச்சாளர்களான மிஸ்ரா மற்றும் ரசூல் இருவரும் அணியில் சேர்க்கப்பட்டனர்.

இந்திய ஆடுகளங்கள் சுழலுக்குச் சாதகமானவை. ஆஸ்திரேலியத் தொடரில் சுழல் வீரர்களான அஸ்வின், ஜடேயா இருவரினதும் பங்களிப்பு மிக அவசியம் என்று கருதப்படுவதால், இந்த அவசர மாற்றம் செய்யப்பட்டது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



## குறிஞ்சிக்குமரன் இறுதிக்குத் தகுதி

கரணவாய், ஜன. 25

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் கால்பந்தாட்டத் தொடரில், இறுதிக்கு முன்னேறியது குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் மோதியது. முதல்பாதியாட்டம் இரு அணியினருக்கும் சவாலாக அமைய, கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் நிறைவுக்கு வந்தது. இரண்டாம் பாதியில் கஜந்தன், கஜானந்தன் இருவரும் கோல்களைப் பதிவுசெய்ய 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது குறிஞ்சிக்குமரன் வி.கழகம். (ம-108)



# கிண்ணம் வெல்லுமா இலங்கை

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ரி-20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே கிண்ணத்தைக் கைப்பற்றும் என்பதால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. முடிவடைந்த டெஸ்ட் தொடரில் முழுமையான வெற்றிபெற்று மிக இலகுவாக கிண்ணம் வென்றது தென்னாபிரிக்கா.

தற்போது நடைபெற்றுவரும் ரி-20 தொடரின் முதலாவது ஆட்டத்திலும் தென்னாபிரிக்காவே வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்திலும் இலங்கை வென்றது. தென்னாபிரிக்கச் சுற்றுப் பயணத்தில் இலங்கைக்குக் கிடைத்த முதலாவது வெற்றியாகவும் அது அமைந்தது. ரி-20 தொடரின் இரு ஆட்டங்கள் முடிவடைந்துவிட்ட நிலையில், இரு அணிகளும் 1:1 என்றுள்ளன. மூன்றாவதும்-இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறுகிறது. இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி கிண்ணம் வெல்லும் என்ற காரணத்தால் எதிர்பார்ப்புக்கள் இரட்டிப்பாகியுள்ளன.

கடந்த ஆட்டத்தில் இலங்கை வென்றது. இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் அரைச்சதம் கடந்து வெற்றிக்கு வித்திட்டார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவானார். ஆனால் காயம் காரணமாக இன்றைய ஆட்டத்தில் அவர் களமிறங்கமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் இன்றைய ஆட்டத்துக்கு சந்திமல் தலைமை தாங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்தியூஸின் விலகல் துடுப்பாட்டம், பந்துவீச்சு என்று இரண்டிலும் இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பது மறுக்கமுடியாததே. (ம)

## மத்தியூஸ் 1,000

ரி-20 ஆட்டங்களில் தனது ஆயிரமாவது ஓட்டங்களை நிறைவுசெய்தார் இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களைக் குவித்தார். இந்த ஓட்டங்களின் உதவியுடன் அவர் ரி-20 ஆட்டங்களில் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். இலங்கையின் சார்பில் டில்சான், ஜெய வர்த்தன. சங்கா ஆகியோர் ஏற்கனவே குறித்த மைல்கல்லை அடைந்துள்ளனர். (ம)





## இந்தியாவை எதிர்கொள்வது மிகவும் கடினமான ஒன்றுதான்

### *என்கிறார் வோர்ணர்*

துணைக்கண்ட சூழ்நிலைகளுக்கேற்ப தயார் செய்து கொள்வது கடினம், இதனால் இந்தியாவில் விளையாடுவது எப்போதும் கடினமே என்று ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வோர்ணர் தெரிவித்தார்.

இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் புனேயில் பெப்ரவரி 23 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே வோர்ணர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவில் மனரீதியாக உறுதியோடு ஆட வேண்டும். எனவே இந்தியாவில் கிரிக்கெட் ஆடுவதைப் பற்றித் திட்டமிடும் முன்பாக- உடல், மன ரீதியாக நன்றாக தயாராக வேண்டும். இதன் மூலம் மட்டுமே இந்தியாவில் உள்ள கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டு ஆட்கொள்ள முடியும். சுழல்பந்தை எதிர்கொள்வதற்கான நுட்பங்கள் முதல், அதிக வெயிலைத் சமாளிக்கக் கூடிய தயார்ப்படுத்தல்கள் வரை அனைத்தும் துல்லியத் தன்மையுடன் இருந்தால் மட்டுமே இந்திய அணியை துணிச்சலுடன் எதிர்கொள்ளலாம். அந்த வகையிலேயே ஆஸ்திரேலிய வீரர்களின் அடுத்த நடவடிக்கை வேண்டும் என்று வோர்ணர் மேலும் தெரிவித்தார். (ம)

## இந்தியா - இங்கிலாந்து ரி-20 தொடர் நாளை



இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர் நாளை ஆரம்பமா கிறது. தொடரில் மூன்று ஆட்டங்கள் முதலாவது ஆட்டம் கான்பூ ரில் நாளையும், இரண்டாவது ஆட்டம் நாக்பூரில் எதிர்வரும் 29 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் பெங்களூரில் பெப்ரவரி முதலாம் திகதியும் நடைபெறவுள்ளன.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை 4:0 என்ற கணக்கிலும் ஒருநாள் தொடரை 2:1 என்ற கணக்கிலும் இந்தியா வென்றது. இதனால் ரி-20 தொடரையாவது இங்கிலாந்து கைப்பற்ற வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் உள்ளது. (ம)

## அரையிறுதியில் வீனஸ் வில்லியம்ஸ்



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் அமெரிக்க வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில், பன்னாட்டுத் தரப்படுத்தலில் 13ஆவது இடத்திலுள்ள வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து அனட்சியா விளையாடினார். முதலாவது செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவாக வென்றார் வீனஸ் வில்லியம்ஸ். இரண்டாவது செற்றில் நீண்ட போராட்டம் ஏற்பட்டது. தட்டுத்தடுமாறி ஒருவாறாக அந்த செற் 7:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வீனஸின் வசமாக, முடிவில் அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். 14 ஆண்டுகளின் பின்னர் முதல் முறையாக வினஸ் வில்லியம்ஸ் தற்போதே ஆஸ்திரேலியத் தொடரில் அரையிறுதிக்குச் செல்கிறார். (ம)

## இறுதி ஆட்டம் நாளை

ஆஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இறுதி ஒருநாள் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முடிவடைந்த நான்கு ஆட் டங்களிலும் ஆஸ்திரேலியா 3:1 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் நாளைய ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அது ஆஸ்திரேலியாவைப் பாதிக்காது. வெற்றிபெற வேண்டும் என்ற இக்கட்டான நிலை பாகிஸ்தானுக்கு உள்ளது. (ம)

# ரி-20 ஆட்டங்கள் மூலம் பந்துவீச்சு வலுப்பெறும்

## கோக்லியின் நம்பிக்கை



ரி-20 ஆட்டங்கள் மூலம் பந்துவீச்சு வலுப்பெறும் என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவரான விராட் கோக்லி.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

ரி-20 ஆட்டங்கள் அதிக அழுத்தத்தைத் தரவல்லவை. இறுதிக்கட்டங்களில் எப்போதும் பதற்றமான சூழ்நிலை இருக்கும். அத்தகைய சூழ்நிலையில் சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்தவும் பதற்றத்தை சமாளிக்கும் வல்லமையையும் ரி-20 ஆட்டங்கள் கற்றுத்தருகின்றன. இந்திய அணிக்கு இவை இரண்டும் அவசியமான தேவையே என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

**வெளிவந்துவிட்டது**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் FIRST FORM வெளிவந்துவிட்டது

யாழ்ப்பாண முகவர்
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

**021 222 9881**

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

இம்முறை O/L,A/L எழுதியோர், பல்கலைக்கு தெரிவானோர், தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

3 மாத சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 28.01.2017

1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

வாரநாள் வகுப்புகள் (செவ்வாய்,வியாழன்)
1.காலை 08-10 2.காலை 10-12

பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புற வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

**கோப்பாய் மாட்டிறைச்சிக்கடை விஷேட விலைக் குறைப்பு**

கோப்பாய்ச் சந்தியில் அமைந்துள்ள மாட்டு இறைச்சிக்கடை ஒன்றின் விசேட விலைக்குறைப்பு

விலை விவரம்

| | | |
|---|---|---|
| முள்ளு இறைச்சி | 1 Kg | 500/= |
| தனி இறைச்சி | 1 Kg | 600/= |
| பங்கு இறைச்சி | 2 Kg | 1000/= |
| குடல் | 1 Kg | 200/= |

விஷேட குறிப்பு:- சுகாதார பரிசோதகரின் அனுமதியில் நாம்பன் மாடுகளின் இறைச்சி மட்டுமே விற்கப்படும்.
(வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்)

செல்வகுமார்
075 639 9639, 076 673 4578
(J/285)
(11,17,18)

**தொழில் வாய்ப்பு**

யாழ் மாவட்டத்தில் இயங்கும் பிரபல தனியார் வைத்திய சாலைக்கு பின்வரும் பதவிகளுக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.RECEPTIONIST - வரவேற்பாளர்
2.PUBLIC RELATION OFFICER (PRO) - பொதுத் தொடர்பு அலுவலர்

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

1. O/L, A/L
2. வயதெல்லை - 21 வயதுக்கு மேல்
3. கணினி தொடர்பான அறிவு
4. ஆங்கிலத்தில் தேர்ச்சி விரும்பத்தக்கது (Fluent in Speaking & Writing)சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை 31.01.2017 இற்கு முதல் நேரிலோ தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்க முடியும்.

மனிதவள முகாமையாளர்
நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை
இல. 342, பலாலி வீதி, திருநெல்வேலி.
077 773 2892
E-mail: nchjaffna@gmail.com

# முகுருசாவும் வெளியேற்றம்



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டார் முன்னணி வீராங்கனையான முகுருசா.

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்துபெற்றரென்னிஸ்தொடராகஆஸ்திரேலியத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் முகுருசாவை எதிர்த்து அறிமுக வீராங்கனையான அமெரிக்காவின் வான்வெக் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் வான்வெக். அவர் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றையும் 6:0 என்று கைப்பற்றி 2:0 என்று நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.

பெண்கள்பிரிவில்செரீனா வில்லியம்ஸ்,வீனஸ் வில்லியம்ஸ் ஆகிய அனுப வீராங்கனைகளே தற்போது எஞ்சியுள்ளனர். இவர்களில் ஒருவர் கிண்ணம் வெல்லக் கூடிய சாத்தியங்கள் அதிகம் உள்ளன என்று கருதப்படுகிறது. (ம)

# கிண்ணம் வென்றது வளர்மதி அணி

யாழ்ப்பாணம், ஜன. 22

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் வளர்மதி அணி கிண்ணம் வென்றது.

அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில், வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வளர்மதி விளையாட்டுக் கழக 25:17, 29:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி நேர்செற் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம-23)



**மரண அறிவித்தல்**

**வேலுப்பிள்ளை அருள்ஞானசுந்தரம் J.P**
**(முன்னாள் உரிமையாளர், அருள் றேடர்ஸ் சுன்னாகம்.)**



டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தினைப் பிறப்பிடமாகவும், பாவலர் துரையப்பாபிள்ளை வீதி, தெல்லிப்பழை 133, செம்மணி வீதி, நல்லூர் ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அருள்ஞானசுந்தரம் 24.01.2017 செவ்வாய்க்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் இளையமகனும் காலஞ்சென்ற மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் பிரியதர்ஷினியின் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி 2017 Com) பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஞானமணி சதாசிவரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) காலஞ் சென்ற வேலுப்பிள்ளை ஞானரத்தினம் (ஓய்வு பெற்ற நிலஅளவையாளர்) மற்றும் மகிழ்மலர் நாகராசா ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற சதாசிவரத்தினம் (ஓய்வு பெற்ற நீதிபதி) மற்றும் சிவனேசம் (பிரான்ஸ்) காலஞ்சென்ற நாகராசா காலஞ்சென்ற அரிகரன் மற்றும் திவாகரன் (சுவிஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), ரவீகரன் (ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2017) புதன் கிழமை பி.ப. 3 மணியளவில் செம்மணி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 133, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

தகவல்: V.K.ரவீகரன்
(மைத்துனர் - ஆசிரியர்)
077 704 6968

# இலங்கைக்கு எதிராக வருகிறார் வில்லியர்ஸ்

இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்க அணியின் தலைவரான வில்லியர்ஸ் முழுமையாகப் பங்குபற்றுவார் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் ஜனவரி 28 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான தென்னாபிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக கடந்த ஐந்து மாதங்களாக ஓய்விலிருந்த வில்லியர்ஸ் இந்தத் தொடரில் முழுமையாகப் பங்குபற்றுவார் என்று அறிவிக்கப்பட்டது.

தென்னாபிரிக்க அணி விவரம் - வில்லியர்ஸ் (தலைவர்), அம்லா, பெக்கார்டின், குயின்டன் டி ஹொக், ஜே.பி. டுமினி, பிளாசிஸ், தாகிர், மில்லர், மொறிஸ், பார்நெல், நெக்டி, பெலுக்வயோ, பிரிட்டோரியஸ், ரபாடா, சாம்சி.

இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான இறுதி ரி-20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இன்றைய ஆட்டத்திலும் வில்லியர்ஸ் களமிறங்கக்கூடிய சாத்தியம் அதிகம் உள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.